# தமிழரசு

16-12-1992 ரூ.1



# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| வெள்ளப் பகுதிகளில் நிரந்தரப் பாதுகாப்புப் பணி | ... | 2 |
| தியாகத் திருநாளாம் கொடிநாள் | ... | 6 |
| ரூ.8,500 கோடி முதலீட்டில் தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள் | ... | 8 |
| உணர்ச்சிகளுக்கு ஆளாகிவிடாமல் அமைதி காப்பது நமது கடமை! — மாண்புமிகு முதல்வர் அறிக்கை | ... | 11 |
| தொட்டில் குழந்தைகளுக்கு முதல்வர் பெயர் சூட்டினார் | ... | 13 |
| அறிவொளி இயக்கம் | ... | 14 |
| டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் - தொடக்க விழா | ... | 17 |
| அதிசய மருந்து அதிமதுரம் | ... | 19 |
| பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | ... | 21 |
| மாணவர் பக்கம் | ... | 23 |
| கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் மருத்துவமனை | ... | 24 |
| வாழ்த்துக்கள் பிறந்த கதை! | ... | 26 |
| தமிழ்நாட்டை மேம்படுத்தும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் | ... | 27 |
| சிறுசேமிப்புத் திட்டங்களும் அரசு அளிக்கும் சலுகைகளும் | ... | 33 |
| நீங்க நல்லா இருக்கணும் | ... | 36 |
| வரலாறு படைத்த டாக்டர் ஆர்.கே. சண்முகனார் | ... | 41 |
| வேளாண் உற்பத்திக்கு முன்னோடித் திட்டங்கள் | ... | 45 |



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு: 2023

மார்கழித் திங்கள் - 1

மலர்:23 இதழ்:12

16-12-1992



# வெள்ளப் பகுதிகளில் நிரந்தரப் பாதுகாப்புப் பணி

புயல் வெள்ளச் சேதங்களைப் பார்வையிட மாண்புமிகு பிரதமர் திரு. பி.வி. நரசிம்மராவ் அவர்கள் டெல்லியிலிருந்து சென்னைக்கு 1.12.92 பகல் 12.45 மணிக்கு வந்துசேர்ந்தார்.

சென்னை விமான நிலையத்தில் அவருக்குச் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டது. மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், மாண்புமிகு புதுவை முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், பிரமுகர்கள் ஆகியோர் பிரதமரை அன்புடன் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து முக்கியப் பிரமுகர்களுக் கான ஓய்வு அறையில், மாண்புமிகு பிரதமர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் சந்தித்து 30 நிமிட நேரம் பேசினார்கள்.

தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதம் குறித்த அறிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் வழங்கினார். அதில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது:

### 1992 நவம்பரில் ஏற்பட்ட புயல் வெள்ளம்

13.11.92 அன்று தமிழகத்தில் வீசிய பெரும் புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்டு 238 பேர் மரணமடைந்தனர். 1,71,135 குடிசைகள் சேதமடைந்தன. 2,53,542 எக்டேரில் பயிரிடப் பட்டிருந்த பயிர்கள் நாசமாயின. சாலைகளுக்கும், வாய்க்கால்களுக்கும் ஏற்பட்ட சேத மதிப்பு பல கோடிகளாகும். இப்புயலின் மொத்தச் சேத மதிப்பு ரூ.530.04 கோடியாகும்.

இதன் விவரங்கள், 23.11.92 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் புதுடில்லியில் மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் அளித்த மனு, ஒளிப்பதிவு நாடா (வீடியோ கேசட்) புகைப்படத் தொகுப்பு ஆகியவற்றில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி போன்ற தென் மாவட்டங்களில் எப்போதோ ஒரு முறை இதுபோன்ற கடும் புயல் வீசுகிறது. 1891-ஆம் ஆண்டு முதல் புள்ளி விவரங்களை அலசிப் பார்ப்போமேயானால், இந்த 3 மாவட்டங்களிலும் 4 முறைதான் - அதுவும் நவம்பரில் தான் (1912 1923, 1978 1992) இங்கு புயல் வீசியுள்ளது.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த 3 மாவட்டங்கள் தவிர, கீழ்க்கண்ட 7 மாவட்டங்களில் அடிப்படை வசதிகளைக் கடுமையாகச் சேதப்படுத்தி, நிறைய உயிர்களைப் பலி கொண்டுள்ளது.

மதுரை, நீலகிரி, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகப்பட்டினம்-காயிதே மில்லத், சென்னை.

தமிழ்நாட்டிலுள்ள 22 மாவட்டங்களில் தர்மபுரி தவிர அனைத்து மாவட்டங்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு அக்டோபர் திங்களில் பெய்த பலத்த மழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால், கன்னியா

மதுரை, திண்டுக்கல்-அண்ணா மாவட்டங்களில் சிலர் இறக்க நேரிட்டது; மேகமலையில் 41 பேரும், கொடைக்கானலில் 9 பேரும் இறந்தார்கள்.

அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடியாக நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குத் தலா 5 கிலோ அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், ஒரு வேட்டி, ஒரு சேலை ஆகியவைகளும் முழுவதும் சேதமடைந்த குடிசைக்கு ரூ.500- ம் ஓரளவு சேதமடைந்த குடிசைக்கு ரூ.250-ம், இறந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.10,000-ம் வழங்கினார்கள்.



குமரி மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட சேதத்தின் மதிப்பு ரூ.5.64 கோடியாகும். இதற்காக உடனடி நிவாரண நிதியாக மாநில அரசு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது.

புயலால் மரணமடைந்தவர்களின் வாரிசுகளுக்குத் தலா ரூ.10,000 வழங்குவதற்காக, பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.20 இலட்சம் பயன்படுத்தப்பட்டது.

தாமிரபரணி ஆறு பெருக்கெடுத்து ஓடியதால், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள விக்கிரமசிங்கபுரம் என்ற கிராமத்தில் ஆறு குடும்பங்களைச் சார்ந்த 25 நபர்கள் மரணமடைந்துள்ளனர். நிலச்சரிவு ஏற்பட்டதனால்

அகில இந்திய வானொலி நிலையமும், வருவாய் நிர்வாகமும் குறித்த நேரத்தில் எச்சரிக்கை விடுத்ததன் காரணமாகப் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டன. உதாரணமாக - தாமிரபரணி யாற்றின் கொள்ளளவு 15 ஆயிரம் கன அடி. அணைகளும், நீர்த்தேக்கங்களும் நிரம்பி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது 1,50,000 கனஅடி நீர் ஓடிக்கொண்டிருந்தது. அதாவது ஆற்றின் கொள்ளளவைப் போல் இது 10 மடங்காகும்.

இவ்வெள்ளத்தில் தாமிரபரணியாற்றின் கரையிலிருந்த 2,200 குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டன. அவற்றில் குடியிருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டதால் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.



தனுஷ்கோடி மூழ்கிவிடுமுன்பாக அங்கிருந்த 132 நபர்கள் இராமேஸ்வரத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

திட்ட விவாதங்கள் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ள டெல்லி சென்றிருந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னை திரும்பியவுடன் 16,17, 18.11.92 ஆகிய தேதிகளில் புயலால் மிகவும் பாதிக்கப்பட்ட சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய்தார். அவர் மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறி, நிவாரண உதவிகளை நேரில் வழங்கி; வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தார்.

பழுதடைந்த அடிப்படை வசதிகளைச் சீர்படுத்தவும், விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் உதவிகள் வழங்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில், கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டது.

★ 17.11.92 அன்று மாவட்டங்களுக்காக ரூ.10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 21.11.92 அன்று சாலைகளையும் பாசன ஏரிகளையும் சீர்படுத்த ரூ.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 22.11.92 அன்று 1,43,128 சிறு, நடுத்தர விவசாயிகளுக்கும் 45,902 மற்ற விவசாயிகளுக்கும் மானியத் தொகையாக ரூ.8.6 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 22.11.92 அன்று வாழை, காய்கறிகள், உருளைக்கிழங்கு, ரப்பர் ஆகியவைகளை 18,871 எக்டேர் நிலத்தில் பயிரிட்டு, இழந்த, சிறு, நடுத்தர விவசாயிகளுக்கு மானியத் தொகையாக ரூ.4.28 கோடி வழங்கப்பட்டது.

★ 22.11.92 அன்று, மணலில் புதைந்த 2,500 எக்டேர் நிலத்தைச் சீர்படுத்தவும் 500 பாசனக் கிணறுகளைத் தூர் எடுக்கவும் ரூ.3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ 26.11.92 அன்று படகுகளையும், மீன்பிடி வலைகளையும் இழந்த மீனவர்களுக்கு மானியத் தொகையாக ரூ.8.21 கோடி வழங்கப்பட்டது. 1,920 படகுகள் முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன. 444 படகுகள் ஓரளவு சேதமடைந்தன. 1,522 கட்டுமரங்கள் முழுவதுமாகச் சேதமடைந்துள்ளன.

★ கடல் மீனவர்களுக்குத் தேசிய சேமிப்பு மற்றும் நிவாரண நிதியின் திட்டத்தின் கீழும், மீனவர்களுக்கான தேசிய நிதியிலிருந்தும் 82,000 மீனவர்களுக்கு 25.11.92 அன்று ரூ.6.13 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நோயிலிருந்து விலங்குகளைக் காப்பாற்றத் தேவையான மருந்துப் பொருட்களை வழங்க 26.11.92 அன்று ரூ.30 இலட்சம் வழங்கப்பட்டது.

★ துணி, அரிசி, மண்ணெண்ணெய், குடிசை சீரமைப்பு ஆகியவைகளுக்கான உடனடி நிவாரணத் தொகையாக ரூ.8 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம், புயல் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக அரசு ரூ.68.52 கோடி ஒதுக்கியுள்ளது.

புயல் தடுப்புப் பணிகளுக்காக உலக வங்கித் திட்டம் ஒன்றைத் தயாரித்து மத்திய அரசிடம் வழங்குவோம். 1990 மே திங்களில் கடும் புயல் ஆந்திரப் பிரதேச மாநிலத்தைத் தாக்கியபோது ஏற்பட்ட சேதங்களுக்காக நிதியுதவி கோரி, உலக வங்கியை அணுகியதுபோல, இப்பொழுதும் மத்திய அரசு உலக வங்கியை அணுக இது உதவும்.

23.11.1992-அன்று மாண்புமிகு பிரதமர் அவர்கள், சீரழிவு நிவாரண நிதியிலிருந்து (Calamity Relief Fund) மூன்று காலாண்டுத் தவணைத் தொகை முன்பணமாக ரூ.21.9 கோடி வழங்கியுள்ளார்.

வெள்ளச் சேதங்கள் மிகவும் பயங்கரமாக ஏற்பட்டுள்ளன. அவை, 9-வது நிதிக்குழு அறிக்கையில் கண்டுள்ள விளக்கத்திற்குச் சரியாகப் பொருந்தியுள்ளன. எனவே, தமிழ்நாடு மைய அரசுக்கு வைத்துள்ள கோரிக்கையைத் தனி கவனத்துடன் பரிசீலித்து, அதில் கேட்டுள்ள ரூ.530.04 கோடியை உதவித் தொகையாக விரைவாக வழங்க வேண்டும்.

பிறகு நிருபர்களைச் சந்தித்து மாண்புமிகு பிரதமர் அவர்கள் கூறியதாவது:

'தமிழகத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதம் பற்றி இங்கு விவாதித்தோம். நிவாரணம் கேட்டுத் தமிழக அரசு வெள்ளச் சேத அறிக்கை கொடுத்துள்ளது - தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல் வெள்ளச் சேதம் பற்றித் தமிழக அரசு சார்பில் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

'நவம்பர் மாதம் என்பது பயங்கரம் விளைவிக்கக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கடலோரப் பகுதிகள் புயலால் பாதிக்கப்படு



கின்றன. இந்த ஆண்டு தமிழ்நாட்டைத் தாக்கி யுள்ளது.

இந்தியாவில், கடலோரப் பகுதியில் அதிக மான அளவு புயல் வெள்ளச் சேதம் ஏற்படுவதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து இங்கு விவாதித்தேன்.

மத்திய மாநில அரசுகள் இணைந்து நிரந்தர பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு செயல் படுத்துவது பற்றி ஆலோசனை நடத்தப்பட்டது. இதற்கு மத்திய அரசு முடிந்த அளவு உதவி செய்யும்'.

பத்திரிகை நிருபர்கள் கூட்டத்திற்குப் பிறகு வெள்ளப் பகுதிகளைப் பார்வையிட மாண்புமிகு பிரதமர் அவர்கள் புறப்பட்டார். அவருடன் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களும், மாண்புமிகு புதுவை முதல்வர் திரு. வைத்தியலிங்கம் அவர் களும் உடன் சென்றனர்.

முதலில் பாண்டிச்சேரி பகுதியில் சேதத்தைப் பார்வையிட்டார். அடுத்து, மதுரை, காமராசர், இராமநாதபுரம், சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன், கன்னியாகுமரி மாவட்டங்களில் விமானத்தில் தாழ்வாகப் பறந்தபடியே வெள்ளச் சேதப் பகுதிகளைப் பார்வையிட்டனர். பாதிக்கப் பட்ட பகுதிகள் பற்றி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு விளக்கினார்கள்.

தமிழ்நாட்டில் வெள்ளச் சேதங்களைப் பார்வை யிட்ட பின்னர் அவர்கள் சென்ற விமானம் திருவனந்தபுரம் போய்ச் சேர்ந்தது. இரவு 7.25 மணிக்குத் தனி விமானத்தில் முதல்வர் சென்னை திரும்பினார்.

விமான நிலையத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிருபர்களிடம் கூறியதாவது:-

'வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மேகமலைப் பகுதி, சிதம்பரனார், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் கடும் சேதம் அடைந்த பகுதிகளை நானும் பிரதமரும் விமானத்தில் பறந்து சென்ற படியே பார்த்தோம். நாங்கள் நன்றாகப் பார்ப் பதற்கு வசதியாக 2 ஆயிரம் அடி உயரத்தில் - அதாவது மிகவும் தாழ்வாக விமானம் பறந்து சென்றது.

இந்தச் சேதத்தைப் பார்வையிட்ட பிரதமர் அவர்கள், உடனடி நிவாரண உதவிகளுக்காக ரூ.50 கோடி வழங்குவதாக என்னிடம் தெரி வித்தார்.

தென் மாவட்டங்களில் வெள்ளச் சேத விவரங்கள் பற்றிப் பிரதமரிடம் தெளிவாக, விவரமாகக் கூறியிருக்கிறேன்.

இது தவிர, தமிழ்நாடு அரசு ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதி களின் புனரமைப்பு, சீரமைப்பு, கட்டுமானப் பணிகளுக்காக ஒரு திட்டத்தைத் தயாரித்து, உலக வங்கியின் நிதி உதவியினைப் பெற அனுப்ப இருக்கிறது. இந்த 1000 கோடி ரூபாய் புனரமைப் புப் பணி திட்டத்துக்கு உலக வங்கியின் உயர் அதிகாரிகளோடு பிரதமர் அவர்களே தொடர்பு கொண்டு பேசி, நிதி உதவி பெற்றுத்தருவதாக என்னிடம் தெரிவித்திருப்பது எனக்கும் பெருமகிழ்ச்சியளிக்கிறது.

'அதோடு வெள்ளச் சேதங்கள் பற்றி மதிப்பீடு செய்ய, மத்திய அதிகாரிகள் சென்னை வரு கிறார்கள். இதுகுறித்து அவர்களும் மத்திய அரசுக்கு அறிக்கை அளிப்பார்கள்.''

- என். இளங்கோ.



தியாகத் திருநாளாம்

# கொடி நாள்

## முதல்வர் உரை

**மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொடிநாளினை யொட்டி 7.12.92 அன்று தொலைக்காட்சியிலும் வானொலியிலும் ஆற்றிய உரை விவரம் வருமாறு:**

என் அன்பிற்குரிய தமிழகப் பெருமக்களே!

நாடெங்கும் இன்று கொடிநாள் கொண்டாடப்படுகிறது. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்து, நமது தாய்த் திருநாட்டிற்குப் பெருமை சேர்க்கும், சீரிய பாதுகாப்புப் பணியில் அயராது ஈடுபட்டிருக்கும், நமது முப்படை வீரர்களின் புகழினை, நாம் போற்றிப் பாடும் நன்னாள் தான், 'கொடிநாள்'.

தங்களுடைய சொந்த நலனைக் கருத்தில் கொள்ளாமல், நாட்டு நலனைப் பாதுகாக்கும் ஒரே இலட்சியத்தோடு, இரவென்றும் பகலென்றும் பாராமல், பனியென்றும் மழையென்றும் தயங்காமல், மலை முகட்டிலும், ஆகாயத்திலும், ஆழ் கடலிலும், வீரம் விவேகம் மற்றும் பொறுப்புணர்வோடு கடமையாற்றித் தம்முயிர் ஈந்து நம்முயிர் காக்கும் தியாக மறவர்கள் நமது முப்படை வீரர்கள். நமது அன்பிற்கும் பாராட்டிற்கும் உரிய, முப்படை வீரர்களின் எண்ணற்ற தியாகச் செயல்களை நினைவு கூர்ந்து, அவர்கள் அனைவருக்கும் நமது நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக் கொள்ளும் தியாகத் திருநாள் தான், இந்த கொடிநாள்!!

நமது நாட்டின் எல்லைகளைத் தொடர்ந்து பாதுகாத்து, அந்நியரின் ஆதிக்கத்தையும் எதிரிகளின் ஊடுருவல்களையும் முறியடிக்கும் முப்படை வீரர்களின் பணி, அவைகளோடு மட்டும் நின்று விடுவதில்லை; நாட்டை அழிக்க முயலும் தீய சக்திகள் நம் நாட்டில் தலைதூக்க முற்படும்போதெல்லாம், அவற்றை அடக்கவும், அழிக்கவும் நமது முப்படை வீரர்கள் தான் உதவுகிறார்கள். மேலும், இயற்கையின் சீற்றங்களால் சிக்கித் தவிக்கும் மக்களைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டு, பாதிக்கப்பட்ட மக்களை அபாயங்களிலிருந்து மீட்டு, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதும் முப்படை வீரர்களே.

வீரத்திற்கு வணக்கம் செலுத்தி, வீரர்களை ஊக்குவிக்கும் பழம் பெரும் பண்பாடு கொண்டது, நம் இந்தியத் திருநாடு; குறிப்பாக, போரில் கணவனை இழந்த தலைவி, பால்வடியும் முகம் கொண்ட தன் மகனுக்கு, வேல் தந்து போருக்கு அனுப்பி, பரணி பாடிய வீர வரலாற்றினைக் கொண்டது, நம் தமிழ்நாடு, அப்படிப்பட்ட வீர வரலாற்றின் விளை நிலமாக இருக்கும் நம் இந்திய நாடு காக்கும் நற்பணியில் தங்களின் இன்னுயிரை இழந்த படை வீரர்களின் குடும்பங்களுக்கு, அரணாகவும், ஆதரவாகவும் இருக்க வேண்டியது நமது கடமை ஆகும். இவர்களது வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளிலும் துன்பங்களிலும், நாம் பங்கு கொண்டு, அவர்களுடைய துயரினைத் துடைத்திட



ஓடோடிவர வேண்டியது தான், நமது மனிதாபிமானத்தின் வெளிப்பாடு. கொடிநாள், அவர்கள் அனைவருக்கும் உதவிடும் நல்வாய்ப்பினை, நமக்கு வழங்கியுள்ளது.
நாடு காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள நமது முப்படை வீரர்களுக்கும், அப்பணியிலிருந்து ஓய்வுபெற்ற முன்னாள் படை வீரர்களுக்கும், அரசு பல்வேறு உதவிகளைச் செய்துவருகின்றது.
ஒவ்வோர் ஆண்டும் வீரர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, நன்கொடை வழங்குவதில் தமிழ்நாடே முதன்மையாக இருந்து வருகிறது.
1991-ஆம் ஆண்டு கொடிநாள் நிதியாக 1.75 கோடி ரூபாய் தமிழ்நாட்டு மக்கள் வாரி வழங்கியுள்ளார்கள். 1992-ஆம் ஆண்டிற்குரிய கொடிநாளில், கொடிநாள் நன்கொடை, முந்தைய வசூல் சாதனைகளை எல்லாம் முறியடிக்கும் என்பதில், எனக்குச்சிறிதும் சந்தேகமில்லை.
இவ்வாறு மக்கள் மனமுவந்து அளிக்கும் தொகைகள், உடல் ஊனமுற்ற வீரர்களுக்கும், போரில் தலைவனை இழந்த குடும்பங்களுக்கும், வெற்றிவாகை சூடித் திரும்பி, தற்போது வயது முதிர்ந்து ஓய்வு பெற்ற வீரர்களின் நலனுக்காகவும், உதவித்தொகையாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.
இத்தகையோரின் குழந்தைச் செல்வங்களின் படிப்பிற்கும் உதவித்தொகை வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. பெட்டிக்கடை வைப்பதற்கு, மாவரைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம் போன்றவை வாங்குவதற்கு நிதி உதவி அளித்து, அவர்கள் அதன்மூலம் தாமே வருவாய் ஈட்டிட வழிவகுக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. தொழில்கள் தொடங்க, அவர்கள் வங்கிகளிடம் இருந்து பெறும் கடனுக்கு, வட்டி மானியமும் வழங்கப்படுகிறது.
சிறுநீரக மாற்றம், இருதய அறுவைச் சிகிச்சை போன்ற பெரிய மருத்துவ சிகிச்சைகளுக்கு, 20,000 ரூபாய் வரை இந்நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. தொழுநோய், புற்றுநோய் ஆகியவற்றால் துன்புறுவோருக்கும், கண்பார்வை இழந்தவர்களுக்கும், மாதாந்திர நிதியுதவி அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் அளிக்கப்படுகிறது. உலகப் போரில் பணியாற்றி தற்போது ஆதரவற்ற வயதான முன்னாள் படை வீரர்களுக்கு, மாதம் 150 ரூபாய் வீதம், அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் வழங்கப்படுகிறது.
அவர்களது தேவைகளைப் பொறுத்து அவரவருக்கு உரிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இந்த வகையில் அவர்களுக்கு உதவியாகச் சென்ற ஆண்டு மட்டும் 1.45 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதனால் 11,340 பேர் உதவிகள் பெற்றுப் பயனடைந்துள்ளனர்.
நாட்டினைக் காத்த நல்ல வீரர்களின திறமையான சேவையை, மேலும் பயன்படுத்த வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, 'கோவில் பாதுகாப்புப் படை' ஒன்றினை அமைக்க, அண்மையில் நான் ஆணையிட்டுள்ளேன். இதன் மூலம், நமது பெருமை மிகுந்த கோவில்களைப் பாதுகாக்கும் பணியில், 3,000 முன்னாள் படை வீரர்கள் மீண்டும் பணியாற்றும் வாய்ப்புப் பெறுகிறார்கள் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
முப்படை வீரர்களுக்குப் போர்க்காலத்தில் புரிந்த வீர சாகசச் செயலுக்காகவும், பணிக்காலத்தில் செய்த பாராட்டத்தக்க சேவைக்காகவும், மத்திய அரசு 'வீர விருது' மற்றும் 'சிறந்த சேவைக்கான பதக்கங்கள்' வழங்கிவருகிறது. அவ்வாறு பதக்கம் பெறும் வீரர்களில், ஒருசில குறிப்பிட்ட விருதுகள் பெற்றவர்களுக்கு மட்டுமே, மாநில அரசு புகழ்க் கொடையாகப் பண முடிப்பு வழங்கி வந்தது.
இதை என் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், 1947-ஆம் ஆண்டு முதல் விருது பெற்ற தமிழ்நாட்டு வீரர்கள் அனைவரும், தமிழக அரசு வழங்கும் புகழ்க்கொடை பண முடிப்புப் பெறும் வகையில், தேவையான ஆணைகளை இந்த ஆண்டு விடுதலை நாளில் வெளியிட்டேன்.
இதனை, அன்று கோட்டையில் நிகழ்த்திய எனது உரையிலும் குறிப்பிட்டேன்.
முன்னாள் படை வீரர்கள் நலனில் மிகுந்த அக்கறையுடன், கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு, வீட்டு வசதிக்கான இட ஒதுக்கீடு, மருத்துவமனைகளில் சலுகை, தொழிற்கூடங்களில் ஒதுக்கீடு, வேலைவாய்ப்பில் சிறப்புரிமை போன்ற பல உதவிகளை அரசு வழங்குகிறது. அரசின் முயற்சியோடு இணைத்து, நமது முழு ஈடுபாட்டினைக் காட்டி, வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடிடுவோம். தமக்கென வாழாமல், பிறர்க்கென வாழும் இந்தத் தியாக மறவர்களின் தன்னலம் கருதாப் பணிக்கு நாம் நன்றி செலுத்துவோம்; முப்படை வீரர்களின் நலன் காப்போம்! கொடிநாள் நிதிக்கு வாரி வழங்கிடுவோம்! இந்த முயற்சிகளுக்குத் தமிழக மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும், உறுதுணையாக இருக்க வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.
நன்றி, வணக்கம்.

# ரூ 8,500 கோடி முதலீட்டில் தமிழகத்தில் புதிய தொழிற்சாலைகள்

**மா**ண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1992 டிசம்பர் திங்கள் 4,5 தேதிகளில் தொழிலதிபர்களிடமும், தொழில் முனைவோர்களிடமும் பேசி மாநிலத்தின் பலவேறு திட்டங்களில் முதலீடு செய்வதற்கான பல்வேறு தொழில் திட்டங்ளுக்கு ஒப்புதல் அளித்தார்கள். இந்த 2 நாள் கூட்டத்தில் தனியார் துறையில் ரூ.5400 கோடி செலவில் மின் திட்டங்கள் தொடங்கப்படுவது உட்பட மொத்தம் ரூ.8,500 கோடி முதலீட்டில் தொடங்கப்படவுள்ள 27 புதிய தொழிற்சாலைகளுக்கு ஒப்புதல் அளித்தார்.

இந்தக் கூட்டத்தில் தலைமைச் செயலர் திரு. டி.வி.வெங்கட்ராமன், தொழில்துறை முதன்மைச் செயலர் திரு. சி. இராமச்சந்திரன், டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. எஸ். அர்விந்த், முதல்வரின் செயலர் எஸ்.ஆர். கருப்பண்ணன், தமிழ்நாடு மின்வாரியத் தலைவர் திரு. என். ஹரிபாஸ்கர் உட்பட அரசின் மூத்த அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

**புதிய தொழிற் கொள்கை**

தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கும் ஒரு ஒருங்கிணைந்த புதிய தொழிற் கொள்கையை மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 1992- ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அறிவித்தார். இந்தக் கொள்கையில் கவர்ச்சிகரமான சலுகைகள், அடிப்படை வசதி மேம்பாடுகளுக்கு முன்னுரிமை, தொழில் உறவுகளில் புதிய கொள்கை, தொழிலாளர் நலம் என அனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் வெளியிலிருந்தும், நமது நாட்டின் வெளியிலிருந்தும் முதலீடுகளைக் கொண்டு வந்து பெரிய தொழிற்சாலைகளை நிறுவ ஊக்கமளிக்கப்படும் என்று இந்தக் கொள்கை உறுதியளிக்கிறது. புதிய தொழில் கொள்கையின் முக்கியமான அம்சங்களையும் சலுகைகளையும் அனைவருக்கும் பரப்ப அரசும் மற்ற நிறுவனங்களும் கடந்த சில மாதங்களாகத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.



**சமீபத்திய திட்டங்கள்**

புதிய கொள்கை தொழில் அதிபர்களிடமிருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றுள்ளது. கடந்த இரு திங்களில் பல புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. ஓசூரில் ரூ.675 கோடி முதலீட்டில் தொடங்கப்படவுள்ள அசோக் லேலண்ட் திட்டம், சேலம் மாவட்டத்தில் ரூ.200 கோடி முதலீட்டில் எல்.எம். டபிள்யூவின் இரும்புத் தொழிற்சாலை ரூ.800 கோடி செலவில் வெளிநாட்டில் வாழும் இந்தியர் நெய்வேலியில் துவங்கவிருக்கும் நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தித் திட்டம் ஆகியவை, கடந்த சில மாதங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்களாகும். ரூ.100 கோடி முதலீட்டில் 4 புதிய ஏற்றுமதியை மையமாகக் கொண்ட நிறுவனங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தியா-சிங்கப்பூர் வர்த்தகம் நடைபெற தகுந்த ஒரு இடத்தை தேர்ந்தெடுத்துள்ளது. சிங்கப்பூரிலிருந்து முதலீடுகளைக் கவரத்தக்க வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**கூட்டம்**

தமிழக அரசு அறிவித்துள்ள புதிய தொழில் கொள்கையின் அடிப்படையில் மாநில நிறுவனங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக நிறைய புதியத் திட்டங்களான முன்மொழிவு வந்திருப்பதை, 15.10.92 அன்று நடைபெற்ற தொழில்துறை ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனித்து மிகவும் மகிழ்ச்சியடைந்தார். புதிய முதலீடுகளுக்கு மிகவும் ஏதுவான இடமாக தமிழகம் மலர்ந்து வருவது குறித்து மகிழ்வடைந்தார். இந்தப் **பின்னணி**யில்தான், குறிப்பிட்ட சில திட்டங்களின் முன் வரையோடு அரசினை அணுகியவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சந்தித்து அவர்களுடன் விவாதித்து அதே இடத்தில் ஒப்புதலையும் அளிக்க முன்வந்தார். இந்த 2 நாள் விவாதத்தின்போது 24 தொழிலதிபர்களைச் சந்தித்து அவர்களது திட்டங்களுக்கு ஒப்புதல்

அளித்தார். ஆரம்பக் கட்டத்திலுள்ள சில திட்டங்களுக்குக் கொள்கை அளவில் ஒப்புதல் அளித்தார். பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் தொடங்குவதில் உள்ள சலுகைகளையும், பெண்களை அதிகமாக வேலைக்கு அமர்த்தும் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சலுகைகளையும் கவனத்தில் கொண்டு அத்தகைய தொழிற்சாலைகளைத் தொடங்க முதல்வர் வலியுறுத்தினார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்தத் திட்ட மதிப்பீடு ரூ.8,500 கோடியாகும். இதனால் 8,000 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 12,000 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்புதல் அளித்த திட்டங்களுக்கு மற்ற துறையினர் உடனடியாக எவ்வித தாமதமுமின்றி ஒப்புதல் அளித்தாக வேண்டும் என அரசு நிறுவனங்களுக்கும் துறையினர்களுக்கும் முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார். ஒப்புதலுக்கு வரும் திட்டங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து இதுபோன்று மேலும் கூட்டங்களை நடத்த முதல்வர் உத்தேசித்துள்ளார்.

**புதியத் திட்டங்கள்**

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கீழ்க்காணும் தொழிலதிபர்களை தனித்தனியே சந்தித்து அவர்களுடையத் திட்டங்களைப் பற்றி விவாதித்தார்.

1. திரு. ஜெயரத்தினவேலு - கோக் ஓவன் திட்டம் - முதலீடு ரூ.140 கோடி.

2. திரு. தினேஷ் டால்மியா - எக்ஸ்ட்ரா நியூட்ரல் ஆல்கஹால் - முதலீடு ரூ.37 கோடி.

3. திரு. தியாகராஜ செட்டியார் - மெம்ப்ரேன் கீ ஸ்விட்சஸ் - முதலீடு ரூ.12 கோடி.

4. திரு. எப்.ஜே. ஹேரிஸன் - ஆட்டோமொபைல் டயர்ஸ் - முதலீடு ரூ.400 கோடி .

5. திரு. புன்னூஸ் (எ) அப்பச்சன் - தீம் பார்க் - முதலீடு ரூ.15 கோடி.

6. திரு. ஜி.எஸ். கேசவமூர்த்தி- (அ) வன்னிலின்-முதலீடு ரூ.30 கோடி (ஆ) போட்டோகாயிங் கெமிக்கல்ஸ்- முதலீடு ரூ.25 கோடி.



★ அன்பும், சத்தியம் என்கிற வாய்மையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை

—காந்தியடிகள்

7. திரு. ப. மருதைப்பிள்ளை - ஷூ அப்பர்ஸ் - முதலீடு ரூ.13 கோடி.

8. திரு. ராம் வி. தியாகராஜன் - என். புடானல் - முதலீடு ரூ.20 கோடி

9. திரு. எம்.வி. சுப்பையா - (அ) அம்மோனியா ஸ்டோரேஜ் டெர்மினல் - முதலீடு ரூ.25 கோடி

(ஆ) வினில் அஸிடேட் மானோமர் முதலீடு ரூ.125 கோடி

10. திரு. எஸ்.எஸ். போதார் - பாலியெஸ்டர் பிலமெண்ட் யார்ன் - முதலீடு ரூ.100 கோடி.

11. திரு. ஏ.சி. முத்தையா - காஸ்டிக் சோடா காஸ்ட் பொருள்கள் - முதலீடு ரூ. 135 கோடி.

12. திரு. என். சங்கர் - சின்தெடிக் ரூடைல் - முதலீடு ரூ.235 கோடி.

13. திருமதி மல்லிகா சீனிவாசன்- இன்ட்ரா ஆக்குலர் லென்ஸ் - முதலீடு ரூ.15 கோடி

14. திரு. ஜான் ஹார்மிஸ் - மின் உற்பத்தித் திட்டம் - முதலீடு ரூ.3,000 கோடி

15. திரு. விஜயகுமார் ரெட்டி - மின் உற்பத்தித் திட்டம் - முதலீடு ரூ.1,600 கோடி.

16. திரு. ஜி.எம். சுவாமி - மின் உற்பத்தித் திட்டம் - முதலீடு ரூ.800 கோடி.

17. திரு. எச். பிரநேசர் - (அ) சிட்ரிக் ஆசிட் - முதலீடு ரூ.100 கோடி.
(ஆ) பாலிமெர் கெமிக்கல்ஸ் - முதலீடு 1,000 கோடி.

18. டாக்டர் கே. அஞ்சிரெட்டி - மருந்து பொருட்கள் - முதலீடு ரூ.70 கோடி.

19. திரு. என்.வி. சௌத்ரி - பல்க் டிரக்ஸ் இன்டெர்மீடியட்ஸ் - முதலீடு ரூ.20 கோடி.

20. திரு. ரவி. என். ருயா - எண்ணெய் கண்டுபிடிப்பு மற்றும் உரத் தொழிற்சாலை - முதலீடு ரூ.1,000 கோடி.

21. திரு. பாவன் போதார் - பிளாஸ்டிக் தொழிற்சாலை-முதலீடு ரூ.32 கோடி.

22. திரு. கமால் ஆஸ்வல் - கெமிக்கல்ஸ் - முதலீடு ரூ.100 கோடி.

23. திரு. பீட்டர் ஜெ.எல்.பிரபு செருப்புத் தொழிற்சாலை - முதலீடு ரூ.11 கோடி.

24. திரு கே. ஜெகதீஸ் ரெட்டி- வீவிங் மில் - முதலீடு ரூ.16 கோடி.

மொத்தம் ரூபாய் 8,486 கோடி.




புதிய தொழிற் கொள்கையில் தெரிந்தெடுக்கப்பட்ட முன்னுரிமை தொழில்கள் சம்மந்தப்பட்ட திட்டங்களே இதில் பெரும்பாலும் அடங்கி உள்ளன. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழகத்தில் தொழில் துவங்க ஆர்வம் காட்டியவர்களில் பாதிப்பேர் மகாராஷ்டிரா, ஆந்திரா, கர்நாடகா, பஞ்சாப் போன்ற



**மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் முதலமைச்சரின் நிவாரண நிதிக்காகச் சேரன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் சார்பாக ரூ.4 இலட்சத்து 5 ஆயிரத்திற்கும், சேரன் பொறியியல் கழக ஊழியர்கள் சார்பில் ரூ.16 ஆயிரத்து 80- க்கும் காசோலைகள் வழங்கினார் (30.11.92).**

வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவிலேயே தொழில் தொடங்க சிறந்த சூழ்நிலையை கொண்டுள்ள மாநிலம் தமிழ்நாடு என்பதையே இது குறிக்கின்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் நான்கு பேர் வெளிநாட்டைச் சார்ந்தவர்கள் - அமெரிக்காவிலிருந்து இருவர், ஜெர்மனியிலிருந்து ஒருவர், இங்கிலாந்திலிருந்து ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

தாங்கள் முன்மொழிந்த திட்டங்கள், அரசு நிறுவனங்களால் விரைவாகப் பரிசீலிக்கப்பட்டு, முதல்வர் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்து தொழிலதிபர்கள் மிகவும் திருப்தியடைந்துள்ளனர். பேயர் இந்தியா (Bayer India) கம்பெனியின் நிர்வாக இயக்குநர் திரு. பிரநேசர், தமிழ்நாட்டில் இவ்வளவு விரைவாக ஒப்புதல் கிடைத்தமைக்கு மிகவும் மகிழ்ச்சியடைந்தார். நாட்டிலேயே மிகவும் கவர்ச்சிகரமான முதலீட்டுச் சூழ்நிலை தமிழ்நாட்டிலிருப்பதால், தாங்கள் முதலீடு செய்வதற்கு தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்ததற்காக அமெரிக்காவைச் சார்ந்த திரு. ஹேரிசன், திரு. ஜான் ஹார்மிஸ் ஆகியோர் முதல்வரிடம் தெரிவித்தனர். அவர்களது திட்டங்கள் வேகமாக பரிசீலிக்கப்பட்டு, ஒப்புதல் அளிக்கப்பட்டது தங்களை மிகவும் கவர்ந்ததாகக் கூறினர். இங்கிலாந்து நாட்டின் ஜி.டி.எஸ். பேப்ரிகேடர்ஸ் நிறுவனத்தின் உதவியோடு 100 சதவிகிதம் ஏற்றுமதி திட்டத்தை நிறுவவுள்ள திரு. பாவன் போதர் இதுபற்றி கூறுகையில், இந்தியாவில் முதன்மையாக உள்ள மகாராஷ்டிரா, குஜராத், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் தமிழ்நாடு சிறந்த முதலீட்டுச் சூழ்நிலையை உருவாக்கியுள்ளதால் அவர் தனது தொழிற்சாலையை தமிழகத்தில் உருவாக்கியதாக கூறினார். மாண்புமிகு முதல்வர் அவர்களின் முற்போக்கான தலைமையின் கீழ் சுமூகமான சூழ்நிலை நிலவுவதை, வெளிமாநிலத்திலிருந்து வரும் தொழிலதிபர்கள் மிகவும் பாராட்டினார்கள்.

கடந்த 15 மாதங்களாக நாடு தொழில்துறை தேக்கத்துடன் கூடிய தீவிர பொருளாதார சிக்கலின் பிடியில் சிக்கியிருந்தது. இத்தகைய சூழ்நிலையில் கூட, தமிழ்நாடு வேகமான தொழில் வளர்ச்சிக்கு தம்மை ஈடுபடுத்தி, பீடு நடை போட்டு உள்ளது. 90-களில் தொடர்ந்து முன்னேறுவதற்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. புதிய முதலீடுகளுக்குச் சிறந்த தளமாக தமிழகம் உருவாகி வருகிறது. அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், வரி சலுகைகள், தீவிர முன்னேற்ற முயற்சிகள் ஆகியவற்றில் தொடர்ந்த முயற்சியும், சிறந்த பலன்களை தந்துள்ளது. அதன் பயனாக தமிழ்நாட்டின் உள்ளிருந்தும், வெளியில் இருந்தும் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களிடமிருந்தும், வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்தும் தமிழ்நாட்டில் முதலீடுசெய்யக் கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் முற்போக்கான தலைமையினாலும், தெளிந்த பார்வையினாலும், இத்தகைய பெரிய மாற்றங்கள் சாத்தியமாயின. தொழில் துறையில் வேகமான, சீரான வளர்ச்சியைப் பெற விளைவுகளை குறிக்கோளாகக் கொண்ட நடவடிக்கைகளை எடுக்கும்படி மாண்புமிகு முதல்வர் வலியுறுத்தினர். மிகவும் துரிதமான முன்னேற்றத் திட்டங்களை வகுக்க தொழிற்துறையும், மாநிலத் தொழில் வளர்ச்சி மேம்பாட்டு நிறுவனங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

# உணர்ச்சிகளுக்கு ஆளாகிவிடாமல் அமைதி காப்பது நமது கடமை!

## - மாண்புமிகு முதல்வர் அறிக்கை



அயோத்தியில் உள்ள பாபர் மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 7.12.92 அன்று கூறி இருப்பதாவது:-

'அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்தில் நடந்ததாகக் கூறப்படும் புனிதமற்ற அனைத்துச் செயல்களையும் நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இது கோர்ட்டு உத்தரவுக்கு எதிரானது.

சமூக ஒற்றுமைக்கு மேலும் சேதம் ஏற்படுத்தாமல் தடுக்க, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.

இந்த நெருக்கடியான நேரத்தில் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அமைதியையும் ஒற்றுமையையும் பேணிக்காக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்''

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்த அறிக்கையில் கூறி இருந்தார்.

இச்சம்பவத்தினால் நாடெங்கும் பதட்ட நிலை காணப்பட்டது. ஆங்காங்கே காவல் துறையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டனர். நாடெங்கும் முக்கிய இடங்களில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமிழ்நாட்டில் 10-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தம் நடைபெறும் என மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்தார். அதன் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை விவரம் வருமாறு:

'அயோத்தியில் கடந்த 6-ந் தேதி பாபர் மசூதி உடைக்கப்பட்ட அராஜகச் செயல் மிகவும் வருந்தத்தக்க நிகழ்ச்சி ஆகும். அதனை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் உச்ச நீதி மன்ற ஆணைகளை மீறியதோடு மதச் சார்பற்ற இந்தியத் திருநாட்டை துண்டாக்கும் வகையில் - குந்தகம் விளைவிக்கும் வன்முறையில் ஈடுபட்டது கடுமையாகத் தண்டிக்கத் தக்கது.

நாடு முழுவதும் மதத்துவேஷம் என்ற விஷத்தை தூவும் வகையில் நடைபெற்ற செயல்களுக்கு அ.இ.அ.தி.மு.க. ஒருமித்த கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையிலும், இந்த அராஜகச் செயலால் பாதிக்கப்பட்டு, பதட்டம் அடைந்துள்ள இஸ்லாமியச் சகோதரர்களின் நலன் காத்து, அவர்களுக்கு ஆதரவு தரும் வகையிலும், நாட்டின் நலனுக்காக அனைத்துச் சமயங்களுக்கிடையே ஒற்றுமை உணர்வை வலியுறுத்தும் வகையிலும் வருகின்ற 10.12.92 அன்று மாநில அளவிலான வேலை நிறுத்தத்தில் அ.இ.அ.தி.மு.கழகம் ஈடுபடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பொது வேலை நிறுத்தத்திற்குப் பொதுமக்கள் தங்கள் முழு ஆதரவினையும் தரவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.''

— இவ்வாறு இந்த அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறியிருக்கிறார்

முழு அடைப்பின் போது பொது மக்கள் அமைதி காத்துப் பொது வேலை நிறுத்தம் முழு அளவில் வெற்றியடைய ஒத்துழைக்கும்படி மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். இதன் தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

''பாபர் மசூதி இடிக்கப்பட்டது துரதிருஷ்டமான பல விளைவுகளை நாட்டில் ஏற்படுத்திவிட்டது. பல உயிரிழப்புகள் ஏற்பட்டு விட்டன.

சகிப்புத் தன்மைக்குத் தமிழக மக்கள் மிகவும் பெயர் போனவர்கள். பல்வேறு இன மக்கள் தமிழ்நாட்டில் மிகவும் அமைதியாகவும், சமாதானத்துடனும் வாழ்ந்து வருகிறார்கள் தொடர்ந்து வாழ்வார்கள்.

இந்தக் கடுமையான நேரத்தில் உணர்ச்சிகளுக்கு ஆளாக நம்மை விட்டுவிடாமல், அமைதி காக்க வேண்டியது நமது தலையாய கடமையாகும்.

பல்வேறு பிரிவினரிடையே ஒற்றுமையையும், அமைதியையும், காத்து சட்டம்-ஒழுங்கைப் பராமரிக்க அரசுக்கு உதவும்படி சாதி, மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து மாநிலத்தில உள்ள அனைத்து மக்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

பல சமுதாய மக்களிடையே நல்லெண்ணத்தைப் பராமரிக்க அரசுக்கு ஒத்துழைப்பு நல்கும்படி

அனைத்துத் தரப்புத் தலைவர்களுக்கும் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இன்று நடக்கும் முழு அடைப்பின்போது எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் இல்லாமல் அமைதியாக நடத்தி முழு வெற்றியைச் செய்ய ஒத்துழைக்கும்படி தமிழக மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்த அறிக்கையில் மாண்புமிகு முதல்வர் கூறியிருக்கிறார்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து, தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிகள் சார்பில் முழு அடைப்பு நடந்தது. கடைகள் மூடப்பட்டிருந்தன. பஸ்கள், இரயில்கள் ஓடவில்லை.

முழு அடைப்பை அமைதியாக நடத்தியதற்காக தமிழக மக்கதளுக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் நன்றி கூறியிருக்கிறார். இதன் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

''அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் தமிழகத்தில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தம் மிகவும் கட்டுக்கோப்புடனும், அமைதியுடனும் நடைபெற்றது குறித்து, நான் தமிழக மக்களுக்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நடந்த ஒரு நாள் பொது வேலை நிறுத்தம் மூலம் தமிழக மக்கள் இந்திய ஒருமைப்பாட்டின் மீதும், அதன் மதச்சார்பற்ற கொள்கையின் மீதும், கொண்டிருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துகின்ற உணர்வாக அமைந்துள்ளது.

என்றுமே அமைதிப் பூங்காவாகத் தமிழ்நாடு இருக்கும் என்பதைத்தான் இன்று நடந்த பொது வேலை நிறுத்தம் வெளிப்படுத்துகின்றது.

இப்போது நாட்டில் ஏற்பட்டுள்ள சோதனைக் கட்டத்திலும், மிக அமைதியுடனும் பொறுப்புடனும் நடந்து கொண்ட தமிழக மக்கள் வன்முறைக்கு இடம் கொடுக்க மாட்டார்கள் என்பதனை இது முழுமையாக வெளிப்படுத்துகின்றது.

இன்று தமிழகம் முழுவதும் அமைதியோடு நடந்த பொது வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பு நல்கிய தமிழக மக்களுக்கு மீண்டும் நன்றியை எனது சார்பாகவும், தமிழக அரசின் சார்பாகவும் அ.இ.அ.தி.மு.க. சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.''

- இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்.

## மாண்புமிகு முதல்வர் ஆலோசனை
## சர்வதேசக் கால்பந்தாட்டப் போட்டி

இன்று (3.12.1992) மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தலைமைச் செயலகத்தின் ஜவகர்லால் நேரு 10-வது சர்வதேசக் கால்பந்தாட்டத் தங்கக் கோப்பைப் போட்டி துவக்க விழாவினைப் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் நேரு விளையாட்டு அரங்கில் 1993 ஜனவரி மாதத்தில் பெரிய அளவில் நடத்துவது குறித்து ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினார்கள். நேரு விளையாட்டு அரங்கின் கட்டுமானப் பணிகளில் உள்ள முன்னேற்றத்தையும் ஆய்வு செய்தார்.

இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள், திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், திரு. எஸ். கண்ணப்பன் அவர்கள், திரு. அழகு திருநாவுக்கரசு அவர்கள் ஆகியோரும், தலைமைச் செயலர் திரு. டி.வி. வெங்கட்ராமன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, உள்துறை, பொதுத்துறை, கல்வித்துறை, செய்தி மற்றும் சுற்றுலாத்துறை ஆகியவற்றின் செயலாளர்களும், உறுப்பினர் செயலர், தமிழ்நாடு விளையாட்டுக் குழுமம், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு, காவல் துறைத் தலைவர், தமிழ்நாடு காவல்துறை கூடுதல் தலைவர், சென்னைக் காவல்துறை ஆணையாளர், தனி அலுவலர், சென்னை மாநகராட்சி ஆணையர் திரு. சி.ஆர். வில்வநாதன், திரைப்பட இசை அமைப்பாளர் திரு. (சங்கர்) கனேஷ் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.





# தொட்டில் குழந்தைகளுக்கு

# முதல்வர் பெயர் சூட்டினார்

**சேலம்,** மதுரை மாவட்டங்களில் சில இடங்களில் பெண் குழந்தைகள் பிறந்தால் உடனடியாகக் கொல்லப்படுகிறார்கள் என்கின்ற சோகச் செய்திக் கேட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாங்கொண்ணா துயர் அடைந்தார். இதைத் தடுத்து நிறுத்தும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 'புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்' என்ற ஒரு திட்டத்தை அறிவித்தார். இத்திட்டத்தின்படி, இம்மாவட்டங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் சத்துணவுக் கூடங்கள் முன்பு தொட்டில்கள் வைக்கப்படும். பெண் குழந்தைகள் வேண்டாம் எனக் கருதுபவர்கள் இந்தத் தொட்டிலில் குழந்தைகளைப் போடலாம். அக்குழந்தைகளை அரசே வளர்க்கும்.

இத்திட்டம் அமலாக்கப்பட்டு தொட்டில் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தாய்-சேய் நல விடுதி மற்றும் சுகாதார நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த அரசுத் தொட்டில்களில் 11 குழந்தைகள் போடப்பட்டன.

தொட்டில்களில் போடப்பட்ட அந்தக் குழந்தைகளில் 5 பெண் குழந்தைகள் ரெயில் மூலம் 4.12.92 அன்று சென்னைக்குக் கொண்டு வரப்பட்டன. இந்தக் குழந்தைகளை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் புலவர் இந்திரகுமாரி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்தப் பெண் குழந்தைகள் சென்னை கோட்டையில் உள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களது அறைக்கு 5.12.92 அன்று கொண்டு வரப்பட்டன. தாயே வேண்டாமென ஒதுக்கிய சேய்கள் ஒவ்வொன்றாக மாண்புமிகு முதல்வரிடம் கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒவ்வொரு குழந்தையையும் பாசத்தோடு முத்தமிட்டு, முதல் குழந்தைக்கு 'ஜெயலட்சுமி' என்றும், அடுத்து வந்த 3 குழந்தைகளுக்கு முறையே 'ராஜலட்சுமி', 'மகாலட்சுமி', 'தனலட்சுமி' என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

உடல்நலக்குறைவால் கொண்டு வர முடியாத குழந்தை ஒன்றுக்குக் 'கல்யாணி' என்று பெயர் சூட்டினார்.

குழந்தைகளுக்குப் பெயர் சூட்டிவிட்டு இந்தக் குழந்தைகளை வளர்ப்பதற்காக, தாம்பரம் எஸ்.ஓ.எஸ். சமூக சேவை இல்லத்தில் பணிபுரியும் அமுதாவிடம் குழந்தைகளை மாண்புமிகு முதல்வர் ஒப்படைத்தார்.

இந்தக் குழந்தைகளை ஒப்படைத்ததற்கான பதிவுப் புத்தகத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களே குழந்தைகளின் பெயர் மற்றும் விவரங்களை எழுதினார். இந்தக் குழந்தைகளின் நலன் மற்றும் வளர்ச்சி குறித்து அவ்வப்போது தனக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும் என சமூக நலத்துறை அதிகாரிகளுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டார்.

தென்னார்க்காடு மாவட்டத்தில்





# அறிவொளி இயக்கம்

ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.
தென்னார்க்காடு மாவட்ட ஆட்சியர்

பசுமைப் புரட்சியின் மூலம், வயல்களுக்கு மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கும் உழவர் களையும், நீலப்புரட்சி மூலம் மீன் பிடித்து வாழும் மீனவர்களையும் தொழில் துறைகளில் சிறந்து விளங் கும் பெருமக்களையும் பெரிதும் தன்னகத்தே பெற்று விளங்குவது தென்னார்க்காடு மாவட்டம்.

மொழி மனிதனை விலங்கு களிலிருந்து வேறுபடுத்திக் காட்டு கின்றது என்றாலும் கல்வி அறிவு அவனைக் காட்டுமிராண்டிகளிட மிருந்து உயர்த்திக் காட்டுகிறது. இலக்கியத்தை இன்று நுகர்வதற்கும், நடைமுறை வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துவதற்கும், சிறு சேமிப்புச் செய்திடவும், குடும்பநலம் பேணவும், புதிய தொழில் நுட்பங் களைத் தேர்ந்தெடுத்து வேளாண் துறையில் வித்தகம் படைக்கவும், பிற துறைகளில் பெரும் புகழ் சேர்க்கவும், புதுமைகளைப் புகுத்த வும், வளமையைத் தேக்கவும் கல்வி இன்றியமையாதது.

நமது தென்னார்க்காடு மாவட் டத்தில் அறிவொளி இயக்கம் விரை வில் அமலுக்கு வரவிருக்கிறது. மத்திய, மாநில அரசுகள் உதவி யுடன் இந்த உயரிய திட்டம் விரை வில் அரங்கேற இருக்கிறது. இதன் மூலமாக 9 வயதிலிருந்து 45 வய துள்ள படிப்பறிவில்லாதவர்களுக்கு எழுத்தறிவு கற்றுத் தரப்படும். கல்வி அறிவு பெற்ற தன்னார்வத் தொண் டர்கள் இந்த மகத்தான பணியைச் செவ்வனே செய்யவிருக்கிறார்கள். ஏறத்தாழ ஓராண்டுக் காலம் நடக்கவிருக்கும் இந்தப் பணியின் மூலமாகக் கல்வி அறிவு இல்லாத வர்களுக்கு முழு எழுத்தறிவு தரப் படவிருக்கிறது.

சூழ்நிலையினால், வாய்ப்பின் மையால், போதுமான வசதியின்மை யினால் கல்வி அறிவு பெற இய லாமல் போய் விட்டவர்கள். இந்தப் பொன்னான வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டும். கல்வி பெற்றவர்கள் உதவி புரிய நீட்டும் நேசக்கரங்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கரை ஏற வேண்டும். இந்த மகத்தான செய லினால் சுயசக்தி பெற்று சுதந்திரக் காற்றைச் சுவாசித்து எழுத்தறிவில் லாத பாமர மக்கள் அனைவரும் படிப்பறிவு பெற்றவர்களாக மாற வேண்டும். இதுவே 'அறிவொளி இயக்கப்' பணி. இவ்வாறு பாமர மக்களும் படிப்பறிவு பெறுவதால் இன்னொரு விழி அவர்களுக்குக் கிடைக்கிறது!

தென்னார்க்காடு மாவட்டத்தின் மொத்த மக்கள்தொகை 48,70,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதில் ஆண்கள் 24,75,000 பேர். பெண்கள் 23,95,000 பேர்.

மொத்த மக்கள்தொகையில் படிக்காதவர்களின் எண்ணிக்கை 22,28,000 ஆகும்.

இந்த 'அறிவொளி இயக்கத்' திட்டத்தின் மூலமாக நாம் 9 வயதி லிருந்து 45 வயது நிரம்பியுள்ள வர்களையும் எழுத்தறிவு பெற்றவர்

களாக மாற்ற இருக்கிறோம். அவர்கள் எண்ணிக்கை சுமார் 7 இலட்சம் இருக்கும் என்று தோராய மாகக் கணக்கிடப்படுகிறது. ஆனால் அவர்களின் உண்மையான எண் ணிக்கை ஒரே நாளில் மாவட்டம் முழுவதும் நடக்கவிருக்கும் மதிப் பீட்டின் போதுதான் தெரியவரும். இந்த 9 வயதிலிருந்து 45 வயதுள்ள வர்களைத் தேர்வு செய்யக் காரணம் என்னவென்றால், 9 வயதுக்கு உட்பட்டவர்கள் கல்வி அறிவு பெறாமல் இருந்தால் அவர்களைப் பள்ளிகளின் மூலம் கல்வி அறிவு பெறவைக்க இயலும் என்பதுதான்.

இந்த 'அறிவொளி இயக்கம்' காலவரைக்குட்பட்ட திட்டமாகவும், ஆர்வமுடைய அனைவரையும் உள் ளடக்கிய திட்டமாகவும், தன்னார் வத் தொண்டர்களை மையமாகக் கொண்ட திட்டமாகவும் மலர இருக் கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் ஒவ் வொரு நபருக்கும் 60 ரூபாய் வீதம் செலவிடப்படவிருக்கிறது. தன்னார் வத் தொண்டர்களின் பணி முற்றி லும் தன்னலமற்ற, ஊதியத்தை எதிர்பாராத சேவை மனப்பான்மை கொண்ட பணியாகும்.

இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த 'அறிவொளி இயக்கம்' என்னும் பதிவு செய்யப்பட்ட அமைப்பு ஏற்படுத்தப்படும். அதன் தலைவர் மாவட்ட ஆட்சியர் ஆவார். அவர் தலைமையின் கீழ் ஒரு நிர் வாகக் குழு அமைக்கப்படும். அந்த நிர்வாகக் குழுவின் கீழ் துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, மாவட்ட அளவிலும், நகராட்சி, ஊராட்சி அளவிலும், கிராம அளவிலும் எழுத்தறிவுக் குழுக்கள் அமைக்கப் பட்டுக் கிராம அமைப்பாளர்கள் மூலமாகப் படிப்பறிவு சொல்லித் தரப்படும்.

இந்த 'அறிவொளி இயக்கம்' அனைத்துத் தரப்பினரின் ஒத் துழைப்பில்தான் முழுமையான வெற்றியைப் பெற முடியும். எப்படிப் பாதத்தின் விரல்கள் அனைத்தும் ஒத்துழைத்தால்தான் நடை பயில இயலுமோ, அதைப் போலவே இம் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்துப் பிரிவினரும் ஒருங்கிணைந்து ஒத் துழைப்பைக் கொடுத்தால்தான் அறிவொளி இயக்கம் வெற்றி நடை போட முடியும். அறிவொளி இயக் கத்தைச் செயல்படுத்துகின்ற வகை யிலும், அனைத்து மக்களின் ஒத் துழைப்பைக் கோருகின்ற வகை யிலும், மாவட்ட அளவிலான ஒருங் கிணைப்புக் கூட்டம் டிசம்பர் மாதம் முதல் தேதியிலும், இரண்டாம் தேதியிலும் முறையே கடலூர், விழுப்புரம் ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது; விழுப்புரத்தில் நடக்கவுள்ள கூட்டம் விரைவில் உருவாக இருக்கின்ற வள்ளலார் மாவட்டப் பிரமுகர்களை உள்ளடக் கியதாக அமையும்.

மாவட்டக் கூட்டத்தைத் தொடர்ந்து இத்திட்டத்தின் பயன்களை விளக்கி மாவட்டத்திலுள்ள சுமார் 300 மையங்களுக்குக் கலைப் பயணக் குழுக்கள் பயணம் செய்து கலை நிகழ்ச்சிகளின் மூலமாக எழுத்தறி வின் சிறப்பம்சத்தை எடுத்துக் கூற விருக்கின்றன. பாமர மக்களும், கல்வி கற்கத் தூண்டும் வகையில் எளிமையாக இக் கலைநிகழ்ச்சிகள் அமையவிருக்கின்றன. இக் கலைப் பயணம் பிரம்மாண்டமான ஆரம்ப விழாவோடு தொடங்கவிருக்கிறது. நிகழ்ச்சிகளின் போது கிராமத்தில் எழுதப் படிக்கச் சொல்லித்தர முன் வரும் தன்னார்வத் தொண்டர் களைப் பதிவு செய்தும், படிக்காத வர்களின் பெயர்களைப் பதிவு செய்தும் இத்திட்டத்திற்கான ஆரம் பக் கட்ட வேலைகள் தொடங்க உள்ளன.

கலைப்பயண விழா முடிவு பெற்ற பிறகு, ஓரளவு மாவட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படும். கிராம அளவிலான அமைப்பாளர்களைக் கண்டறிந்த பிறகு நகராட்சி, ஊராட்சி அளவிலான கூட்டங்கள் நடைபெறும். கூட்டங்களின் வாயி லாக இத்திட்டத்திற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். அதன் பிறகு மாவட்டம் முழுவதும் ஒரே நாளில் படிக்காதவர்களின் எண் ணிக்கையை மதிப்பீடு செய்யும் 'சர்வே' நடைபெறும். அதன் பிறகு முறையான பயிற்சி ஆரம்பிக்கப் படும்.

நமது மாவட்டத்திலுள்ள அனை வரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு இந்தத் திட்டத்தின் பயனை முழுவது மாக அடையுமாறும் கல்விச் செல்வம் பெறுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.



# வளமான வாழ்வுக்கு

## மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ்

அளிக்கும்

# விஜய்

## உரங்கள்

விவசாயிகளின் மகிழ்ச்சி, வளமான வாழ்வு இவைகளே எங்களது நோக்கம். நாங்கள் விஜய் உரங்கள், நுண்ணுயிர் உரங்களைத் தயார் செய்கிறோம். உரங்களைத் தயாரித்து விற்பனை செய்வது மட்டுமே எங்கள் குறிக்கோள் இல்லை! “முறையான பயிர்பாதுகாப்பு, சத்துக்களை ஒருங்கிணைத்து அளித்தல், முதலியவற்றை வலியுறுத்தி விவசாயிகளை ஊக்குவித்து புதிய சாகுபடி முறைகளைக் கடைப்பிடிக்கச் செய்கிறோம்”.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், நீண்ட கால வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம், மலைவாழ் மக்கள் முன்னேற்றத் திட்டம் மூலமாக நவீன சாகுபடிக் கருத்துக்களை வலியுறுத்தி விவசாயிகள் முன்னேற்றத்திற்கு செயல்படுகிறோம்.

**விஜய் என்றாலே வெற்றி!**




VIJAY

MADRAS FERTILIZERS

**மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்**

இந்திய அரசு-பொதுத்துறை நிறுவனம்

மணலி, சென்னை 600 068

HTA 8249

# டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் - தொடக்க விழா

தமிழகத்தின் பல பகுதிகளில் பெண் சிசுக் களைக் கொலை செய்யும் அநாகரீகமான, சமூக விரோதச் செயலைத் தடுக்கும் நோக்குடன் தமிழக அரசு அண்மையில் ''டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாது காப்புத் திட்டம்'' என்ற புதிய திட்டத்தை அறி வித்தது.

அதையொட்டி 4.11.92 அன்று சேலம் நகரில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி ஆர். இந்திரகுமாரி அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

அன்று காலை நிகழ்ச்சியாக அஸ்தம்பட்டி, கொங்கணாபுரம், காக்காபாளையம் ஆகிய இடங் களில் பெண் குழந்தைகள் பராமரிப்பு இல்லத் தைத் தொடங்கி வைத்து அரசுத் தொட்டில்களை வழங்கினார். மாலையில் 10 ஆயிரம் பெண்கள் கலந்துகொண்ட பெண்கள் விழிப்புணர்ச்சிப் பேரணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடங்கி, கொட்டும் மழையில் நனைந்து கொண்டு தொடங்கி, கொட்டும் மழையில் நனைந்து கொண்டு ஊர்வலத்தில் நடந்து வந்து இறுதியில் நேரு கலை யரங்கத்தில் நடைபெற்ற விழாவில் விழாப் பேருரை ஆற்றினார். அப்போது அவர் குறிப் பிட்டு பேசியதாவது-

''இங்கே கூடியுள்ள கூட்டத்தைப் பார்க்கும் போது இன்னும் ஆறு மாதத்தில் பெண் சிசுக் கொலையைத் தடுக்கும் உணர்வு தாய்மார்களிடம் நிரம்பி வழிவதைப் பார்க்கிறேன். வீடு வீடாகச் சென்று தன்னுடைய பணிகளைச் செய்யும் இந்தச் சமூக நலத்துறையினர் குறைந்த சம்பளத்தில் எங்களுக்கு இப்படிப்பட்ட வேலையைத் தருகிறீர் களே என்று நீங்கள் எண்ணுவதையும் பார்க் கிறேன். அதனால்தான் இந்த மாத இறுதிக்குள் சமூக நலத்துறையினைச் சார்ந்தவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்த புரட்சித் தலைவி உத்தேசித் துள்ளார்கள். நீங்கள் மனச்சுமை இல்லாமல் தெம்பும் திராணியுடனும் பணியாற்ற வேண்டு மென்று உணர்ந்துதான் புரட்சித்தலைவி இந்த நல்ல முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள். பெண் சிசுக் கொலை என்பது இன்று நேற்றல்ல. மூன்று தலைமுறைகளாக நடைபெறும் நிகழ்ச்சி. இதற்குப்போய் இன்றுதான் முதலமைச்சர் உத்தர விட்டுள்ளார்கள் என்று சிலர் நினைக்கலாம். ஆனால், இன்றைக்குத்தான் அப்படிப்பட்ட முதலமைச்சரைத் தமிழகம் பெற்றுள்ளது. இது வரை இருந்த வேறு எந்த முதலமைச்சரும் இப்படி யொரு நடவடிக்கை எடுக்கவில்லை. பெண்ணாக இருப்பதால்தான் இன்றைய முதல்வர் பெண் களின் துயரை நீக்க நல்ல நடவடிக்கை எடுத்து வருகிறார்''.



பெண்கள் விழிப்புணர்ச்சிப் பேரணியிலும், பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத் தொடக்க விழாவிலும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.ஏ.இராமையா, இ.ஆ.ப., தமிழக ஒருங் கிணைந்த ஊட்டச்சத்து இயக்குநர் திரு. கண்.தீன தயாளன், இ.ஆ.ப., இணைச்செயலாளர் திரு. பிச்சாண்டி, இ.ஆ.ப., மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர் திரு. சுப்பிரமணியம், இ.கா.ப., மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

விழாவிற்கு வருகை தந்த அனைவரையும், சமூக நல அலுவலர் திருமதி சரோஜா அவர்கள் வரவேற்றார். மாவட்டச் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. நா.தில்லைகோவிந்தன் நன்றி கூறினார்.

# நூல் நயம்

## காகிதத் தொட்டில்

**ஆசிரியர்: மணவாளன் எத்திராசு**

**வெளியீடு:**

கோமளவல்லி பதிப்பகம்,
18, பத்மாவதி நகர்,
மாதவரம் பால் பண்ணை,
சென்னை-600 051.

பக்கம்:112 விலை:ரூ.15/-

மரபுக் கவிதைகளும் புதுக் கவிதைகளும் இணைந்த கதம்பச் சரம் இந்நூல். காந்தியடிகள், பெரியார், பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் ஆகிய பெருமக்கள் குறித்து எழுதப் பெற்ற கவிதைகள் சுவை நல்குகின்றன. சொல்லாட்சி இந்தக் கவிஞருக்கு நன்கு கைவந்திருக்கிறது. ஆபாசமில்லாத எழுத்துகள் அவனியில் பவனி வரவேண்டும் என்ற இவரது இலட்சியத்தை இவரது கவிதைகளின் வாயிலாக உணர முடிகிறது. போராட்டம், பள்ளியறை, நிலவு ஆகிய கவிதைகள் நெஞ்சைத் தொடுகின்றன.

—தமிழ்ப்பித்தன்

## பெரியார் எனும் பேரொளி

**ஆசிரியர்: பூவை. அமுதன்**

**வெளியீடு:**

கார்த்திக் பப்ளிகேஷன்ஸ்,
92, கங்கையம்மன் கோவில் தெரு,
சென்னை-26.

பக்கம்:96 விலை:ரூ.12/-

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறே இந்நூல்.

தந்தை பெரியாரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள் - வைக்கம் போராட்டம் உட்பட, சுவையாக எழுதப்பட்டுள்ளன.

## டாக்டர் தயா மணிவிழா மலர்

**வெளியீடு:**

'பூக்கூடை' கிறிஸ்தவ
இலக்கியச் சங்கம்,
சென்னை-600 003.

பக்கம்:103 **விலை:ரூ.4/-**

தமிழறிஞர் அருள்திரு டாக்டர் தி. தயானந்தன் பிரான்சிஸ் அவர்களின் மணி விழா மலர் சிறப்பாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது.

எழுத்தாளர்கள், கவிஞர்கள் முதலானோர், டாக்டர் தயாவின் சிறப்பியல்புகளையும், தமிழ்த் தொண்டுகளையும் விளக்கி எழுதியுள்ளனர்.

## செல்வம் கொழிக்கும் வீட்டின் அமைப்பு

**ஆசிரியர்: சுவாமி விஜயானந்தர்**

**வெளியீடு:**

வள்ளி புத்தக நிலையம்,
8-ஏ, சுந்தரேஸ்வரர் கோயில் தெரு,
சென்னை-600 014.

பக்கம்: 200 விலை:ரூ.30/-

'வீட்டைக் கட்டிப்பார். கல்யாணம் நடத்திப் பார்' என்பார்கள். வீடு கட்டுவதற்கு முன்பாக, நல்ல மனையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வீடு கட்ட நாள் குறித்தல், பூமி பூசை, கிணறு இருக்க வேண்டிய இடம், வீடு கட்டும் போது கடைப்பிடிக்க வேண்டியவை முதலான விளக்கங்களுடன் கூடிய மனையடி சாஸ்திர நூல் இது.

வீட்டைக் கட்டிய பிறகு, வாடகைக்கு அமர்த்துதல், வீட்டை விரிவுபடுத்துதல், வீட்டின் அளவு, பெயர் சூட்டுதல் முதலான குறிப்புகளும் இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இவை தொடர்பான 90 விளக்கப்படங்களும் உள்ளன.

வீடு கட்டுவோர்க்கு, இதில் கூறப்பட்டுள்ள குறிப்புகள் பெரிதும் பயன்படும்.

- பி.வி. கிரி.

## காந்திஜி வாழ்வில் சுவையான நிகழ்ச்சிகள்

**ஆசிரியர்: விஷ்ணு பிரபாகர்**

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020.

பக்கம்:109 விலை:ரூ.10/-

அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் உணர்வு பூர்வமான தொகுப்பே இது.

'என் வாழ்வே எனது செய்தி' என்றார் காந்தியடிகள். அவரது அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ சாதனைகளும் நிகழ்ந்திருக்கின்றன. சத்தியம் மனித நேயம் முதலான பண்புகள் அவரிடம் இழைந்திருந்தன. அவையெல்லாம் நமக்குப் படிப்பினையாக விளங்குகின்றன.

இந்நூலில் 64 சிறுசிறு நிகழ்ச்சிகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மூல நூலான இந்தியிலிருந்து பி.ஆர். குசேல்ராம் தமிழில் வடிவம் தந்திருக்கிறார். குறிப்பாக இளைய சமுதாயம் இந்நூலைப் படித்துப் பயன் பெற வேண்டும்.

- மறைமலை.

## சிற்றுண்டிகள்

**ஆசிரியர்: திருமதி பவானி விஸ்வநாத்**

**வெளியீடு:**

பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

பக்கம்:132 விலை:ரூ.14/-

அன்றாட உணவு வகைகளில் சிற்றுண்டியும் ஒரு வேளை உணவாக ஆகிவிட்ட இந்நாளில், பல வகையான சிற்றுண்டிகள் பற்றியும் அவற்றின் செய்முறை பற்றியும் விளக்குகிறது இந்நூல்.

புகழ்பெற்ற காஞ்சிபுரம் இட்லி முதல் கேழ்வரகு இட்லி வரை பலவகையான இட்லி வகைகளின் செய்முறை மற்றும் சுவை பற்றி கூறியிருப்பது அருமை.

இதைப் போலவே தோசை, உப்புமா, பொங்கல் வகைகள் பற்றியும் அவற்றைத் தயாரிக்கத் தேவையான பொருட்கள், அவற்றின் அளவு ஆகியவை பற்றியும் விளக்கமாகக் கூறியிருக்கிறார் ஆசிரியர்.

— ஜே. சந்திரன்.

## 'வழி தவறிய ஆடுகள்'

**ஆசிரியர்:**

**குழிபிறை வீ.கே. கஸ்தூரிநாதன்**

**வெளியீடு:**

சுகுமாரி பதிப்பகம்
குழிபிறை
புதுக்கோட்டை மாவட்டம்

பக்கம்:104 விலை:ரூ.12/-

இச்சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் ஓர் பள்ளி ஆசிரியராகையால், தொகுப்பில் உள்ள ஒவ்வொரு சிறுகதையும் ஓர் நீதியை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது.

ஆசிரியர், பெற்றோர், பிள்ளைகள் ஆகியோரது கடமைகளை வலியுறுத்தும் கதைகள். குடி குடியைக் கெடுக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணமான கதை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையின் மேன்மை, சுயவேலை வாய்ப்பின் பெருமை ஆகியவற்றைச் சுருக்கமாக, தெளிவாகத் தன் கதைகளில் விளக்கி இருக்கிறார்.

உரையாடலுக்குப் பயன்படுத்தும் குறியீடுகளை (கொட்டேஷன் மார்க்) முறையாகப் பயன்படுத்தி இருந்தால் மிகச் சிறப்பாக இருந்திருக்கும்.

—என்.கே.சாமி

சித்த மருத்துவம்

# அதிசய மருந்து அதிமதுரம்

—டாக்டர் ஏ.ஆர்.என். துரைராஜ்

**அ**திமதுரம் ஒரு அதிசய மருந்து! அதனால் தீரும் நோய்கள் ஏராளம்! சாதாரண நோய்களை மட்டுமல்ல, படுபயங்கர நோய்களையும் இந்த அதிமதுரம் அதிவிரைவில் குணமாக்கு கிறது.

இதனால் என்னென்ன நோய்கள் தீருகின்றன?

இரத்தக் கொதிப்பு, மயக்கம், நாவறட்சி, தாகம், விக்கல், வாந்தி, இருமல், பிடிப்பு, சுளுக்கு, தலை வலி, ஒற்றைத் தலைவலி, ஜுரம், சிறுநீர் எரிச்சல், கற்றாழை நாற்றம், காமாலை, உஷ்ணத்தினால் உண் டாகும் இருமல், கண் ஒளிபெற, தாதுவிருத்தி மற்றும், மூப்பிணியால் வரும் ரணம், கெட்டநீர், வெறி நோய், வெண்புள்ளி (வெண் குஷ்டம்) எலும்பு பற்றிய நோய், நஞ்சு ஐயத்தாலுண்டான கோழை யைச் இளகச் செய்யும், தீக்குற்றத் தின் தன்மையைச் தாழச் செய்யும்.

**இரத்தக் கொதிப்பு, மயக்கம் நீங்க:**

அதிமதுரம் 20 கிராம், திப்பிலி 10 கிராம், ஏலரிசி 5 கிராம், தோல் நீக்கிய சுக்கு 10 கிராம் இவைகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து இடித் துத் தூள் செய்து, அதிலே 50 கிராம் அஸ்கா சர்க்கரையைச் சேர்த்து கலந்து ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொள்ளவும். காலை-மாலை கால் டீஸ்பூன் வீதம் வெந்நீரில் அருந்த, இரண்டு வாரத் தில் பித்தத்தினால் உள்ள மயக்கம், வாய்க்கசப்பு, இரத்தக் கொதிப்பு ஆகியவை நீங்கும்.

**வறட்சி தாகம், இருமல் நீங்க:**

அதிமதுரம் 18 கிராம், ஏலம் 18 கிராம், நெல்லி 18 கிராம், சந்தனம் 18 கிராம், வால்மிளகு 18 கிராம் ஆக எல்லா வகைகளையும் ஒன்றா கச் சேர்த்து இடித்து இதனுடன் அஸ்கா சர்க்கரை 50 கிராம் கலந்து சேமித்து வைத்துக் கொள்ளவும். இந்தச் சூரணத்தை முக்கால் டீஸ்பூன் அளவு வெந்நீரில் கலந்து அருந்த நோய்கள் நீங்கும்.

**விக்கல், வாந்தி, நாவறட்சி நீங்க:**

நம் தேவைக்கு ஏற்றபடி உத்தேச மாக அதிமதுரம், சுக்கு, கடுக்காய், இஞ்சி, பெருங்காயம், ஓமக்காய் ஒன்று எல்லா வகைகளையும் எடுத்து அம்மியில் வைத்துத் தூள் செய்து சேமித்து வைத்துக் கொண்டு, விக்கலாவது அல்லது வாந்தியாவது வரும் நேரங்களில் இத்தூளை அரை டீஸ்பூன் எடுத்து தேனில் குழைத்து உள்ளுக்குக் கொடுத்தால் இவைகள் நீங்கும். மற்றும் நமக்குத் தேவைக்கு ஏற்றபடி அதிமதுரம், திப்பிலி, நாவல் துளிர் இவைகளை எல்லாம் சேர்த்து தூள் செய்து, சிறிது தேனுடன் குழைத்துச் சாப்பிட நாக்கு வறட்சி நீங்கும்.

**சாதாரண இருமலுக்கு:**

அதிமதுரத் துண்டு ஒன்றை வாயிலிட்டுச் சுவைத்து வரும் பாலை விழுங்க இருமல் தணியும்.

**உஷ்ணத்தினால் உண்டாகும் இருமலுக்கு:**

அதிமதுரம், கடுக்காய், மிளகு ஓர் அளவாக எடுத்து இளவறுப்பாய் வறுத்துத் தூள் செய்து சேமித்து வைத்துக் கொண்டு, இருமல் சமயங் களில் அத்தூளை ஆறு கிராம் அளவில் தூளை எடுத்து தேனில் கொடுக்க இருமல் நீங்கும்.

**தலைவலி நீங்க:**

நம் தேவைக்கு ஏற்றபடி உத்தேச மாக எடுத்துக் கொள்ளவும். அதி மதுரம், சோம்பு, அஸ்கா சர்க்கரை ஆக வகைக்கு 35 கிராம், கொடி வேலி வேர்பட்டை 17 கிராம் எடுத்து இவைகளை எல்லாம் சேர்த்து இடித்து, தயார் செய்தால் சூரணமாகி விடும். நோய் வரும் காலங்களில், அல்லது வரும் நேரங் களில். இச்சூரணத்தை 4 கிராம் அளவில் எடுத்து வாயில்போட்டு மென்று தண்ணீர் அருந்த நாளடை வில் நோய்கள் நீங்கும். **குறிப்பு:** தயார் செய்த சூரணத்துக்கு, அதி மதுரச் சூரணம் என்று பெயர்.

தேவையான அதிமதுரத்தை எடுத்து, அம்மியில் வைத்து தாய்ப் பால் விட்டு அரைத்து, அந்தச் சாரத் தைக் கண்ணில்விட, கண் ஒளி பெறும். இது தவிர, இதன் இலையை அரைத்துப் பூசிவர, உடலிலும் அக்குளிலும் உண்டாகும் கற்றாழை நாற்றம் சொறி, சிரங்கு இவை நீங்கும்.

**காமாலைக்கு:**

நமக்குத் தேவைப்பட்ட உத்தேச மாக அதிமதுரம், முட்சங்கன் வேர்ப் பட்டை இந்த இரண்டையும் சமமாக எடுத்துப் பழச்சாறுவிட்டு நன்றாக அரைக்கவும். அரைப்பு சரி இல்லை என்றால், தொடர்ச்சியாக நாட்கள் இரண்டு ஆனாலும் பரவாயில்லை. நன்றாக அரைக்க வேண்டும். கோலி அளவு உருட்டி வைத்துக் கொண்டு

பசுப் பாலில் காலை-மாலை இரு வேளை கொடுக்க காமாலை நீங்கும்.

**பிடிப்பு, சுளுக்குகளுக்கு:**

பிடிப்பு, சுளுக்கு உண்டானால் அந்த இடங்களில் நல்ல சிற்றா மணக்கு எண்ணெய்யை இலேசாகத் தடவி, குன்றி இலையை அதன்மேல் ஒட்டவைக்க அப்போது உடலில் ஒருவித விறுவிறுப்பு தென்பட்டு வலி நீங்கும்.

**சூடு தணிய:**

உடலில் சூடு தணிய, அதிமதுரம் 18 கிராம் எடுத்து வெந்நீரில் அரைத்துக் கலக்கி, பிறகு வடிகட்டி, வடிகட்டியதைக் காலை-மாலை கொடுக்கலாம். (அதிமதுரம் அரை பலம் கொண்டது 18 கிராம்)

**வயிற்றில் மறித்த பிள்ளை விழ:**

அதிமதுரம் 35 கிராம், தேவ தாருக்கட்டை 35 கிராம் இரண்டை யும் அம்மியில் வைத்து வெந்நீர் விட்டு அரைத்துக் கொண்டு, உட் கொள்ளும் அளவு: 17 கிராம் வீதம் இருவேளை (காலை-மாலை) வெந் நீரில் கலக்கிக் கொடுக்கலாம்.

**சிறுநீர் எரிச்சலுக்கு:**

அதிமதுரம் 72 கிராம், பசும்ப் பால் 800 கிராம், பசுநெய் 800 கிராம், பழுப்புச் சர்க்கரை 800 கிராம் இவைகள் எல்லாம் சேர்த்து, பதமாகக் காய்ச்சி எடுத்தால் லேகிய மாக ஆகும். இதை நெல்லிக் காயளவு 10 கிராம் எடுத்து தினம் காலை-மாலை சாப்பிட நாளடை வில் சிறுநீர் எரிச்சல் நீங்கும்.




## பூச்சிகளை நெருங்க விடாத புதிய வகை உருளைக்கிழங்கு!

பூச்சிகளுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய புதிய வகை உருளைக்கிழங்கு ஒன்றை நியூயார்க்கில் உள்ள கார்நெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இந்த வகை உருளைக்கிழங்கைப் பயிரிடுவதால் பூச்சி கொல்லி மருந்துகளைப் பயன்படுத்தும் செலவு மிச்சமாகிறது. இந்தப் புதிய உருளைக்கிழங்கு வர்த்தக ரீதியில் விரைவில் விற்பனைக்கு வர உள்ளது.

இந்த உருளைக்கிழங்குச் செடியின் இலைகளிலும், தண்டுகளிலும் இரண்டு விதமான நார்கள் வளர்கின்றன. இந்த நார்களிலிருந்து 'தார்' போன்ற ஒருவித இரசாயனப் பொருள் வடிந்து கொண்டே இருக்கிறது. இதனால் இந்தச் செடி களைப் பூச்சிகளும் வண்டுகளும் நெருங்கு வதில்லை.

'கொலராடோ வண்டுகள்' என்று அழைக்கப்படும் ஒருவித வண்டு வகை தான் அமெரிக்காவில் உருளைக்கிழங்குப் பயிரைப் பெருமளவில் நாசம் செய் கின்றது. ஆனால், இப்போது உருவாக் கப்பட்டுள்ள இந்தப் புதிய ரக உருளைக் கிழங்கின் இலைகளைக் கொலராடோ வண்டுகள் உண்ணும்போது, அவற்றில் படிந்துள்ள தார் போன்ற பொருள் அந்த வண்டுகளை வெகுவாகப் பாதிக்கின்றது. பெண் வண்டுகள் இந்த இலைகளை உண்ணும்போது அவற்றின் இனப் பெருக்கத்திறன் மிகவும் பாதிக்கப் படுகிறது.

கொலராடோ வண்டுகளைப் போலவே இதர வகையான பூச்சிகளை யும் இந்தப் புதிய உருளைக்கிழங்கு ரகம் அருகே நெருங்கவொட்டாமல் தடுக்கிறது. பொலிவியா நாட்டு உருளைக்கிழங்கு ரகத்திலிருந்து இந்தப் புதிய ரக உருளைக் கிழங்கைக் கார்நெல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 15 ஆண்டுக்கால ஆராய்ச்சிக்குப் பிறகு உருவாக்கியுள் ளனர். பெரு நாட்டின் தலைநகரான லிமாவில் உள்ள சர்வதேச உருளைக் கிழங்கு ஆய்வு மையமும் இதற்கு ஒத் துழைப்பு அளித்துள்ளது.



# பெண்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

சமூக நலத்துறையில் இடம் பெறும் பல்வேறு நலத் திட்டங்களில் பெண்களுக்காகப் பெண்கள் கூட்டுற வுச் சங்கம் அமைத்து வறுமைக் கோட்டிற்கும் கீழுள்ள பெண்களுக் குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இக்கூட்டுறவுச் சங்கங்களின் முக்கிய நோக்கம், ஆண்டு வரு மானம் ரூ.6,400-க்கும் குறைவாக உள்ள பெண்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிப்பதாகும். இதன் மூலம் அவர்களின் குடும்பங் களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக் கும் பொருட்டு வழிவகைகள் செய்யப் படுகின்றன.

தற்சமயம் ஒரு இலட்சம் பெண் களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது அரசின் கொள்கையாகும். இச் சங்கங்களில் உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும், அரசு சார்ந்த திட்டங்கள் மூலம், வழங்கப் பட்டு வருவதால் நிலையான சந்தை வாய்ப்புக் கிடைத்து வருகிறது.

**மகளிர் கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள்**

கீழ்க்கண்ட வகை மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறையின் மூலம் செயல்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| அ) மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் | .. 73 |
| ஆ) ஊட்டச்சத்து மற்றும் இணை உணவு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் | .. 22 |
| இ) சாக்கட்டி தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் | .. 19 |
| ஈ) பெண்கள் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கம் | .. 13 |
| உ) மகளிர் காலணி தொழிற் கூட்டுறவுச் சங்கம் | .. 38 |
| ஊ) திரவ சோப்புத் தயாரிக்கும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கம் | .. 1 |
| எ) மகளிர் நல்லூர் கயிறு தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் | .. 1 |
| மொத்தம் | 167 |

**தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் (இலவசச் சீருடைத் திட்டம்)**

ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் சுமார் 34 இலட்சம் மாணவர்களுக்கும், 30 இலட்சம் மாணவிகளுக்கும் மேலும் 3.4 இலட்சம் மாணவிகளுக்குத் ஆடைகள் இந்த மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கம் மூலம் தைத்து வழங்கப்படுகின்றன. இதே போன்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக் கட்டுப் பாட்டின் கீழ் பயிலும் பள்ளி மாணவ மாணவியர் ஆகியோர் களுக்கு இலவசமாக வழங்கப்படும் சீருடைகளையும் மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தைத்து வழங்குகின்றன. இதன் மூலம் சுமார் 5.48 கோடி ரூபாய் தையற் கூலியாக அங்கத்தினர்களுக்கு வழங் கப்படுகின்றன. இச்சீருடை தைப்ப தற்குத் தேவையான துணிகள் 'கோ-ஆப்டெக்ஸ்', 'காதி' துறைகள் மற்றும் தமிழ்நாடு துணி நூல் நிறு வனங்கள் (Tamil Nadu Textile Corporation) மூலம் பெறப்படு கின்றன.

**காலணி தொழிற் கூட்டுறவுச் சங்கம் (இலவசக் காலணி வழங்கும் திட்டம்)**

ஒவ்வொரு ஆண்டும் சுமார், 3 இலட்சம் ஜோடி காலணிகள் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவி களுக்கு இத்துறையின் மூலம் உற் பத்தி செய்யப்பட்டு வழங்கப்படு கின்றன. தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சி நிறுவனம் இக்காலணி களைத் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களை வழங்கி வருகிறது.

**இணை உணவு மற்றும் ஊட்டச்சத்து தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கம் (ஊட்டச்சத்து மாவு)**

ஆறு மாதங்களுக்கு மேல், ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளுக்

கும் கருவுற்ற பெண்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தின் மையங்களக்குத் தேவையான இணை உணவு மற்றும் ஊட்டச்சத்துணவினை 22 மகளிர் ஊட்டச்சத்துத் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் தயாரித்து வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 995 மெட்ரிக் டன் கோதுமை இலவசமாகக் கொடுத்து வருகிறது. இதைத் தவிர பொது விநியோகத் திட்டத்தின் மூலம் 1,480 மெட்ரிக் டன் கோதுமை மலிவு விலையில் வழங்கி வருகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான நிதி உதவிகளை உலக வங்கி சுவீடன் சர்வதேச நிதியுதவி நிறுவனம், இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு அளித்து வருகிறது.

**சாக்கட்டிச் சங்கம்**

இத்துறையின் கீழுள்ள சாக்கட்டித் தயாரிக்கும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களில் தயாரிக்கப்படும் சாக்கட்டிகள் அரசால் நடத்தப்படும் பள்ளிகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

**எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கம்**

இத்துறையின் கீழ் '13 மகளிர் எழுதுபொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிவருகின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் இதர அரசு நிறுவனங்களுக்குத் தேவையான பதிவேடுகள் இச்சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகின்றன.

**கயிறு தயாரிக்கும் பெண்கள் கூட்டுறவுச் சங்கம்**

தஞ்சை மாவட்டத்தில் உள்ள நல்லூரில் இருக்கும் பெண்கள் கயிறு தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கத்தில் தென்னை நார் பிரித்து எடுக்கும் தொழிலின் மூலம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது.

இச்சங்கத்தின் கீழுள்ள ஐந்து உற்பத்தி நிலையங்களின் மூலம், தென்னை நார் பிரித்து எடுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகத்தின் மூலம், மானியம் பெற்று, பணிமனைகள் (Work shed) அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர இந்தியக் கயிறு வாரியம், ஆண்டிற்கு 80 நாட்களுக்கு 20 சதவிகிதத் தள்ளுபடியில் விற்பனை செய்ய ஊக்குமளித்து வருகிறது. இவ்வாரியம் மூலம் மாதிரி கயிறு கிராமம் (Model coir village) அமைக்கப்பட்டுள்ளது.



**திரவ சோப்பு**

1987-ஆம் ஆண்டில் திரவ சோப்புத் தயாரிக்கு சங்கம் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள நாராயணபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் திரவ சோப்பு, சோப்புத் தூள் மற்றும் பாத்திரங்கள் சுத்தம் செய்யும் தூள் ஆகியவற்றைத் தயாரித்து வருகின்றது.

**இச்சங்கங்களைப் பற்றிய ஒரு கண்ணோட்டம்**

1991-92-இல் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை 73, அவற்றில் பயன்பெறுவோர் 26,135 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.5,48,00,000

காலணி சங்கங்களின் எண்ணிக்கை 38, அவற்றில் பயன்பெறுவோர் 3,512 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.12,75,000

சாக்குக்கட்டி சங்கங்களின் எண்ணிக்கை 19, அவற்றில் பயன் பெறுவோர் 1,052 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.51,000.

சத்துணவு மற்றும் இணை உணவுச் சங்கங்களின் எண்ணிக்கை 22, அவற்றில் பயன்பெறுவோர் 1,154 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.31,02,000.

எழுதுபொருள் சங்கம் 13, அவற்றில் பயன்பெறுவோர் 1,129 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.5,40,400.

திரவ சோப்புச் சங்கம் 1, அவற்றில் பயன்பெறுவோர் 28 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.11,500.

நல்லூர் கயிறு சங்கம் 1, அவற்றில் பயன்பெறுவோர் 115 பேர். வழங்கப்படும் ஊதியம் ரூ.1,05,000.

மொத்தச் சங்கங்களின் எண்ணிக்கை 167.

அவற்றின் மூலம் பயன் பெறுவோர் 33,125 பேர்.

வழங்கப்படும் மொத்த ஊதியம் ரூ.5,98,84.900.

## மாணவர் பக்கம்

# பொது அறிவுத் தகவல்கள்

• காப்பியின் பிறப்பிடம் எத்தியோப்பியா ஆகும். நிலக்கடலையின் தாயகம் பிரேசில் ஆகும்.

• 'கோவா' கீழ்நாடுகளின் உரோமாபுரி எனப்படுகிறது. இங்கு கிறித்துவ ஆலயங்கள் மிகுதி.

• நமது உடலில் சுமார் 200 அவுன்சு குருதி உள்ளது. குருதியளிப்பு செய்யும் போது 2 அவுன்சு எடுக்கப்படுகிறது.

• ஒரு காரட் வைரம் என்கிறோம். ஒரு காரட் என்றால் 200 மிலிகிராம் ஆகும்.

• இந்தியாவில் 1963-இல் விண்வெளி ஆராய்ச்சித் திட்டம் துவங்கப்பட்டது.

• உலகிலேயே விரைவாகப் பேசக்கூடிய மொழி பிரெஞ்சு, அடுத்து சப்பானிய மொழி, அதற்கடுத்தது செர்மன் மொழி ஆகும்.

• அலகாபாத் நகரப் பகுதியில் தான் இந்திய நிலையான நேரம் கணிக்கப்படுகிறது.

• நம் உடம்பில் குருதி ஓட்டமில்லாத நிரந்தரப் பகுதி விழிவெண்படலம் (Cornea) ஆகும்.

• நமது நாட்டில் 'கருப்பு' துக்கத்தைக் குறிக்கும் நிறமாகும். ஆனால் சீனாவில் வெள்ளை நிறம் துக்கத்தைக் குறிக்கும். துருக்கியில் நீலநிறமும், எகிப்தில் மஞ்சள் நிறமும் துக்கத்தைக் குறிக்கும்.

• 'சாக்' கடலில் மீன்களே கிடையாது.

• ஒட்டகச் சிவிங்கியின் குருதி அழுத்தம் மனிதனை விட இரண்டு மடங்கு மிகுதியாகும்.

• ஒட்டகத்தை விட நீண்ட நாட்கள் குடிநீரின்றி வாழும் தன்மை எலிகளுக்கு மட்டுமே உண்டு.

• நம் உடலில் உள்ள எல்லா பாகங்களிலும் செல்வளர்ச்சி உள்ளன; ஆனால் மூளையில் மட்டும் செல் வளராது. புது செல்கள் தோன்றாது.

—நன்றி: 'தமிழ்ப்பாவை'



## ஏசு பிறந்தார்

மக்கள் வாழ எண்ணியே
மகான் ஏசு பிறந்தார்
திக்கு எட்டும் கிறித்தவர்
தெய்வ மாகச் சிறந்தார்!

அன்பு வேண்டும் என்றார்
அகில மெங்கும் திகழ்ந்தார்
துன்பம் வந்த போது
துவள வேண்டாம் என்றார்!

உலகம் போற்றும் பைபிளில்
உயர்ந்த கருத்து சொன்னார்
திலகம் போன்று நாட்டிலே
திகழ நன்மை செய்தார்!

ஏசு சொன்ன கருத்தினை
ஏற்று நாளும் வாழுவோம்
மாசு இல்லா உள்ளமே
ஏசு வாழும் இல்லமே!

—பி.வி. கிரி



## கிறிஸ்துமஸ் மரம்

• கிறிஸ்துமஸ் மரத்தை அலங்கரித்து ஆனந்திக்கும் பழக்கத்தைக் கிறிஸ்துவ மக்களுக்குக் கற்பித்தவர், விசுவாச வீரர் மார்ட்டின் லூத்தர் அவர்களே ஆவார். இப்பழக்கம் 1840-ஆம் ஆண்டு உலகெங்கும் பரவ ஆரம்பித்ததாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன.

—நன்றி: 'கிறிஸ்மஸ் களஞ்சியம்'



## முதல் கிறிஸ்துமஸ் வாழ்த்து

• கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அனுப்பப்படுகின்றன.

1846-இல், முதல் கிறிஸ்துமஸ் வாழ்த்து, ஜோசப் கன்டால் என்னும் ஓவியரால் வரையப்பட்டது. இது கடிதம் எழுதும் நேரத்தை மிச்சப்படுத்தியது. இது பலராலும் பாராட்டப் பெற்று கடைப்பிடிக்கப்படுகிறது.

# கூட்டுறவுத் துறையில் இயங்கி வரும் மருத்துவமனை

**பல்வேறு தொழில்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. கைவினைப் பொருள்கள், ஆடு, கோழி, பன்றி, வளர்த்தல், பால், நுகர்பொருள் வாணிகம், இப்படிப் பல தொழில்கள் கூட்டுறவு மூலம் பாங்காய் வளர்ந்து வருகின்றன. இதே போல மருத்துவமனையும் கூட்டுறவுக் குடையின் கீழ் வளர்ந்து வருகிறது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.**

காமராசர் மாவட்டம், தளவாய்புரத்தில், ஏ.எஸ். பழனிச்சாமி நாடார் சுகாதாரச் சங்க மருத்துவமனை ஒன்று இயங்கிவருகிறது. இது கூட்டுறவுத் துறையில் நடத்தப்பட்டு வரும் மருத்துவமனையாகும்.

**இந்தச் சங்கத்தின் நோக்கங்களாவன:**

சங்க உறுப்பினர்களுக்குக் குறைந்த செலவில் மருத்துவச் சிகிச்சை அளித்தல் உடல் அரோக்கியத்தைப் பேணுதல், உறுப்பினர்கள் அவர்களின் குடும்பத்தினரின் சிகிச்சைக்காகும் பொருளாதார நட்டத்தைக் கட்டுப்படுத்துதல்.

உறுப்பினர்களின் நலனுக்காக, தகுதி பெற்ற மருத்துவர், மருந்தாளுநர் முதலியவர்களை வைத்து மருத்துவமனை நடத்துதல்.

உறுப்பினர்களின் நன்மைக்காகக் குழந்தைகள் நல மையம், மகப்பேறு இல்லம் நடத்துதல்.

கிராமப்புறச் சூழ்நிலையைச் சுத்தமாக வைத்திருத்தல், தொற்று நோய்களிலிருந்து தடுத்தல்.

உறுப்பினர்களிடையே பொறுப்புணர்ச்சியை வளர்த்தல் குடும்ப நலத்தைக் காத்தல்.

பொதுவாக மேலே சொல்லப்பட்டவைகளில் ஒன்று அல்லது அனைத்தையும் கூட்டுறவுச் சட்டம், விதி இவைகளுக்கு உட்பட்டு நடத்துதல்.

சங்கததைப் பதிவு செய்யும் நேரத்தில் தளவாய்புரத்திலும் இதன் சுற்று வட்டாரம் 15 கி.மீ. தொலைவு வரையிலும் அரசு மருத்துவமனை ஏதும் கிடையாது. மருத்துவப் பட்டம் பெற்ற மருத்துவர்களின் எண்ணிக்கையோ மிகக் குறைவு. போக்குவரத்து வசதியும் போதிய அளவு இல்லை. மகப்பேறு இல்லமும் அண்மையில் ஏதுமில்லை. இந்நிலையில் இங்குள்ள பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து சுகாதாரக் கூட்டுறவுச் சங்கத்தை நிறுவினர். சங்கத்திற்கு மருத்துவமனைக் கட்டடம், மகப்பேறு இல்லம் கட்ட முடிவெடுத்தனர்.

சங்கம் ஆரம்பித்தவுடன் களவாய்புரம் ஊராட்சிமன்றக் கட்டடத்தின் ஒரு பகுதியில் பகுதி நேர மருத்துவ அலுவலரால் மருத்துவமனை நடத்தப்பட்டது. சங்கம் வளர்ச்சிஅடைய அடைய சொந்தக் கட்டடம் கட்டவேண்டிய நிலை ஏற்பட்டது.

தாராள மனப்பான்மை கொண்ட திருவாளர் ஏ.எஸ். பழனிச்சாமி நாடார் அவர்களின் குமாரர்கள் கட்டடம் கட்ட நன்கொடையாக ரூ.15,000 அளிப்பதற்கு முன்வந்தார்கள். அரசு மானியம் ரூ.15,000-த்துடன் ரூ.38,100.31 செலவில் 12 படுக்கைகள் கொண்ட பொதுப் பிரிவுக் கட்டம் 26.12.1961-ல் கட்டி முடிக்கப்பட்டது.

பின்னர் திரு. ஏ.எஸ். பழனிச்சாமி நாடார் அவர்களின் குமாரர்கள் நன்கொடைத் தொகை ரூ.19,000-ம் அரசு மானியம் ரூ.16,000-ம் சேர்த்து ரூ.35,000 செலவில் தங்கள் தாயாரின் நினைவாக 14 படுக்கைகள் கொண்ட மகப்பேறு இல்லம் 30.9.73-இல் கட்டப்பட்டது.

திரு. பி.கே.எல். மாரிமுத்து நாடார் அவர்களின் நன்கொடை தொகை மூலம் ரூ.6,000 தொற்று நோய் (காலரா) பிரிவுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

நவீனமயமாக்கப்பட்ட Stalbion 60/Simplex 60 M.A. X-Ray பிரிவு ரூ.72,500 மதிப்பில் தீர்மானிக்கப்பட்டு குறைந்த கட்டணத்தில் பொதுமக்கள் வசதிக்காகச் செயல்பட்டு வருகிறது.

இது தவிர, நவீன அறுவைச் சிகிச்சைப்பிரிவு ரூ.62,800 மதிப்பில் அமைக்கப்பட்டு, சிறந்த முறையில் நலிவுற்ற பிரிவினருக்குக் குறைந்த கட்டணத்தில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு வருகிறது.

'குமுதம்' வார இதழ் நடத்தி வரும் 'மாதம் ஒரு மாவட்டத்தில் பொதுப்பணி நிறைவேற்றுதல்' என்ற திட்டத்தின் கீழ், காமராசர் மாவட்டத்தில் எங்கள் கூட்டுறவு மருத்துவமனை தேர்வு செய்யப்பட்டு, இ.சி.ஜி. கருவி நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

தளவாய்புரம் மற்றும் அதன் சுற்று வட்டாரம் 15 கி.மீ. தொலைவில் உள்ள சுமார் 50 கிராமங்களில் வசித்து வரும் சுமார் 60,000 ஏழை எளிய மக்கள் மிகக்

குறைந்த கட்டணத்தில் மருத்துவ வசதி இக்கூட்டுறவு மருத்துவமனை மூலம் பெற்று பயனடைந்து வருகிறார்கள்.

மருத்துவமனை அலுவலகம், பொதுப் பிரிவு, மகப்பேறு பிரிவு, காலரா பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு மருந்து சோதனைக் கூடப் பிரிவு ஆகியவைகள் உள்ளன.

முதலுதவி, கட்டு கட்டுதல், மருந்துகள், குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதத் தடுப்பு மருந்து, டாக்டரின் பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. பெரிய மற்றும் சிறிய அறுவைச் சிகிச்சைகள் மிகக் குறைந்த கட்டணத்தில் நன்கு செய்யப்படுகிறது. தினமும் 100 முதல் 150 வெளி நோயாளிகள் மருத்துவ வசதி பெற்று பயனடைந்து வருகிறார்கள். பொது மற்றும் மகப்பேறுப் பகுதிகளில் உள்ள படுக்கைகள் மொத்த எண்ணிக்கை 26. மகப்பேறு கட்டணமாக ரூ.50 மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

**சிறப்பு அம்சங்கள்**

நிர்வாகச் செலவில் ஏற்படும் மொத்த இழப்பில் - ஓராண்டிற்கு 75 சதவிகிதம் அல்லது 10,000 என்ற உச்ச அளவுக்குட்பட்டு, 1975-76-ஆம் ஆண்டிலிருந்து தொடர் நிர்வாக மானியமாகத் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இதனை நிரந்தர நிர்வாக மானியமாக சிப்பந்தி சாதல்வார் செலவில் 50 சதம் வழங்க வேண்டும் எனக் கோரிய பிரேரணை மண்டல இணைப்பதிவாளர் அவர்கள் மூலம் அரசுக்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், மருத்துவத்துறை மற்றும் குடும்பநல நலம், சென்னை-6 அவர்களால் குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்ய இந்த மருத்துவமனையைத் தேர்ந்தெடுத்து அனுமதி வழங்கியுள்ளார்கள்.

**எதிர்காலத் திட்டங்கள்**

1. குளியலறை, கழிவறை வசதிகளுடன் கூடிய நவீன அறுவைச் சிகிச்சைப் பிரிவு கட்டுதல், இதற்கான பிரேரணை ஏற்கெனவே வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.

2. மருத்துவ அதிகாரிகள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர். எனவே, இவர்களுக்குத் தனித்தனியே குடியிருப்பு வசதி செய்தல் மற்றும் இதர பணியாளர்களுக்கும் குடியிருப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

3. ஆண்டுக்குச் சுமார் ரூ.2.00.000 வரை மருந்துகள் நோயாளிகளுக்குக் குறைந்த கட்டணத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அரசு உதவியைப் பெற்று ஏழை மக்களுக்கு இதனையும் இலவசமாக வழங்குதல்.

4. மருத்துவமனையில் 'ஸ்கேன்' பிரிவு ஏற்படுத்துதல்.

5. சிகிச்சை பெற்றுச் செல்லும் நோயாளிகளுக்கும் அவசர நோயாளிகளுக்கும் வாகன வசதி ஏற்படுத்தித் தருதல்.

6. உள் நோயாளிகளுக்கு அரசு மானியத்தில் ரொட்டி, பால், பழம் வழங்குதல்.



மருத்துவமனையில் நடைபெறும் அறுவைச் சிகிச்சைகள்

இப்பகுதி விசைத்தறிக் கூடம் நிறைந்த இடமாக உள்ளதால் தினமும் கை அடிபடுதல், விரல் நசுங்குதல் போன்றவை சாதாரணமாக நடைபெறுகிறது. பெரிய மற்றும் சிறிய அறுவைச் சிகிச்சைகள் கைதேர்ந்த மருத்துவரால் நடத்தப்படுகிறது. தொண்டையில் புற்றுநோய், வயிற்றில் புற்று நோய் தோல் பட்டை எலும்பில் புற்று நோய், வயிற்றில் புண், குடலில் புண் அல்லது துவாரம் விழுதல், இரண்யா ஹைடிரோசில், தொண்டைப் புண் சிறுநீரகத்தில் கல் முதலிய பெரிய அறுவைச் சிகிச்சைகள் முதல் எல்லா வற்றுக்கும். சிறந்த முறையில் சிகிச்சையளிக்கப்படுகிறது. எலும்பு முறிவு, பல் பிடுங்குதல் பல் சம்பந்தப்பட்ட நோய்கள், காது, மூக்கு, தொண்டை முதலிய நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவீன வசதிகளுடன் கூடிய அறுவைச் சிகிச்சைக் கூடம் எமது மருத்துவமனையில் உள்ளது.

இம்மருத்துவமனையானது, கூட்டுறவுத் துறையில் பழுத்த அனுபவமுள்ள பெரியோர்களாலும் நன்கொடையாளர்கள் ஆகியோரின் உதவியாலும் அரசு மானியத்தாலும் வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நோயாளிகள் மிகக் குறைந்த கட்டணத்தில் மருத்துவ வசதியை நன்கு பயன்படுத்திக் கொள்வதால் இந்த வட்டாரத்தில் புகழ் பெற்று விளங்குவதோடு, தமிழ்நாட்டிலேயே முன்மாதிரியாக உள்ளது. தற்போது சங்கம் முதுநிலை ஆய்வாளர்/தனி அலுவலர் நிர்வாகத்தின் கீழ் இது இயங்கி வருகிறது.

# வாழ்த்துக்கள் பிறந்த கதை

விழாக்காலங்களில், நண்பர்கள், உறவினர்கள் என்று பலரைச் சந்தித்து, உள்ளத்தின் நெகிழ்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் நாம் வாழ்த்துகிறோம். நேரில் சந்திப்பவர்களைத் தவிர, தொலைவில் இருக்கும் நண்பர்களுக்கும் நாம் வாழ்த்து மடல்களை அனுப்பி மகிழ்விக்கிறோம்.

வாழ்த்து மடல்கள், நமது உள்ளத்தின் உணர்வுகளை, நட்பின் பிரியத்தைப் பகிர்ந்து கொள்ள உதவும் ஊடகம். இன்று உலகெங்கிலும் விழாக்காலங்கள், திருமணம், பிறந்த நாள் என்று வரும்போது, தபால்காரரின் பைகளில் உலவி வரும் இந்த வாழ்த்து மடல்களின் வரலாற்றை நாம் தெரிந்து கொள்வோமா?

நூற்றாண்டுகளுக்கு முன்னர் சீனர்கள் தங்களின் புத்தாண்டுப் பிறப்பை வாழ்த்துக்கள் அனுப்பி மகிழ்வுடன் கொண்டாடினர்.

எகிப்தில் ஆறாவது நூற்றாண்டில் எழுப்பப்பட்ட சமாதிகளின் மீது தனி நபர்களின் வாழ்த்துக்கள் பொறிக்கப்பட்டன. அக்காலத்தில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் ஊடகமாகப் பதக்கங்கள், தாமிர நாணயங்கள் உட்பட பயனுள்ள பலப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டன.

ஜெர்மனியர்கள் பதினான்காம் நூற்றாண்டில் செய்யப்பட்ட வாழ்த்து மரச் சட்டக் கலைப்படைப்புகளைப் பயன்படுத்தினர்.

பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், பத்திரிகைகளில் கவிதைகள் வாயிலாக வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இங்கிலாந்து, அமெரிக்க முதலிய நாடுகளில் கைகளினால் எழுதப்பட்ட வாழ்த்து மடல்கள் வெகு நாட்களுக்கு முன்பிருந்தே அனுப்பப்பட்டு வந்தன. இவை இன்றைய மடல்களைப் போலல்லாமல், பெரியதாகவும், தனி நபர்களை வாழ்த்தியும், நண்பர்களுக்கும், குடும்ப அங்கத்தினர்களுக்கும், காதலர்களுக்கும் அனுப்பப்பட்டன. இதுவே, இன்றைய வாழ்த்து மடல் கலைக்கு முன்னோடியாகும்.

கிருஸ்துமஸ் வாழ்த்து மடல்கள் அனுப்பும் பழக்கம் இங்கிலாந்து நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டில் உருவானது. பதினாறு வயது 'வில்லியம் மா எக்லி' உருவாக்கிய கிறிஸ்துமஸ்-புத்தாண்டு வாழ்த்து மடல் இன்று பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. வாழ்த்து மடல்கள் அனுப்பும் பழக்கம் இங்கிலாந்திலிருந்து மற்ற நாடுகளுக்குப் பரவியது.

ஆரம்ப கால வாழ்த்து மடல்கள் பூக்கள், இளம்பெண்களின் படங்கள், இயற்கைக் காட்சிகள், கிருஸ்துமஸ் அடையாளங்களான வால் நட்சத்திரம், வான சாஸ்திரிகள், ஒட்டகங்கள், குழந்தை ஏசு என்று பலவற்றைத் தாங்கி வந்தன.

1900-களின் ஆரம்பத்தில் வாழ்த்து மடல்கள் மிகுந்த கலை நயத்துடன் வெளியிடப்பட்டன. 19-ஆம் நூற்றாண்டில் பெரும்பாலும் ஒரு பக்க மடல்களே வெளியிடப்பட்டன. பின்பு இருபக்க மடல்கள் புழக்கத்திற்கு வந்தன.

லூயிஸ் பிராங் என்பவர் 1879-ஆம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்து மடல்களை வெளியிட்டார். 1887-ஆம் ஆண்டு அவர் காதலர்கள் தினமான 'வாலன்டைன் 61' தினத்தில் சிறப்பு மடல்களை வெளியிட்டார். இது ஐந்து சென்டிலிருந்து மூன்று டாலர்கள் வரை விற்கப்பட்டது. பின்பு லித்தோகிராம் முறையில் வண்ணத்தில் வாழ்த்து மடல்கள் வெளியிடப்பட்டன.

விடுமுறை நாட்களுக்கு ஏற்ப வாழ்த்து மடல்கள் 1912-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன.

பின்பு, 1914-இல் அன்னையர் தினா, 1916-இல் தந்தையர் தினம், 1919-இல் நண்பர்கள் தினம் என்று பல தினங்களுக்கு ஏற்ப வாழ்த்து மடல்கள் வெளியிடப்பட்டன. 1920-களில் ஏற்பட்ட விளம்பர உத்திகள் மூலம் வாழ்த்து மடல்களின் தயாரிப்பு, தொழில் ரீதியாகச் சிறப்புப் பெற்றது. இன்று தழைத்து நிற்கும் இத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்பத்தினால் சிறப்படைந்துள்ளது.

வாழ்த்து தெரிவிப்பது என்பது நமது பாரம்பரியமும்கூட, சிலப்பதிகாரத்தில் கண்ணகி-கோவலன் திருமணத்தைத் தேவர்களும், முனிவர்களும் வாழ்த்தினார்கள் என்பதிலிருந்து, சமீபத்திய இலக்கியங்கள் வரை வாழ்த்துக்கள் குறித்து நமக்கு எடுத்துரைக்கின்றன. ஆனால், வாழ்த்து மடல்கள் அனுப்புவது என்பது காலனியாதிக்கத்தில் கலாச்சாரப் பாதிப்பு என்றே கூறவேண்டும்.

- நன்றி: 'தூவானம்'.

உண்மை வெளிச்சம் கண்டிப்பாக இருளைப் போக்கிவிடும். அது போலவே உண்மை நிச்சயம் நன்மையை உண்டாக்கும்.

—சுவாமி விவேகானந்தர்



# தமிழ்நாட்டை மேம்படுத்தும் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம்!

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கிராமக் குடிநீர், கிராமச் சாலைகள், தெரு விளக்குகள், பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சிறுபாசன மேம்பாடு, தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல் ஆகிய சிறப்புத் தன்னிறைவுத் திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1991-92 நிதியாண்டிற்கு ரூ.194.6 கோடி ரூபாயும், 1992-93 நிதியாண்டிற்கு ரூ.192.62 கோடி ரூபாயும், 386 ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, சிறப்புத் தன்னிறைவுத் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அன்னத்துப் பணிகளும் முடியும் தறுவாயை எட்டிக்கொண்டு வருகிறது.

**ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்**

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிக்கும் திட்டம் ஆகிய இரண்டையும் இணைத்து ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற பெயரில் 1989-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு 80 சதவிகிதமும் மாநில அரசு 20 சதவிகிதமும் நிதி வழங்குகிறது.

1991-92-ஆம் ஆண்டில் ரூ.211 கோடி மதிப்பீட்டில் தொகுப்பு வீடுகள், பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், கிராமச் சாலைகள் மேம்படுத்துதல் போன்ற பணிகள் செயல்படுத்தப்பட்டன. 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூ.82 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.73. கோடி மதிப்புள்ள பணிகள் நிறைவேற்றப்பட்டன. மேலும், ரூ.85 கோடி மதிப்புள்ள பணிகள் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

**மில்லியன் கிணறு திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் 2,771 பாசனக் கிணறுகள் இலவசமாக வெட்டி கட்டிக் கொடுக்கப்பட்டன. மேலும், 5658 கிணறுகள் அமைக்கின்ற பணி நடப்பு நிதியாண்டிற்குள் முடிக்கப்பெறும்.

**ஆதி திராவிடர்களுக்கு இலவசத் தொகுப்பு வீடுகள்**

8,898 இலவசத் தொகுப்பு வீடுகள் ரூ.9.62 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டு ஆதிதிராவிடர்களுக்கு வழங்கப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 24,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

**ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள கிராமப்புற மக்கள் பயனடைகின்ற வகையில் வங்கிக் கடன் அரசு மானிய உதவியுடன் விவசாயப் பணிகளை மேம்படுத்த, கறவை மாடுகள், ஆடுகள் வாங்க, வளர்க்க, விவசாயக் கருவிகள் வாங்க வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான மானியத் தொகையினை 50 சதவிகிதம் மத்திய அரசும், 50 சதவிகிதம் மாநில அரசும் வழங்கி வருகிறது. நடப்பு நிதியாண்டில் 1,23,969 நபர்கள் பயனடையும் விதத்தில் ரூ.43.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுகாறும் ரூ.1,698 இலட்சம் வழங்கப்பட்டு 55,640 நபர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்திருக்கின்றனர்.

**ஊரகச் சுகாதாரத் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், கிராமங்களில் வாழுகின்ற தனி நபர் வீடுகளுக்குக் கழிப்பறைகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு மாநில அரசு, யுனிசெஃப் நிறுவனம், மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது. பெரியார் மாவட்டத்தில் 33,304 கழிப்பறைகள் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் பெரியார் மாவட்டத்தில் ரூ.80 இலட்சம் செலவில் 5,000 கழிப்பிடங்கள் கட்டப்பட்ட இருக்கின்றன. எஞ்சியுள்ள 20 மாவட்டங்களில் ரூ.4 கோடி மதிப்பீட்டில் 25,000 கழிப்பிடங்கள் கட்ட மதிப்பிடப்பட்டுள்ளது.

**ஊரகக் குடிநீர்த் திட்டம்**

கிராமப்புறங்களில் குடிநீர்த் திட்டங்களைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் நிறைவேற்றி, உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் ரூ..1.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. தற்போது ரூ.5 கோடியாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 93,526 ஆழ்துளைக் கிணறுகளும், 36,325 துணைக் கிணறுகளும் அதில் அமைக்கப்பட்ட 24,470 கையிறைப் பான்களும் பராமரிக்கப்படுகின்றன.

### கிராமப்புற மகளிர், குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறப் பெண்கள் குழுக்களாக அமைக்கப் பட்டு, தொழிற்பயிற்சி அளிக்கப் படுகிறது. இதற்காக ரூ.20.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு ரூ.15.20 இலட்சம் செல விடப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண் டிற்குள் ரூ.15 இலட்சம் செலவில் 300 குழுக்கள் அமைக்கப்பட்டு 62,190 பெண்களுக்குக் கைத் தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### ஊரக இளைஞர் சுய வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

கிராமங்களில் வாழுகின்ற வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள இளைஞர்களுக்குச் சிறு தொழில் களில் பயிற்சியளித்து அவர்கள் சுய மாக வேலைவாய்ப்பினைப் பெறச் செய்வதே இத்திட்டத்தின் நோக்க மாகும். நடப்பு நிதியாண்டில் ரூ.2.64 கோடி செலவில் 19,800 இளைஞர்களுக்குச் சுய வேலை வாய்ப்புப் பயிற்சியளிக்கத் திட்ட மிடப்பட்டு இதுகாறும் ரூ.34 இலட்சம் செலவில் 9,668 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். நடப்பு நிதியாண்டிற்குள்ளாக ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் பயிற்சியளிக் கப்படும்.

### ஊராட்சித் தெரு விளக்குகள்

ஊராட்சிகள், பேரூராட்சிகள் ஆகியவற்றில் தெரு விளக்குகள் நல்ல முறையில் எரிவதற்கு தரமான குழல் விளக்குகள், பிறபொருட்கள் பெற்றுக் கொடுப்பதற்கு உயர்மட்டக் குழு ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. தெரு விளக்குகளைப் பராமரிப்பதற்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1.50 கோடி ஒதுக்கப் பட்டு வந்தது. தற்பொழுது ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### டானிடா திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மரக்காணம், பரங்கிப்பேட்டை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் 3 ஆண்டுக் காலத் தில் குடிநீர்த் திட்டம், சுற்றுப்புறச் சுகாதாரம், காடுகள் வளர்த்தல் ஆகிய வளர்ச்சிப் பணிகளுக்காக டென்மார்க் அரசின் நிதியுதவியுடன் ரூ.8.23 கோடி மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள் ளன. நடப்பு நிதியாண்டில் ரூ.2.52



கோடி மதிப்பீட்டில் பணிகள் நிறை வேற்றப்படும்.

### ஊராட்சி ஒன்றியம், கோட்ட வளர்ச்சி அலுவலகங்களுக்குக் கட்டடங்கள்

நடப்பு நிதியாண்டில் பகுதி-2 திட்டத்தின் கீழ் ரூ.35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கீழையூர், எஸ். புதூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு அலுவலகக் கட்டடங்களும், தஞ்சாவூர், தேவகோட்டை ஆகிய இடங்களில் கோட்ட வளர்ச்சி அலுவலகமும் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

### பேரூராட்சிகள்

நடப்பு நிதியாண்டில், பேரூராட்சி களில் உள்ள சாலைகளைச் சீர் படுத்த, மேம்படுத்த இதுகாறும் ரூ.8.46 கோடி செலவிடப்பட்டுள் ளது. குடிநீர்க் குழாய்களை மாற்றி யமைப்பதற்கு ரூ.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.14 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது. சிறிய குடிநீர்த் திட்டங்களுக்காக ரூ.14 இலட்சம் ஒதுக்கப்பட்டு ரூ.12 இலட்சம் செலவிடப்பட்டிருக் கிறது. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 5,945 தொகுப்பு வீடுகள் கட்ட ரூ.828 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. புழுதிகள் அற்ற சாலைகள் அமைக்க ரூ.50 இலட்சமும், கழிவுநீர்க் குழாய் இணைப்புகளுக்காக ரூ.10 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பேரூராட்சிகளுக்குச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் பேரூராட்சி களில் அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தருவதற்காக ஆண்டு ஒன்றிற்கு ரூ.50 கோடி வீதம், 3 ஆண்டுகளில் ரூ.150 கோடி மதிப் பீட்டில் பணிகளை நிறைவேற்று வதற்காகத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### சென்னை மாநகராட்சி

சென்னை மாநகராட்சி மேம் பாட்டிற்காக ரூ.85 கோடி நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு பணிகள் நடைபெற்று வரு கின்றன. துப்புரவுப் பணிகளை நல்ல முறையில் நிறைவேற்ற ரூ.6 கோடி செலவில் புதிய வாகனங் களை வாங்கவும், மெரீனா மற்றும் எல்லியட்ஸ் கடற்கரைப் பகுதி களைப் பராமரிக்க, அழகுபடுத்த ரூ.1.80 கோடியும், நகரின் மத்திய பகுதியில் குறுகலான பின்னிப் பாலத்தை ரூ.1.50 கோடி செலவில் அகலப்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைபிறப் பித்தார்கள்.

சென்னை மாநகராட்சியில் சொத்து வரி மூலம் ரூ.50 கோடி அளவிற்கு வசூலாகும் என எதிர் பார்க்கப்படுகிறது. மாநகராட்சி களில் வருவாயை அதிகரிக்கும் நோக்குடன் சொத்து வரி வசூலிக் கும் முறையைப் பரிசீலித்து, திருத் திய முறையை அமல்படுத்த அரசு கருதியுள்ளது. எழில் மிகு சென்னை-2000 திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 5 ஆண்டுகளில் ரூ.1,250 கோடி செலவில் பல் வேறு வளர்ச்சிப் பணிகள் நிறை வேற்றப்பட இருக்கின்றன. சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை 5 ஆண்டுகளில் ரூ.240 கோடிக்கான திட்டங்களை நிறைவேற்றும்.

### நேரு விளையாட்டரங்கம்

சென்னையிலுள்ள நேரு விளை யாட்டரங்கை அனைத்து நாட்டுத் தரம் வாய்ந்ததாகவும் பல்வேறு விளையாட்டுகளுக்குப் பயன்படக் கூடியதாகவும் அனைத்து வசதிகளை யும் கொண்ட நவீன விளையாட்ட ரங்காகவும் உருவாக்கவும் ரூ.36 கோடி செலவில் கட்டும் பணியை அரசு மேற்கொண்டுள்ளது.

தற்பொழுது சென்னை மாநகராட் சியில் 10,000 துப்புரவுப் பணி யாளர்கள் பல்வேறு பகுதிகளி லிருந்து பணிக்கு வருவதைக் கருத் தில் கொண்டு அவரவர் பணியிடங் களுக்கு ஏற்றவாறு அந்தந்தப் பகுதி யில் குடியிருப்பு வசதி செய்வதற் கான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**மதுரை மாநகராட்சி**

வளர்ந்து வரும் மதுரை மாநகரில் மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள், ஆகியவற்றைத் தூர் வாரவும், அப்பகுதிகளில் பணிகளை நிறைவேற்ற இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் கழிவு நீர் அகற்றும் இறைக்கும் நிலையத்தினைத் திறம்படச் செயல்படத் தேவையான பணியாட்களை நியமிக்கவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுறுத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நவீன அடுக்குமாடிப் பேருந்து நிலையம் ஒன்று ரூ.25 கோடி செலவில் அமைக்கப்படவுள்ளது. இதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டதும், பணிகள் நடைபெறும். இம்மாநகராட்சியின் வருவாய் நடப்பாண்டில் ரூ.2 கோடியாக உயர்ந்துள்ளது.

**கோயம்புத்தூர் மாநகராட்சி**

கோவை மாநகராட்சியில் மேலும் 600 துப்புரவுப் பணியாளர்கள் நியமனம் செய்யவும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் கோவை மாநகராட்சி இவற்றின் பொதுவான கட்டுப்பாட்டில் சிறுவாணிக் குடிநீர்த் திட்டம் இயங்கி வருவதை மாற்றி, கோவை மாநகராட்சியே இக்குடிநீர்த் திட்டத்தைப் பராமரிப்புச் செய்யவும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவுரை கூறி, அதற்கேற்பப் பணிகள் நடைபெற உள்ளன.

ரூ.4 கோடி செலவில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் சாலை மேம்பாட்டுப் பணிகளும், ரூ.20 இலட்சம் செலவில் புதியதாகத் தெருவிளக்குகள் அமைக்கும் பணிகள் ரூ.53 இலட்சம் செலவில் 5 தாய்-சேய் நல விடுதிகள் கட்டும் பணிகள், சத்தியமூர்த்தி சாலையில் விளையாட்டு அரங்கம் கட்டும் பணிகள் நடைபெற உள்ளன.

ஒசூர் மற்றும் திருத்துறைப்பூண்டி பேரூராட்சிகள் நகராட்சிகளாக உயர்த்தப்படவுள்ளன. திருச்சி, சேலம், திருநெல்வேலி ஆகிய நகராட்சிகளும் மாநகராட்சிகளாக அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

**நகராட்சிகளில் வளர்ச்சிப் பணிகள்**

நிதி வசதி குறைந்த 70 நகராட்சிகளில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்குத் தெருவிளக்குகள் அமைப்பதற்காக அரசு ரூபாய் ஒரு கோடி சிறப்பு மானியமாக நடப்பாண்டிற்கு வழங்கியிருக்கிறது. நகராட்சி நகரியங்கள், மாநகராட்சிகள் ஆகியவற்றின் நிர்வாகத்தை மேலும் சீரமைக்கவும் பொதுமக்களுக்கு ஆற்றும் தொண்டின் தரத்தை உயர்த்தவும் உயர்மட்ட வல்லுநர் குழு, மாநில அளவில் ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் குறைகளைப் போக்குவதற்காகக் குறைதீர்க்கும் நாள் நடைபெற்று வருகிறது. நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றில் பணிபுரியும் சிறந்த பணியாளர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கும் திட்டம் சிறந்த நிர்வாகம் நடத்தும் நகராட்சிக்கு விருதும் வழங்கப்பட இருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்குள் நகராட்சிப் பணியாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம் நிறைவேற்றப்பட உள்ளது.

நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதியின்கீழ் 1989-93 முடிய 5 ஆண்டுகளுக்கு ரூ.167.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 41 நகராட்சிகளில் ரூ.54.36 கோடிக்கான பல்வேறு வளர்ச்சிப் பணிகள் இந்நிதியைக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.126.85 கோடிக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நகராட்சி நகர்ப்புற வளர்ச்சி நிதிக்காக அரசு ரூ.51 கோடி இதுகாறும் வழங்கியுள்ளது. 265 திட்டப் பணிகள் இத்திட்டத்தின் கீழ் தொடங்கப்பட்டு 97 திட்டப் பணிகள் நிறைவேற்றப்பட்டன.



ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், 39,653 நபர்கள் பயன்படுத்தப்பட்டார்கள். இதன் மூலம் 28.81 இலட்சம் வேலைவாய்ப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் 24,484 நபர்களுக்கு வேலைவாய்ப்புத் தரப்பட்டு 49.32 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பு நாட்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ.33.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

குறைந்த செலவிலான கழிவறை கட்டும் திட்டத்தின் கீழ் 59 நகராட்சிகளில் ரூ.9.37 கோடி செலவில் 39,476 கழிப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டிற்குள் அனைத்து நகராட்சிகளிலும் இத்திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

தற்போது ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் 3 இலட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களது குழந்தைகள், மருத்துவம், விவசாயம், பொறியியல் துறையில் பட்டப்படிப்பும் பெறுவதற்கு இடம் கிடைப்பது சிரமமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு அவர்களது குழந்தைகள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் பெயரில் மருத்துவம், விவசாயம், பொறியியல் கல்லூரிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

சாதி சமய பேதமற்ற குடியிருப்புகளை ஏற்படுத்த இந்து, கிறிஸ்துவர், இஸ்லாமியர் வழிபாட்டுத் தலங்களுடன் அனைத்து வசதிகளோடு 350 குடியிருப்புகள் கொண்ட புதிய மாதிரி நகர், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் உருவாக்கப்பட இருக்கிறது. முதற்கட்டமாக மாவட்டந்தோறும் ஒரு மாதிரி நகர் அமைக்கப்படும்.

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களுக்கு விளையாட்டில் ஆர்வமும் பயிற்சியும் ஏற்படுத்து

வதற்கு வசதியாக 386 ஊராட்சி ஒன்றியங்களில் விளையாட்டரங்கம் கட்டப்படும். முதற்கட்டமாக 22 மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு, விளையாட்டரங்கங்கள் கட்டப்பட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் பெயர் சூட்டப்படும்.

நகராட்சி பேரூராட்சிகளில் திருமண மண்டபங்கள் கட்டப்பட்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பெயர் சூட்டப்படும். ஏழை எளியவர்கள் பயன்படுத்தும் வகையில் இத்திருமண மண்டபங்களுக்கு வாடகை குறைக்கப்படும்.

பேருந்து நிலையங்களில் தொலைக் காட்சிப் பெட்டிகள் அமைப்பதற்கான திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்**

**சென்னை மாநகர் தவிர தமிழகத்தில் அனைத்துப் பகுதிகளுக்கும் குடிநீர் வழங்குதல், கழிவுநீர் வடிகால் வசதிகள் ஏற்படுத்தித் தருதல், இவ்வாரியத்தின் பணியாகும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கேற்ப குடிநீர் வசதியற்ற 2,483 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் பழங்குடியினர் வாழுகின்ற 418 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி வழங்கப்பட்டு விட்டது.**

**கிராமப்புறக் குடிநீர்த் திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 4,958 குடியிருப்புகளுக்கு 67 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. நடப்பு நிதியாண்டில் 3,653 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி அளிக்கப்படும். சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ரூ.47 கோடி செலவில் 3,111 குடியிருப்புகளுக்கும், ஆதிதிராவிடர் பழங்குடியினர் சிறப்புத் திட்டத்தின் கீழ் ரூ.15 கோடி செலவில் 3,369 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், அம்பேத்கர் நூற்றாண்டு நினைவாகக் கூடுதலாக 1,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் நடப்பாண்டில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.**

**நடப்பு நிதியாண்டில் 1,994 ஆழ்குழாய்க் கிணறுகள் வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் அமைக்**



**கப்பட்டுள்ளன. கிழக்கு இராமநாதபுரம், சேலம், தென்னார்க்காடு மாவட்டங்களில் 1,236 குடிநீர் வசதி ஆதாரங்கள் ஏற்படுத்தப்பட்டு ரூ.9கோடி செலவில் 217 குடிநீர் வழங்கும் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன. பரிசோதனையாக கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியுடன் 9,000 கிராமப் புறக் குடியிருப்புகளுக்கு 530 கோடி ரூபாய் செலவில் குடிநீர் வசதி செய்வதற்காகத் திட்டம் தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நகர்ப்புறக் குடிநீர் வசதித் திட்டத்தின் கீழ் எஞ்சியுள்ள 290 நகரங்களில் குடிநீர் வசதி படிப்படியாகச் செய்து தரப்படும். நடப்பாண்டில் ரூ.25 கோடி செலவில் 70 திட்டங்கள் செயல்படுத்தப்படும். உலக வங்கி நிதியுதவியுடன் 2 மாநகராட்சிகள், 10 நகராட்சிகள், 76 ஊராட்சிகள், 955 கிராமப்புறக் குடியிருப்புகள் பயன்பெறும் வண்ணம் ரூ.322 கோடி மிகப் பெரும் திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது.**

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம்**

**கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்துவதில் ஏற்படும் அனைத்து இடர்ப்பாடுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆந்திர முதல்வர் அவர்களுடன் கலந்து ஆலோசித்து வழிவகை செய்துள்ளனர். உலக வங்கிக் குழுவும் இத்திட்டத்தை ஆய்வு செய்துள்ளது. உலக வங்கி ஏற்பு அளித்தவுடன் இப்பணிக்கு உலக வங்கி நிதி உதவி செய்யும். இத்திட்டப் பணிகளுக்காக நடப்பாண்டிற்கு ரூ.34 கோடி நிதியினை அரசு ஒப்பளித்துள்ளது. சென்னை நகரில் போடப்பட்டுள்ள குடிநீர்க் குழாய்கள் துருப்பிடித்தும் பழுதடைந்தும் இருப்பதால் நடப்பு நிதியாண்டில் 73 கி.மீ. குழாய்கள் புதுப்பிக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. மணலியில் உருவாகவுள்ள 'ஆரோசெம்' நிறுவனத்திற்கு 6 மில்லியன் காலன் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.**





# உயிரைப் பறிக்கும் நஞ்சு

—மயிலை வே. தமிழ்மணி

கள்ளாம் மதுவைக் குடிப்பதுவோ? - கடைசிக்
　காலத்தைக் கூவி அழைப்பதுவோ?
உள்ள பொருள்பேர் இழப்பதுவோ?-சுற்றி
　ஓங்கும் இடரை வளர்ப்பதுவோ?

கள்வர் பொருளைக் களவாடல்போல்-மது, உன்
　கருத்தைக் கவர்ந்துன் அறிவழிக்கும்!
கள்ளமில் கற்றோர் வெறுத்திடுவார்! - பெற்றோர்
　மனைமக்கள் கண்ணீர் தனில் கரைவார்!

மகன்குற்றம் எல்லாம் பொறுத்திடும்தாய்-குடித்த
　மகனைக் கண்டுள்ளம் கொதித்தழுவாள்!
அகத்தால் புறத்தே வெளித்தோன்றும்-வெட்கமாம்
　அணங்கும் உனைக்கண்டு வெட்கிடுவாள்!

தூங்குவோர் மெய்யறி வற்றவராம்!-அவர்கள்
　செத்தாரில் வேறல்லர் குடித்தவர்போல்!
ஓங்கும் உயிரைப் பறிக்கும் நஞ்சாம்!-மதுவாம்
　உயிர்க்கொல்லி நஞ்சை அருந்துவதோ?

உற்றார் உறவினர் கண்டெள்ளுவார்! - பிறந்த
　ஊரார், கைகொட்டிச் சிரித்திடுவார்!
பெற்றோர் மனைமக்கள் வாழ்விழப்பார்! வறுமைப்
　பெருந்தீ பசித்தீயில் வீழ்ந்தெரிவார்!

சொத்து சுகம்எல்லாம் போயொழியும்!-பந்தம்
　சொந்தம் அனைத்தும் அழிந்துபடும்!
சித்தம் தடுமாறி வீழச்செய்யும்!-உடல்
　செல்லரித்துச் சாவை அணைத்துவிடும்.

மதுவைக் குடிப்பதால் பாழ்பட்டவர்-தம்மைக்
　கண்டும் மதுவைக் குடிப்பதுவோ?
மதுவை மறந்தின்பாய் வாழ்ந்திடுக! உன்னைச்
　சார்ந்துள்ளோர் வாழ்ந்திட வாழ்ந்திடுக!

TNSC BANK

# The Tamil Nadu State Apex Co-Operative Bank Ltd.,

233, N.S.C. Bose Road, Madras-600 001.

**Rate of Interest on Deposits (Effective from 9.10.1992)**

| Sl.No. | Type of Deposit | Rate of Interest per annum |
|---|---|---|
| 1. | Savings Bank Accounts | 6.25% w.e.f. 24.4.92 |
| 2. | Fixed Deposits : | |
| | For 46 DAYS and above but upto 270 days | 12.25% |
| | For 271 DAYS and above but upto 364 days | 12.00% |
| | For 1 YEAR and above | 12.25% |

**Interest on Fixed Deposit for 1 year and above will be paid Quarterly**

- NRO & NRE Accounts Facilities are available in 6 designated Branches.
- Interest rates are subject to RBI directives from time to time.

THE BANK AT YOUR SERVICE

# சிறுசேமிப்புத் திட்டங்களும் அரசு அளிக்கும் சலுகைகளும்

டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப.,
சிறுசேமிப்பு இயக்குநர்

மக்களிடையே சிக்கன வாழ்வின் அவசியத்தையும், சேமிப்பின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துவதற்காகவே உலகச் சிக்கன நாள் கொண்டாடப்படுகிறது.

தனி மனிதனின் பல்வேறு தேவைகளுக்கும், நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் நிதி பெரிதும் தேவைப்படுகிறது. பொதுமக்கள் தங்களது வருவாய் முழுவதையும் அவ்வப்போது செலவழித்து விட்டால் தங்களுடைய எதிர்காலச் செலவுகளுக்குப் பிறரை நாடவேண்டிய நிலை ஏற்படும். அதைப்போலவே அரசும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கும் போதிய நிதியினை உள்நாட்டிலேயே திரட்ட முடியாவிட்டால் மற்ற நாடுகளிடம் நிதி உதவி கோரவேண்டி இருக்கும். மாறாக, பொதுமக்கள் சிக்கனத்துடன் வாழ்ந்து தங்களுடைய வருவாயின் ஒரு பகுதியைச் சேமித்து வருவார்களேயானால் அத்தகைய சேமிப்பு வளர்ந்து அவர்களுடைய எதிர்காலத் தேவைகளுக்குப் பெரும் உதவியாக இருக்கும். அவ்வாறு பொதுமக்கள் அரசின் பல்வேறு சேமிப்புத் திட்டங்களில் பெருமளவு முதலீடு செய்தால் அதன் மூலம் கிடைக்கும் நிதியை மத்திய மற்றும் மாநில அரசுகள் வளர்ச்சித் திட்டங்களக்குப் பிற நாடுகளின் உதவியை நாடவேண்டிய அவசியம் ஏற்படாது. எனவேதான் 'சிக்கனம் வீட்டைக் காக்கும், சேமிப்பு நாட்டைக் காக்கும்'' என்ற கொள்கையைத் தமிழக அரசு வலியுறுத்தி வருகிறது.

பொதுமக்கள் சேமிப்பதற்குத் தனியார் நிதி நிறுவனங்கள், அரசு வங்கிகள், சிறுசேமிப்புத் திட்டங்கள் எனப் பல வழிகள் உள்ளன. ஆனால், இவற்றில் அரசு வங்கிகள் மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்கள் தவிர மற்ற நிதி நிறுவனங்களில் செய்யும் முதலீடுகளுக்கு முழுமையான பாதுகாப்பு இல்லையென்பதைப் பொதுமக்கள் நன்கு அறிவார்கள். ஆனால், சிறுசேமிப்புத் திட்ட முதலீடுகள் பாதுகாப்பானவை என்பதுடன் அதிக வட்டியும் வருமான வரிச் சலுகையும் பெற்றுத் தருகின்றன. மேலும், மக்களுடைய பல்வேறு தேவைகளுக்கு ஏற்ப உதாரணமாக அதிக வருவாய் விரும்புவோர், வருமான வரிச்சலுகை பெற விழைவோர், அல்லது தொடர் வருவாய் பெற விரும்புவோர், தங்கள் தேவைக்கேற்ப சிறுசேமிப்புத் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்யலாம். இந்திரா விகாஸ் பத்திரம், கிசான் விகாஸ் பத்திரம் போன்றவைகளில் முதலீடு செய்தால் 5 ஆண்டுகளில் இரட்டிப்புப் பணம் பெறலாம். அதைப்போலவே வருமான வரிச்சலுகைக்குத் தேசிய சேமிப்புத் திட்டம் 1992 தேசிய சேமிப்புப் பத்திரம் பப்ளிக் பிராவிடெண்ட் பண்டுத் திட்டம் இருக்கின்றன. மாத வருவாய் பெற விரும்புபவர்களுக்கு மாத வருவாய்த் திட்டம், ஆண்டு வருவாய் பெற விரும்புவோர்க்குக் குறித்த கால வைப்புத் திட்டம் ஆகியவை இருக்கின்றன. இவை தவிர அன்றாடம் உழைத்துச் சம்பாதிப்பவர்களுக்கும் மாதச் சம்பளம் பெறுவோருக்கும் ஏற்றவாறு ரெக்கரிங் டெபாசிட், அஞ்சலகச் சேமிப்பு மற்றும் வங்கிக் கணக்கு இருக்கின்றன.

சிறுசேமிப்பின் மூலம் வசூலிக்கப்படும் மொத்தத் தொகையில் 75 சதவிகிதத்தை மத்திய அரசு மாநில அரசுக்குக் கடனாக வழங்குகிறது. இத்தொகை, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. பொதுமக்கள் பெருமளவில் சிறுசேமிப்பில் முதலீடு செய்தால் அதிலிருந்து அதிகத் தொகையைத் தமிழக அரசு நீண்டகாலக் கடனாகப் பெற்று அதன்மூலம் நிதிநிலையில் ஏற்படும் பற்றாக்குறையைச் சீர்செய்வதுடன் கூடுதல் வரிவிதிப்பையும் தவிர்க்க முடியும். எனவே, பொதுமக்கள் சிக்கனத்துடன் வாழ்ந்து சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமிக்கத் தொடங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மக்களிடையே சிக்கனத்தையும் சேமிப்பையும் ஊக்குவிப்பதற்காகத் தமிழக அரசு பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**முதலீட்டாளர்களுக்கு ஊக்கத்தொகை**

குறிப்பிட்ட சில சிறுசேமிப்புத் திட்டங்களில் தமிழகத்தில் ரூ.1,000 அல்லது அதற்குமேல் 1.4.92 முதல் 31.3.93 வரை முதலீடு செய்பவர்களுக்கு முதலீட்டுத் தொகையில் ஒரு சதவிகிதம் ஊக்கத்தொகையாகவும் வழங்கப்படுகிறது. சிறப்பாக 1.6.1992 முதல் 30.9.1992 முடிய கிசான் விகாஸ் பத்திரங்களில் முதலீடு செய்தவர்களுக்கு 2.25 சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. 1.10.92 முதல் 31.12.92 முடிய மாதாந்திர வருவாய்த் திட்டத்தில் செய்யப்படும் முதலீட்டிற்கு

2 சதவிகிதம் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

**முதலீட்டாளர்களுக்கு இலவசப் பரிசுக் கூப்பன் திட்டம்**

குறிப்பிட்ட சிறுசேமிப்புத் திட்டங்களின் முதலீட்டாளர்களுக்கு ஒவ்வொரு ரூ.500-க்கும் ஒரு கூப்பன் வழங்கப்படும். ஒரு வரிசையில் ஒரு இலட்சம் இலவசப் பரிசுக் கூப்பன்களை வழங்கி முடிந்ததும் குலுக்கல் நடத்தி மாருதி கார் உட்பட 536 பரிசுகள் வழங்கப்படும்.

**பரிசுகள் விவரம்**

1. சூப்பர் பம்பர் முதல் பரிசு - ஒரு மாருதி கார்.
2. இரண்டாம் பரிசு - இரண்டு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்.
3. மூன்றாம் பரிசு - மூன்று 165 லிட்டர் குளிர்பதனப் பெட்டிகள்.
4. நான்காம் பரிசு - 10 தையல் இயந்திரங்கள்.
5. ஐந்தாம் பரிசு - 20 பிரஷர் குக்கர்கள்.
6. ஆறாம் பரிசு - ரூ.100 மதிப்புள்ள 500 இந்திர விகாஸ் பத்திரங்கள்.

மொத்தப் பரிசுகள் 536

**முகவர்களுக்குப் போனஸ் பரிசு**

பரிசுக் குலுக்கலில் முதல் மூன்று பரிசு பெற்றவர்கள் முகவர்கள் மூலமாக முதலீடு செய்திருப்பார்களானால் அவர்களுக்கும் கீழ்க் கண்டவாறு பரிசு வழங்கப்படுகிறது.

1. முதல் பரிசு - மோஃபா
2. இரண்டாம் பரிசு - சைக்கிள்
3. மூன்றாம் பரிசு - பிரீஃப்கேஸ்

**மாவட்ட/மாநில அளவில் அதிக வசூல் செய்த முகவர்களுக்குப் பரிசு**

மாநில/மாவட்ட அளவில் முதன்மையாக வசூல் செய்யும் முகவர்கட்கும் பரிசு வழங்கப் படுகிறது.

மாநில அளவில் முதன்மையாக வசூல் செய்யும் முகவருக்கு ரூ.2000, மாவட்ட அளவில் முதன் மையாக வசூல் செய்த முகவருக்குப் பரிசு ரூ.1000, பள்ளி மாணவர்களுக்கும், சஞ்சாயிகா திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும்

**ஆசிரியருக்கும், தலைமையாசிரியருக்கும் பள்ளிக்கூடத்திற்கும் ஊக்கத்தொகை.**

சஞ்சாயிகா திட்டம் செயல்படும் பள்ளியில் மாணவர்கள் ஒரு கல்வியாண்டில் ரூ.100 சேர்த் தால் அவர்களுக்கு ரூ.2 ஊக்கப்பரிசு வழங்கப் படுகிறது. ஒரு கல்வியாண்டில் ரூ.5,000 சேர்த்த பள்ளியில் மாணவர்கள் 75 சதவிகிதம் அல்லது 100 சதவிகிதம் சேர்த்து சஞ்சாயிகா திட்டத்தைச் செயல்முறைப்படுத்தும் ஆசிரியர் தலைமையாசிரி யர்களுக்கு முறையே ரூ.75 மற்றும் ரூ.100 ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

ஒரு பள்ளியில் ஒரு கல்வியாண்டில் ரூ.50,000 வரை சேர்த்திருந்தால் அப்பள்ளிக்கு ஐந்து மின் விசிறிகள் அன்பளிப்பாக வழங்கப் படுகின்றன.

**முகவர்கட்கு ஊக்கத்தொகை**

மேலும், சிறுசேமிப்பு வசூலில் ஈடுபட்டுள்ள எஸ்.ஏ.எஸ் முகவர்களுக்கு ஊக்கமளிக்கின்ற வகையில் மத்திய அரசு தரும் கமிஷன் தொகைக்கு இணையாக மாநில அரசு ஊக்கத்தொகை வழங்கி வருகிறது. எம்.பி.கே.பீ.ஒய். முகவர்களுக்கு அவர்கள் பெறும் கமிசன் தொகையில் பாதியைத் தமிழக அரசு ஊக்கத்தொகையாக வழங்குகிறது.

**முகவர்கட்கும் இலவசப் பரிசுக் கூப்பன்**

தவிர, முகவர்கள் மூலம் செய்யப்படும் முதலீடுகளுக்கு ரூ.10,000- க்கு ஒரு கூப்பன் வீதம் இலவசப் பரிசுக் கூப்பன்கள் வழங்கப்பட்டு ஒரு இலட்சம் கூப்பன்கள் கொண்ட வரிசைக்குக் குலுக்கல் நடத்தி மாநில அளவில் கீழ்க்கண்டவாறு 900 பரிசுகள் வழங்கும் திட்டத்தைக் கடந்த ஆண்டு இந்தியாவிலேயே முதன்முறையாகவும் முன்னோடித் திட்டமாகவும் தமிழக அரசு அறி வித்துச் செயல்படுத்தி வருகிறது.

5 முதல் பரிசு - ஸ்கூட்டர்கள்.
10 இரண்டாம் பரிசு - 10 மொபட்டுகள்
15 மூன்றாம் பரிசு - 8 கிராம் தங்க நாணயங்கள்
20 நான்காம் பரிசு - மிக்சிகள்
50 ஐந்தாம் பரிசு - சைக்கிள்கள்
300 ஆறாம் பரிசு - பிரிஃப் கேஸ்
500 ஏழாம் பரிசு - சுவர்க் கடிகாரங்கள்.

மொத்தம் 900 பரிசுகள்.

**மாவட்டங்களுக்கும் ஊக்கத் தொகை**

சிறுசேமிப்பில் சிறப்பான சாதனை புரியும் மாவட்டங்களுக்குத் தமிழக அரசு ஊக்கத் தொகை வழங்கி அதன் மூலம் குடிநீர் வசதி, மருத்துவ வசதி மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.



• மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறுவயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதனாவான்.

### உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் ஊக்கத் தொகை

இது தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு சேமிப்பு வசூலில் சிறந்த ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றிற்கு மாவட்ட அளவில் கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

ஐந்து ஊராட்சிகளுக்கு ரூ.10,000 வீதம் ரூ.50,000.

இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரூ.50,000 வீதம் ரூ.1,00,000

சிறந்த நகராட்சி அல்லது நகரியம் ரூ.50,000 வீதம் ரூ.50,000

மொத்தம் ரூ.2,00,000

### 20 ஆண்டுகாலத் தமிழக வசூல் வளர்ச்சி

தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளாகச் சிறு சேமிப்பு இலக்கும் நிகர வசூலும் படிப்படியாக உயர்ந்து கடந்த ஆண்டு வரலாறு காணா உயர் வசூலை எட்டியது.

பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் மூலம் தமிழக அரசு சென்ற ஆண்டு ரூ.580 கோடி அளவிற்கு நிகர வசூல் செய்துள்ளது. தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் இந்த நிகர வசூல் அதிகரித்து வருகிறது. இவ்வாண்டு தமிழக அரசு நிகர வசூல் ரூ.550 கோடியாக இலக்கு நிர்ணயித்துள்ளது. இவ்விலக்கினை எய்துவதற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகராட்சி ஆணையரும் இவ்வலுவலகத்திலுள்ள பல்வேறு அலுவலர்களும் அயராது உழைத்து வருகின்றனர். எனவே, தமிழக மக்களின் வீடு வளம் பெறவும் இந்த நாடு நலம் பெறவும் சிறுசேமிப்புத் திட்டங்களிலுள்ள பல்வேறு பயன்களைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியைத் தங்களுக்கு ஏற்ற சிறுசேமிப்புத் திட்டங்களில் இன்றே சேமித்து வளம்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

புத்தகங்கள்

புத்தகங்கள் இருவகைப்படும். ஒருவகை பொழுதுபோக்க உதவுகிறவை. மற்றொருவகை வாழ்க்கைக்கு உதவுகிறவை.

—ரஸ்கின்

உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே

—கதே

மாண்புமிகு முதல்வர் அவர்களிடம், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திரு. இ. மதுசூதனன் அவர்கள் கைத்தறி மற்றும் துணி நூல் துறை நிறுவனங்கள் சார்பாக ரூ.60 இலட்சத்திற்கான காசோலையை, நேரு விளையாட்டரங்கை நவீனப்படுத்தும் பணிக்கென வழங்கினார் (7.12.92).



## திரைப்பட விமர்சனம்

# நீங்க நல்லா இருக்கணும்



'குடி குடியைக் கெடுக்கும்' என்பதை நாசூக்காகச் சொல்ல வேண்டும். அதை உணர்வு பூர்வமாக உணர்த்த வேண்டும். முடியுமா?

'முடியும்' என்பதை 'நீங்க நல்லா இருக்கணும்' படத்தைப் பார்த்தபோது உணர முடிகிறது.

குடிக்கு அடிமையாகிவிட்ட ஒருவனை பெண்ணொருத்தி திருத்த முற்படுகிறாள். 'எப்படி' என்பதை விளக்கும் கதைதான் இது.

தமிழக அரசுக்காக, ஜீ.வி. பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்தப் படத்துக்குக் கேளிக்கை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது.

அரசம்பட்டிக் கிராமத்து அபலைப் பெண் அஞ்சலை (பானுப்பிரியா) தன் குடிகாரக் கணவன் மாணிக்கத்தின் (நிழல்கள் ரவி) உயிரைக் காப்பாற்ற படாதபாடு படுகிறாள். மரணத்தின் பிடியிலிருந்து அவனைக் காப்பாற்ற அவள் சந்திக்கும் சோதனைகளும், வேதனைகளும் ஏராளம். அதைச் சாதனையாக்கிக் காட்டச் சபதம் ஏற்கிறாள். அந்தச் சபதத்துக்குச் சாரமாக இருந்து உதவுகிறார் பத்திரிகை நிருபர் காதர்பாட்சா (விசு). அவரோடு பாதிரியாரும் (கிஷ்மு) சேர்ந்து கொள்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஆசியும் ஆதரவும் அவர்களுக்கு முழு அளவில் கிடைக்கிறது.

கணவனது உயிரை மீட்க, கலியுக சாவித்திரியாக மாறுகிறாள் அஞ்சலை.

மருத்துவச் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்கிறாள். அங்கு நவீன மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை நடக்கிறது. மாணிக்கம் மரணத்தின் பிடியிலிருந்து பிழைத்துக் கொள்கிறான். மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறாள் மனைவி, அஞ்சலை.

பிறகு, தாயகம் திரும்புகின்றனர் தம்பதியர். பெற்றோரும், மற்றோரும் மகிழ்ச்சியடைகின்றனர். ஆனால், புதுவாழ்வு காணக் கனவு கொண்டிருந்த அஞ்சலைக்குப் பேரிடி! அது என்ன? அதைச் சித்திரிப்பதுதான் இந்தக் கதை.

கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியிருப்பவர் விசு. அருமையாகச் செய்திருக்கிறார்.

பாடலுடன் தொடங்கும் படத்தின் முதல் காட்சியே நம் மனத்தைக் கவர்கிறது. குடிகார மகனுக்குப் பெண் கேட்டுத் தந்தை (மேஜர் சுந்தரராஜன்) கதறும் காட்சி மனத்தை நெகிழவைக்கிறது.

'ஏழை எளிய மக்களின் துயர் தீர்க்க மலிவு விலை மதுக்கடைகளை மூடுவேன் என நான் அறிவித்திருந்தது, உங்கள் அனைவருக்கும் தெரியும். அதன்படி, இந்த அரசு பதவியேற்றதும் மலிவு விலை மதுக்கடைகளை மூடத்தான் முதல் கையெழுத்துப் போட்டேன் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்' என்று நாட்டு மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆற்றும் உரை நம்மைப் பெருமிதமடைய வைக்கிறது.

சாராய சாம்ராஜ்யத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் மாணிக்கமும் சரி, அவனைக் கட்டிக் கொண்டு

அல்லல்படும் அஞ்சலையும் சரி அந்தப் பாத்திரங்களாகவே மாறி விடுகிறார்கள். ஆம். நிழல்கள் ரவி, பானுப்பிரியா நடிப்புக்குச் 'சபாஷ்' போடலாம்.

குடிகாரக் கணவனைக் கட்டிக் கொண்டு, ஒரு பெண் படும்பாடு தத்ரூபமாகச் சித்திரிக்கப்பட்டிருக் கிறது. செய்திப்படமாக இல்லாமல், சமுதாய நிகழ்வுகளைக் கண்முன் காட்டும் ஒரு திரைக் காவியமாகவே விளங்குகிறது. எம்.எஸ். விஸ்வ நாதனின் இசையமைப்பு, பாடல்கள், ஒளிப்பதிவு எல்லாம் சிறப்பாக உள்ளன.

கிராமிய மணம் கமழும் ஒரு நல்ல குடும்பக் கதை என்பதற்கும், உணர்ச்சிகரமான நிகழ்ச்சிகளால் பின்னப்பட்டிருக்கும் கதை என்ப தற்கும் பல காட்சிகளைச் சான்றாக நாம் காட்டலாம்.

★ முதல் இரவு என்று கூடப் பார்க்காமல், குடித்துவிட்டு நிலை தடுமாறி வரும் கணவனைப் பார்த்து ஆத்திரம் பொங்க, அவனை இழுத்துக் கொண்டு காவல் நிலை யத்துக்குப் போகும் காட்சி -

★ குடிகாரக் கணவன் நிலையை



எண்ணி இறைவனிடம் முறையிடும் காட்சி -

★ கையில் ராந்தல் விளக்கை ஏந்தி, குடித்துவிட்டுச் சாலையில் விழுந்து கிடக்கும் கணவனைத் தேடிச் செல்லும் காட்சி -

★ தாய் (மனோரமா) இறந்த நிலை யிலும், குடியை மறக்காத மகன் மாணிக்கம் கதறியழும் காட்சி, சிதை எரியும்போது 'இனிமே குடிக்க மாட்டேன்' என்று அவன் சபத மேற்கிற காட்சி -

மாங்கல்யப் பிச்சை கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களின் காலில் விழுந்து அஞ்சலை ஆனந்தக் கண்ணீர் வடிக்கும் காட்சி -

குடியின் கொடுமையை விளக்கி- மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்திமதி கூறும் காட்சி - எல்லாம் மனத்தில் ஆழப் பதிகின்றன.



ஜி. சீனிவாசன், கிஷ்மு, வெண்ணிற ஆடை மூர்த்தி, ஒய்.ஜி. மகேந்திரன், பூர்ணம் விஸ்வநாதன், சூர்யகாந்த், திலீப், சாருஹாசன், (சங்கர்) கணேஷ், வடிவுக்கரசி, பல்லவி, இந்திராதேவி, சங்கீதா முதலானோரும் கதைக்கு வலிவும், பொலிவும் தருகிறார்கள்.

பானுப்பிரியா தீ மிதிக்கும் காட்சி மட்டுமல்ல, 'மாங்கல்யப் பிச்சைக்கு மடி ஏந்தினேன்' என்ற பாடலுக்கு ஆடும் நடனமும் அருமை. 'சிவசங்கரி ஜெகதீஸ்வரி' பாடலும் இனிமை.

'குடும்பத்திலே கிடைக்கிற போதை, பொண்டாட்டி - குழந்தைங்ககிட்டே கிடைக்கிற போதை, சாராயத்திலே கிடைக்காதுப்பா. சாராயங்கறது, முதல்லே நீ அதைக் குடிப்பே. அப்புறம் அது ஒன்னைக் குடிச்சிடும்' என்று வருகிற கட்டத்தில் விசு மனதில் நிற்கிறார்.



ஆம். விசு தனக்கே உரித்தான பாணியில், மிகக் கச்சிதமாக நடித்திருக்கிறார். மனோரமா வழக்கம் போல் பிரகாசிக்கிறார். மேஜர் மேஜர்தான். வெண்ணிற ஆடை மூர்த்தியை விசு சந்தித்துப் பேசும் காட்சி நல்ல நகைச்சுவை.

அல்லல்படும் அஞ்சலைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி செய்வதாக உறுதி கூறும் காட்சியும் நம் மனத்தில் நிற்கிறது.

அமெரிக்காவில், கண்ணுக்கினிய காட்சிகளோடு கதையும் விறு விறுப்பாகச் செல்கிறது. சிறிது நேரம் வந்தாலும் டாக்டராக வரும் ஜீ.வி. பாத்திரம் உணர்ந்து நடித்திருக்கிறார்.

தாயகம் திரும்பிய மாணிக்கம் தம்பதியர், மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சந்திக்கிறபோது, குடிக்கு அடிமையான மாணிக்கத்தைப் பார்த்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் புத்திமதி கூறும் காட்சி தத்ரூபமாக எடுக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில், முதல்வர் அவர்களின் அறிவுரையும், குடிப்பழக்கம்

உள்ளவர்கள் திருந்துவதற்கு ஒரு பாடமாக இருக்கிறது.

படத்தின் உச்சக்கட்டம் நம் உள்ளத்தைத் தொடும்படியாக எடுக் கப்பட்டிருக்கிறது.

புதுவாழ்வு மலரப் போகிறது என்று அகமும் முகமும் மலர மகிழ்ச்சியில் மிதந்த அஞ்சலைக்கு, அன்று இரவு பூகம்பமே ஏற்படு கிறது. துன்பத்தையே சந்தித்துக் கொண்டிருந்த அவள், இன்பத்தின் விளிம்புக்கு வருகிற சமயத்தில், வேதாளம் பழையபடி முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, குடித்து விட்டு தள்ளாடியபடி வீட்டு வாயி லிலே வந்து நிற்கிறான் கணவன்! எப்படி இருக்கும் மனைவிக்கு?

பட்டபாடெல்லாம் பாழாகி விட்டதே என்கிற ஆதங்கத்தில் அஞ்சலை தன்னையே அழித்துக் கொள்கிறாள். உடைந்த பாட்டி லால் குத்திக் கொண்டு உயிரையே தியாகம் செய்கிறாள்.

ஊரே திரண்டு வருகிறது மயா னத்துக்கு. குடிகார ஆண்கள் எல்லாம் மதுப்பாட்டில்களை உடைத்து 'இனி மதுவைத் தொட மாட்டோம்' என்று உறுதியேற் கிறார்கள். மனைவியின் மரணம் மாணிக்கத்தின் கண்களைத் திறக் கிறது.

'இந்த நாட்டுக்கு ஒரு அஞ்சலை யின் மரணம் போதும். அவளது மரணம் அரசம்பட்டிக் கிராமத்து மக்களைத் திருத்தியது போல, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்களிலும், அனைத்துக் குடி காரர்களையும் திருத்தவேண்டும் என்பதே என் விருப்பம். அது மட்டும் நடக்குமானால், தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே வளமான மாநிலம் என்ற அளவுக்குக் கொண்டு வர இந்த அரசால் முடியும்...'

என்று இறுதிக் காட்சியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முத்தாய்ப்பாகக் கதையை முடித்து வைக்கும் வகையில் கருத்துரை வழங்கும் காட்சி நம் கண்களை விட்டு அகலாத காட்சியாக அமைகிறது.

மொத்தத்தில், குடிக்கு அடிமை யானவர்கள் இந்தப் படத்தைப் பார்த்தால், அந்தப் பழக்கத்தி லிருந்து விடுதலை பெறுவார்கள் என்பது நிச்சயம்.

**- பி.வி. கிரி.**






## 'எய்ட்ஸ்' நோய்த் தடுப்பு நாள்

உயிர்க்கொல்லி நோயாம் 'எய்ட்ஸ் நோய்த் தடுப்பு விழிப்புணர்ச்சி வாரம்' - சென்ற நவம்பர் மாதக் கடைசியில் சென்னையில் கொண்டாடப்பட்டது.

இது தொடர்பாக மருத்துவர்கள் - பத்திரிகையாளர்கள் கலந்துரையாடல் ஒன்றும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு, மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் திரு. கே. இன்பசாகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

### பொது நிகழ்ச்சி

சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் 1.12.92 அன்று, 'உலக எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நாள்' பொது நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. சு. முத்துசாமி அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார்.

"மருந்துகள் இன்னும் கண்டறியப்படாததால், எய்ட்ஸ் நோய் பரவும் விதம் குறித்து மக்களிடையே பிரச்சாரம் செய்ய இளைஞர்கள் முன்வர வேண்டும்" என்றும் அப்போது அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சிக்கு மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் திரு. கே. இன்பசாகரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

எய்ட்ஸ் நோய்த் தடுப்புப் பிரிவின் முக்கிய மருத்துவரான டாக்டர் இராதாகிருஷ்ணன் இவ்விழாவில் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் டாக்டர் காந்திராஜ் நன்றி கூறினார்.

### மாணாக்கர் பேரணி

இவ்விழா நடைபெற்ற நாளன்று மாலையில் - எய்ட்ஸ் நோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணி, கீழ்ப்பாக்கம், பால்பர் சாலையில் தொடங்கி - 'உலக எய்ட்ஸ் நோய்த் தடுப்பு நாள்' நிகழ்ச்சி நடைபெற்ற கலைவாணர் அரங்கில் முடிவுற்றது.

- 'ராஜு'

## பார்த்தோம் படித்தோம்

**1.12.92** இதழில், பண்டித நேரு, முத்துராமலிங்கத்தேவர் திருவுருவப் படங்கள் கண்ணைக் கவர்ந்தன. சிக்கனமும் சேமிப்பும் எவ்வளவு முக்கியம் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் நறுக்குத் தெறித்தாற் போன்று விளக்கியுள்ளது அருமை.

—ப.முருகேசபாண்டியன்
கரப்பாடி

**1.12.92** இதழில், 'குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பாவின் பாடல்கள்' பற்றி பி.வி. கிரி எழுதியுள்ள கட்டுரையைப் படித்தேன். படித்தேன் குடித்ததுபோல இன்ப வெள்ளத்தில் திளைத்தேன்.

—புலவர் தணிகை உலகநாதன்,
சென்னை-1.

### திருத்தம்

'தமிழரசு' 1.12.'92 இதழில் உள்ள 'மூதறிஞர் இராஜாஜி' கட்டுரையில் அவரது பிறந்த நாள் டிசம்பர் 9 என்றிருப்பது தவறு; டிசம்பர் 10 என்பது சரி.

# வரலாறு படைத்த

# டாக்டர் ஆர்.கே. சண்முகனார்

**பேராசிரியர்**

**டாக்டர் சை.வே. சிட்டிபாபு**



தமிழ்த்தாய் ஈன்ற சான்றோர்களில் தலைசிறந்த ஆற்றலாளருள்ஒருவர்டாக்டர் ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் ஆவார். பொருட் செல்வம், குணச் செல்வம், கலைச் செல்வம், நல்லறிவுச் செல்வம், நாவியலும் உரைச் செல்வம், தமிழாயும் விருப்புச் செல்வம் ஆகிய அனைத்துச் செல்வங்களும் ஒருங்கே அமையப் பெற்ற மாமனிதராகத் திகழ்ந்த இவரின் வாழ்க்கை இந்திய வரலாற்றில் ஒரு பொன்னேடாக மிளிர்கிறது என்னும் கூற்று மிகையாகாது.

சரியாக நூறு ஆண்டுகளுக்குமுன் அக்டோபர் திங்கள் 17-ஆம் நாளன்று காலை 5 மணிக்கு சண்முகனார் அவர்கள் பிறந்த அந்நாள் தீபாவளி நாளாக அமைந்திருந்தது. அவரது எதிர் காலம் ஒளிமயமானதொரு காலமாக விளங்கப் போவதென்பதைப் பறை சாற்றுவது போல் இருந்தது எனலாம். அவர் தோன்றிய குடும்பம் கோவையிலே ஒரு வணிகச் சமுதாயச் செல்வந்தர் குடும்பம் ஆகும். எனவே, வணிகர் குல பாற்கடலில் வலம்புரியாய் முகிழ்த்த அவர் செல்வச் செழிப்போடு வளர்ந்தார் என்பதில் வியப்பில்லை. ஆனால், உல்லாசத்திலோ ஆடம்பரத்திலோ மனதைச் சற்றும் பறிகொடுக்காமல் அவர் அறிவுச் செல்வத்தின் உயர் தன்மை யையே நாடிப் படிப்பில் மட்டுமே முழு மையாகத் தன் கவனத்தைச் செலுத்தினார்.

கோவையிலே இலண்டன் மிஷன் உயர்நிலைப் பள்ளியிலே படித்த அவர் ஒவ்வொரு ஆண்டும் வகுப்பிலே முதல் மாணவராக விளங்கியதை அவரது தலைமை ஆசிரியர் எவரிடம் பேசினா லும், 'மாணவன் என்றால் சண்முகம் போல் பிரகாசிக்க வேண்டும்' என்று செல்லிப் பரவசப்படுவாராம். புத்தகப் பிரியரான சண்முகனார் அவர்கள் பத்தாம் வகுப்பு தேறுவதற்குள் மார்லி (Morley) எழுதிய, புகழ் பெற்ற 'கிளாட் சனின் வாழ்க்கை' என்ற நூல் முழுவதை யும் படித்துவிட்டார் என்றால், அது வியப்புக்குரியதுதானே! பள்ளியில் விவாதப் போட்டிகளிலும் கலந்து கொண்டார். அதுவே அவருக்குப் பிற்காலத்தில் மிகச் சிறந்த பேச்சாளராக விளங்க நல்ல முற்பயிற்சியை அளித்தது என்று கூறலாம்.

மெட்ரிகுலேசனில் தேர்ச்சி பெற்ற பிறகு, சென்னையில் அப்பொழுது பாரிமுனைப் பகுதியில் எஸ்பிளனேட் என்று கூறப்படும் இடத்திலிருந்த சென்னை கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்து 1915-இல் பி.ஏ. பட்டம் பெற் றார். கல்லூரியில் படித்த காலத்தில் திரு. ஆர்.கே.எஸ். அவர்கள் பல பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெறும் வல்லவரானார். கோபால கிருஷ்ண கோகலே, விபின் சந்திரபால், பாலகங்காதர திலகர் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் எழுச்சிமிகு பேச்சுக்கள் அவரை வெகுவாகக் கவர்ந் தன. பி.ஏ. படித்து முடித்ததும் சண் முகனார் அவர்கள், சென்னை சட்டக் கல்லூரியில் சேர்ந்து பி.எல். பட்டம் பெற்றார். அப்பொழுது ஒருமுறை அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி ஒன்று ஒய்.எம்.சி.ஏ.-வில் நடந்தபோது அதில் கலந்துகொண்டு, கேட்டாரைப் பிணிக்கும் வகையில் மிக அற்புதமாகப் பேசி முதற் பரிசைத் தட்டிச் சென்றதை அனைவரும் மனதாரப் பாராட்டினார்கள்.

முதலில் வழக்குரைஞராக வாழ்க்கை யைத் தொடங்கலாம் என்று எண்ணி யிருந்த சண்முகனார் அவர்கள் அத் துறையில் நீண்ட நாட்கள் இருக்காமல் அரசியலில் அடி எடுத்து வைத்து 1920-ஆம் ஆண்டில் சென்னைச் சட்டசபையில் நீலகிரி தொகுதியில் உறுப்பினராக நுழைந்தார். சர். பிட்டி தியாகராயச் செட்டியார், பனகல் அரசர் சர்.பிட்டி இராஜன், சர்.ஏ ராமசாமி முதலியார், திரு. பி. சுப்பராயன் போன்றோர் இருந்த அந்த சட்டசபையில் திரு. ஆர்.கே.எஸ். அவர்களின் ஆணித் தரமான சொற்பொழிவுகள் யாவரையும் வியக்க வைத்தது. அவரது வாதத் திறமை யும், கருத்துச் செறிவும், ஆழ்ந்த புலமை யும், பிறர் எளிதில் புரிந்து கொள்ளும் படி தெளிவாகப் பேசும் ஆற்றலும் அவரை ஒரு மிகச் சிறந்த சட்டசபை யாளர் என்பதை வெளிப்படுத்தின. அன் றைய நாளேடுகள், அவரது பட்ஜெட் பேச்சுகள், பொருள் ஞானத்திலும் சரி,

முறையிலும் சரி, அலசி ஆராயும் தன்மையிலும் சரி, தனித்தன்மையோடு மிளிர்ந்தன என்பதைச் சுட்டிக்காட்டின.

'பரந்த கண்ணோட்டமுடைய, திறமைமிக்க இளைஞர் ஆர்.கே.எஸ். டெல்லி சட்டசபைக்குப் (தற்போதைய பாராளுமன்றம்) போனால் அது அவருக்கும், நாட்டுக்கும் நல்லது என்று அன்னிபெசண்ட் அம்மையார் போன்றோரும் மற்ற நெருங்கிய நண்பர்கள் பலரும் வற்புறுத்த, சண்முகனார் அவர்கள் *1923*-இல் டெல்லியிலுள்ள மத்திய சட்டசபைக்குத் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். அப்பொழுது இந்தியாவில் மாபெரும் அரசியல்வாதிகள், சொல்லேருழவர்கள், செல்வாக்கும், செல்வமும் மிகுந்தவர்கள், புகழ்பெற்ற சட்டவல்லுநர்கள், வர்த்தகர்கள், கீர்த்தி மிகு அறிஞர்கள், தியாகிகள் எனப் பலரும் மத்திய சட்டசபையை அலங்கரித்திருந்தனர். அவர்கள் மத்தியில் இளைய உறுப்பினராக மத்திய சட்டசபையில் நுழைந்த ஆர்.கே.எஸ். அவர்கள் தனது கூர்ந்த மதியினாலும் பேச்சாற்றலாலும் அனைவரது கருத்தையும், கவனத்தையும் ஈர்த்தார்.

நிதி, வர்த்தகம், கைத்தொழில் பற்றிய பொருளாதாரப் பிரச்சினைகளைக் குறித்து அவர் ஆற்றிய திறனாய்வு மிக்க உரைகள் வேறு யார் பேசியதையும் விஞ்சக் கூடியதாகப் பளிச்சிட்டன என்பதை அரசியல் அறிஞர்கள் யாவருமே ஒப்புக் கொண்டுள்ளனர். இதுவே பண்டித மோதிலால் நேரு அவர்கள் அவரை அழைத்து தம் சுயராச்சியக் கட்சியில் சேர்த்துக் கொள்ளச் செய்தது. அது மட்டுமல்ல, அக்கட்சியின் கொரடா ஆகவும், அவர் இருக்கும்படி பண்டித மோதிலால் நேரு செய்வித்தார்.

*1924*-ஆம் ஆண்டு அவர் டெல்லி சட்டசபைக்கு வந்தபோது, மந்திரிசபையிலும் ஆட்சிப் பொறுப்பிலும் மிகத் திறமை வாய்ந்தவர்களான சில பிரிட்டிஷ்காரர்கள் இருந்தனர். சர்.மால்கம் ஹெய்லி (Sir Malcolm Haily) சர். அலெக்சாண்டர் மட்டிமன் (Sir Alexander Muddiman) சர் பேசில் பிளாக்கட் (Sir Basil Blacket) போன்ற வல்லவர்கள் வைஸ்ராய் நிர்வாக சபை உறுப்பினர்களாக இருந்தார்கள். இவர்களை எதிர்த்துப் பேசக்கூடிய சொல்வன்மையை ஆர்.கே.எஸ். அவர்கள் வெளிப்படுத்தியது இந்தப் பிரிட்டிஷ்காரர்களைக் கலங்க வைத்தது என்றால் மிகையாகாது. காரணம் அவர் பேசியதில் கருத்து ஆழமும், அழுத்தமும், மறுக்க முடியாத உண்மையும், புள்ளி விவரங்களும் இருந்ததுதான். 'பொதுமக்கள் கருத்து அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக இல்லை', ஒரு பிரிட்டிஷ் அதிகாரி குறிப்பிட்டிருந்தார். சண்முகனார் இதற்குச் சாட்டையடி எனத் தந்த பதில். 'பொதுமக்களின் கருத்து என்பது வீதியில் போவோர் வருவோரின் கருத்தல்ல. பிரச்சினையின் தன்மையைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய கருத்துத்தான் பொதுமக்கள் கருத்து' என்பதுதான். *1928*-ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை சர்.பேசில் பிளாக்கட் தயாரித்த முறை சரியல்ல என்பதைக் கண்டுபிடித்துவிட்ட ஆர்.கே.எஸ். அவர்கள் 'இது மட்டும் ஒரு கம்பெனியின் வரவு செலவுக் கணக்காக இருக்குமேயானால் பிளாக்கட்டை வழக்குமன்ற கூண்டிலே ஏற்றி இருப்பார்கள்' என்று நையாண்டி செய்தார்.

சண்முகனார் ஆற்றிய மிகச் சிறந்த பேச்சுக்களில் ஆட்டவா ஒப்பந்தத்தின் மீது ஆற்றிய உரை ஒன்றாகும். இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பிரதிநிதிகளில் ஒருவர் என்ற முறையில் அவரைத் தேசியவாதிகள் வன்மையாகக் குறை கூறியதற்கு அவர் கொடுத்த பதிலாவது: 'பிறர் குறை கூறுவது கண்டு முட்டாள்தனமாக நான் வருந்தமாட்டேன்

அவர்கள் குறை கூறுவது எவ்வளவு மனப்பூர்வமானதோ அந்த அளவுக்கு எனது செய்கையும் மனப்பூர்வமானது என்பதைக் குறை கூறுபவர்கள் உணரவேண்டும் என்பதே எனது விருப்பம்'. தனது நிலையில் எந்த சுய நலமோ அடிமைப் பான்மையோ மருந்துக்கும் இல்லை என்பதைத் தெளிவு படுத்தினார்.

*1933*-ஆம் ஆண்டு மார்ச் *14*-ஆம் நாள் ஆர்.கே.எஸ். அவர்களின் வாழ்க்கையில் ஒரு மிக முக்கியமான நாளாகும். அன்றுதான் அவர் டெல்லி மத்திய

சிவராஜ், ஆர்.கே. சண்முகம் செட்டியார், இராமச்சந்திர செட்டி, பி.டி. இராசன்



சபையின் தலைவராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பெரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தென்னிந்தியர் மற்றும் முதல் தமிழர் என்ற சிறப்பு அவரையே சாரும். மேலும், அவர்தான் அந்தப் பதவியிலே அமர்ந்தவர்களில் குறைந்த வயதினர் என்ற புகழையும் ஈட்டினார். அப்பொழுது அவருக்கு 40, வயது தான் என்று நினைக்கும் போது நமக்கு ஏற்படும் வியப்பு கொஞ்ச நஞ்சம் அல்ல. திரு. சண்முகனார் சட்ட சபையில் தலைவராக ஆனது அப்போதைய நிதி அமைச்சர் சர். ஜார்ஜ ஷூஸ்டருக்கு ய்ன நிம்மதியைத் தந்ததாம். நிதிப் பற்றிய விவாதம் ஒன்றில் பதில் கொடுக்க எழுந்த அவர் பேசியதாவது:

'இன்று என் பொறுப்பு மிகவும் எளிதாகி விட்டது. ஏனெனில், எனக்கு எப்போதும் தலைவலியைத் தருகிற சண்முகனார் இப்பொழுது சட்டமன்றத் தலைவராக வந்துவிட்டார். சிறிதளவு இரக்கம் காட்டினால் கூட ஒருவன் அதற்கு நன்றி செலுத்த வேண்டுமென்றால் விவாத அரங்கிலிருந்து ஒரு கடுமையான விமரிசகர் ஆன சண்முகனார் அவர்கள் விலகி வேறொரு உயர்ந்த பதவியான அவைத் தலைவர் பதவிக்குப் போய்விட்டதற்கு நான் கடவுளுக்கு எவ்வளவு நன்றி செலுத்த வேண்டும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். சட்ட சபையின் தலைவராக ஆர்.கே.எஸ். அவர்கள் அணுவளவும் பாரபட்சமில்லாமல் நடந்துகொண்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவரது திறமையை மெச்சி, அவருக்கு 'சர்' பட்டத்தை வழங்கியது.

பல எதிர்ப்புச் சக்திகள் செயல்பட்ட காரணத்தினால் 1934-இல் நடந்த மத்திய சட்டசபைத் தேர்தலில் சர். ஆர்.கே.எஸ். அவர்கள் வெற்றி பெற முடியாமற் போனது ஒரு துரதிஷ்டமே யாகும். இருப்பினும் இந்தத் தோல்வியே அவரை கொச்சி சமஸ்தானத்தின் திவானாகச் செல்ல வழிவகுத்தது. வைசிராய் வெலிங்டன் அழைப்பை ஏற்று அவர் கொச்சினுக்குச் சென்று தான் ஏற்ற ஒரு பொறுப்பான பதவிக்குச் சேர்ந்த பெருமை அளப்பரியது. ஜனநாயகப் பூர்வமான பொறுப்பாட்சியைக் கொச்சினில் முதன்முறையாக நிலைநாட்டியதே சர். சண்முகம் அவர்கள்தான். அரசாங்க அலுவல்களைக் கண்ணுங்கருத்துமாகக் கண்காணித்து சமஸ்தானத்தில் நிலவிய பூசல்களையும், ஊழல்களையும், கோளாறுகளையும் களைந்தெறிந்தார். தக்க நபர்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழுவை முதல்முறையாக அமைத்ததே அவர்தான்.

சமஸ்தானத்தின் பொருளாதாரத்தைப் பலப்படுத்தி இலாபகரமான வருவாய்க்கு வழிவகுத்தார். தென்னிந்தியாவின் தலைவாசல் (Gate way of South India) என்றும் 'அரபிக் கடலின் அழகு ராணி' என்றும் கொச்சி பாராட்டுப் பெற அங்குத் துறைமுகம் அமைத்த சாதனையே அது. தாழ்த்தப்பட்ட ஈழவர்களுக்குப் பல உரிமைகளை வழங்கினார். எர்ணாகுளத்தை ஓர் அழகு நகரமாக ஆக்கினார். கொச்சி ராஜ்யத்தின் மக்கள் பயனுறும் வகையில் மின்சாரத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தினார். ரயில் பாதை சிறப்பாகவும், சாலைகள் சீர் திருத்தப்படவும், போக்குவரத்துத்தொடர்பு உண்டாக நீண்டதொரு கால்வாய் வெட்டப்படவும் காரணமாக இருந்தார். மிக வயதான மகாராஜா ராமவர்மா அவர்கள் சர். ஆர்.கே.எஸ்.-விற்கு 'மாவீரர்' என்ற சிறப்புப் பட்டமளித்து கௌரவித்தார். மகாராஜாவின் மறைவிற்குப்பின் கொச்சின் திவான் பதவியை விட்டு விலகி கோவைக்குத்திரும்பினார்.

சர். சண்முகனார் அவர்கள் 1924-ஆம் ஆண்டு முதன்முறையாகத் தூதுக்குழு ஒன்றின் உறுப்பினராக


தமிழரசு

அடுத்து வரும் இதழ்களில் தொடரவிருக்கும் புதுமைகள்!

- மாதம் ஒரு மருத்துவர்!
  —நோய்கள் பற்றிய உங்கள் கேள்விகளுக்கு, மாதம் ஒரு மருத்துவர் பதில் கூறுகிறார்.
- இலக்கிய விருந்து
  —பண்டைய பெருமையைப் பறைசாற்றும் பகுதி
- மாணவர் இளைஞர் பக்கம்
  மாணவ மணிகள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், பொது அறிவு, சுயவேலை வாய்ப்புப் பற்றிய செய்திகளைத் தெரிந்து கொள்ளவும் உதவும் பகுதி.
- சிறுகதைச் செல்வம்:
  சிந்திக்கத் தூண்டும் சிறந்த சிறுகதைகள்.
- அன்றாட வாழ்வில் அறிவியல்
  அறிஞர் பெருமக்களின் அறிவியல் கட்டுரைகள்.
- கவிதைப் போட்டி
  வாசகர்களின் புலமையை வெளிப்படுத்தும் புதுப்பகுதி.

தமிழரசு

படிக்க - பயன்பெற - பாதுகாக்க

இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கிருந்து ஐரோப்பாவிலுள்ள சர்வதேச நிறுவனங்கள் சிலவற்றைக் கண்டுவிட்டு புதிய கருத்துக்களோடு தாயகம் திரும்பினார். 1926-ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடைபெற்ற 'காமன்வெல்த் பார்லிமெண்டரி' மாநாட்டில் இந்தியாவின் பிரதிநிதியாகப் பங்கு கொண்டு, பெரும்பாலான ஆங்கிலேயர்களை விட அற்புதமாக ஆங்கிலத்தில் பேசியதை ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் வியந்து பாராட்டின.

1940-இல் இந்திய பர்சேஸிங் மிஷினின் தலைவராக அமெரிக்கா சென்றார். 1944-இல் அமெரிக்காவிலுள்ள பிரிட்டன் வுட்ஸில் (Britton Woods) நடந்த சர்வதேச நிதி மாநாட்டில் பங்கு கொண்டு இந்தியாவின் சார்பில் எடுத்துரைத்த கருத்துக்கள் யாவரையும் வியக்கச் செய்தன.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் நாள் அதாவது நம் சுதந்திர நாளன்று அண்ணல் காந்தி அடிகளின் பரிந்துரையை ஏற்று பண்டித ஜவகர்லால் அவர்கள் விடுத்த அழைப்பை ஏற்று, இந்தியாவின் முதலாவது நிதி அமைச்சராகப் பொறுப்பேற்றார். திரு. ஆர்.கே.எஸ். அவர்கள் அவ்வமயம்தான் 'சர்' பட்டத்தையும் துறந்தார். ஓராண்டே நிதி அமைச்சராக இருந்து அண்ணல் காந்தி அடிகளே பாராட்டும் வகையில் நாட்டின் நிதி நிலையைச் சாமர்த்தியமாகக் கட்டிக் காத்தார். அவரால் தயாரிக்கப்பட்ட பட்ஜெட் அனைவராலும் போற்றி வரவேற்கப்பட்டது. ஆனால், கருத்து வேற்றுமைகள் சில எழுந்த காரணத்தினால் நிதி அமைச்சர் பொறுப்பில் இருந்து விலகிக் கொண்டார். அதற்கு முன்பு 'Sterling Balances' என்னும் சிக்கலான பிரச்சினையைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு திறமையாகப் பேசி, இந்தியாவிற்குச் சாதகமாகத் தீர்த்து வைத்தது வரலாற்றுச் சிறப்புடையதாகும்.

அறிஞர் சண்முகனார் அவர்களுக்கு 1948-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் அளித்து கௌரவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்கிலப் புலமை பெற்றிருந்த அவர் தமிழிலும் ஆழ்ந்த பற்றுக் கொண்டவர் என்பதை நாம் மறக்க முடியாது. தான் முதலில் தமிழின்பால் ஈடுபாடு கொள்ளாமல் போனதற்கு வருந்தி, பிறகு உலகம் போற்றும் தமிழ்ப் பேரிலக்கியங்களைக் கற்க ஆரம்பித்து, பிறகுதான் வாழ்வின் முழுமையைக் கண்டறியக் கூடிய மனிதன் ஆனேன் என்று அவர் கூறியுள்ளது, அவரது அடக்கமான மாண்பினைக் காட்டியது.

காவியங்களுள் உயிர்ப்பாயுள்ள சிலப்பதிகாரம் ஒரு தமிழ்க்கோயில் ஆகும் என்று திரு.வி.க. அவர்கள் சொல்வார்கள். அப்பேர்ப்பட்ட சிலப்பதிகாரத்தில் டாக்டர் சண்முகனார் அவர்கள் உள்ளத்தையே பறிகொடுத்து தமிழர் எல்லாம் மகிழ்ச்சியோடு வரவேற்கும்படியாக அவ்விலக்கியத்திற்குப் புத்தம்புத்துரை எழுதி வெளியிட்டது தமிழ் வரலாற்றில் ஒரு மைல்கல் போன்றதாகும். சிலம்புக்கெனப் பிறந்து, சிலம்புக்கென வளர்ந்து, சிலம்புக்கென வாழ்ந்தவர் டாக்டர் ஆர்.கே.எஸ். அவர்கள்.

1951-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராகப் பொறுப்பு ஏற்று நிர்வாகத்தில் செம்மையையும், தமிழிலக்கிய ஆராய்ச்சியில் புத்துணர்வினையும் ஊட்டினார். தமிழ்ப் பெருங் காப்பியமான கம்பராமாயணத்தினைச் சிறந்த பல்கலைக் கழகப் பதிப்பாக வெளியிடத் திட்டமிட்டது இவரது தமிழ்ப் பண்பாட்டினையே காட்டுவதாகும்.

வள்ளுவர் காட்டிய நெறியைக் கடைப்பிடித்து வாழ்தலே மக்களுக்கு நலன் பயப்பதாகும் என்பதைத் தமது அனுபவத்தால் அறுதியிட்டுக் கூறினார் திரு. சண்முகனார் அவர்கள், மற்றும் அவரது தமிழிசைத் தொண்டு செட்டி நாட்டரசர் அண்ணாமலை செட்டியாரின் பெருமதிப்பையும் நட்பையும் பெற்றுத் தந்தது. அண்ணாமலை அரசருக்கும் அவரது திருமகனார் முத்தைய வேளுக்கும் வலதுகரமாக அமைந்த டாக்டர் ஆர்.கே.எஸ். தமிழிசை இயக்கத்தில் உண்மையும், நியாயமும் இருப்பதை அருமையான வாதத் திறமையோடு பேசியதைத் தமிழ் உலகம் என்றும் மறக்காது.

'உள்ள நெகிழ்ச்சியையும் பக்தி உணர்ச்சியையும் எடுத்துக்கட்டும்படியாகத் தான் உலகிலே இசை பிறந்தது. சிறப்பாகத் தேவாரப் பண், பக்தி உணர்ச்சி ததும்பும் அரிய களஞ்சியம். எனவே அதைப் பாடுபவரும், கேட்பவர்களும் அதே உணர்ச்சியில் மூழ்க வேண்டியது அவசியம். பொருள் தெரியாமல் இசை பாடுவதில் பயனே கிடையாது'', என்று அவர் கூறுவதில் நியாயம் இருப்பதை நாம் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

டாக்டர் ஆர்.கே.எஸ். ஒரு சர்வதேசப் பொருளாதார நிபுணர்; அரசியல் விவேகங் கொண்ட தகைமையாளர்; நிர்வாகத்தில் திறமையாளர்; இலக்கிய மேதை; நாவீறு படைத்த அஞ்சாநெஞ்சம் படைத்தவர்; கலை அறிஞர்; தமிழிசைப் பிரியர்; பாவலர் போற்றும் முத்தமிழ்க் காவலர்; சமூகத் தொண்டில் திளைத்த செயல் மறவர்; சிறுமை சிந்தியாத பேராளர்; 'Character' என்ற ஆங்கிலச் சொல்லைத் தமிழில் மொழிப்பெயர்ப்பதென்றால் 'நாணயம்' என்றுதான் சொல்ல வேண்டும் என்று அருமையாக எடுத்துக் கூறியது மட்டுமல்லாமல் தன் வாழ்நாளெல்லாம் நாணயமாக நடந்து கொண்ட சான்றாண்மையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். நாணயத்தோடு நா நயத்தையும் இணைத்து,

'சொலல் வல்லன், சோர்விலன்
அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது'

என்னும் தெய்வப் புலவரின் கூற்றுக்கு ஒரு மகத்தான எடுத்துக்காட்டாக விளங்கிய அற்புதர் டாக்டர் ஆர்.கே.எஸ். அவர்கள், நந்தா விளக்காக அந்தமிலாக் காலம் வரை மனித இனத்தின் மேம்பாட்டிற்காக உறுதுணையாக ஒளிர்வதாக!

### வாலாஜா பேட்டையிலிருந்து ஐரோப்பாவிற்கு

• வாலாஜா பேட்டைக்கும், ஐரோப்பாவிற்கும் என்ன தொடர்பு இருக்க முடியும் என்று ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா! தமிழ்நாட்டின் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் உள்ள சிறிய நகராட்சியான வாலாஜா பேட்டையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பிரம்புப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான 'ஆர்டர்' கிடைத்துள்ளது.

'பிரம்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்' இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு உதவும் விதமாகக் கடந்த 35 ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறது. 1957-இல் தொடங்கிய இந்தச் சங்கத்தின் வர்த்தகப் பரிமாற்றம் ஆண்டொன்றுக்கு ஏழு இலட்சம் ரூபாய் அளவில் உள்ளது. இதன் மாத விற்பனை நாற்பதாயிரம் ரூபாயாகும்.

வேளாண் உற்பத்திக்கு

# முன்னோடித் திட்டங்கள்

மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் 29.10.1992 அன்று தமிழகத்தில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முன்னுரிமை அடிப் படையில் வேளாண்மைத் திட்டப் பணிகள் நடைபெறுவது குறித்து ஆய்வு செய்தார். அத்துறையின் செயலாக்கப்பணிகளைப் பரிசீலித்து வேளாண் உற்பத்தியைப் பெருக்க வும், விவசாயிகளின் வருமானத் தைப் பெருக்கவும், மேலான கவனத் தைச் செலுத்துமாறு அறிவுரை பகர்ந்தார்.

**வேளாண் உற்பத்தியைப் பெருக்க**

1. இப்போதுள்ள வேளாண் பயிற்சித் திட்டங்களைப் பயன் படுத்தி விவசாயிகள் மத்தியில் வேளாண்மை விரிவாக்கம், தகுதி வாய்ந்த நீர் நிர்வாகம், நவீன விவ சாய முறைகள் ஆகியவற்றைக் கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு எடுத்துரைத்தல்.

2. குறைந்த மழையினால் பாச னத்திற்கு நீர் குறைவாக உள்ள நேரத்தில் மாற்றுப் பயிர் சாகுபடி திட்டத்தைச் செயல்படுத்த ஒரு நீண்ட காலமுறை வகுத்துத் தருதல்.

3. மாநில முழுவதுமுள்ள பயனில்லா நிலங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றில் பயிர் வளர்ப்புத் தொழில்நலத் திட்டத்தின் அடிப் படையில் வேளாண் காடுகள், தோட்டக்கலை மற்றும் மானா வாரிப் பயிர்களைப் பயிரிடுதல்.

4. தோட்டக்கலை மற்றும் பயிர் வளர்ப்பிற்குச் சொட்டுநீர்ப் பாசனம் நீர்த் தெளிப்பான்' பாசனம் ஆகிய நுண் நீர் பாசனத் திட்டத்தைச் செயல்படுத்துதல்.

5. சென்னை, மதுரை, கோவை, நெல்லை போன்ற நகரங்களை ஒட்டிய நகர்ப்புறப் பகுதிகளில் தோட்டக்கலை மற்றும் காய்கறி உற்பத்தி ஆகியவற்றிற்கு முன் னுரிமை அளித்தல், உற்பத்தி செய் யும் விவசாயிகளிடமிருந்து அதிக இலாபம் சம்பாதிக்கும் இடைத்தரகர் களை அகற்றி, காய்கறி பயிரிடுதல், வளர்த்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றிற்குத் திட்டம் வகுத்துச் செயல்படுதல்.

6. தரிசு நிலங்களிலும் மழை பெய்யும் பகுதிகளிலும், எலுமிச்சை, கொய்யா, நார்த்தை ஆகிய குறைந்த விலையுள்ள பழங்களைத் தோட்டக் கலை வளர்ப்புத் திட்டத்தில் பயி ரிட்டு வளர்த்தல்.

7. மத்திய அரசின் சலுகை விலையில் விவசாயிகளுக்கு உரங்கள் கிடைக்க வழி வகுத்தல்.

8. திருவண்ணாமலை-சம்புவ ராயர் போன்ற மிகவும் பின்தங்கிய மாவட்டங்களில் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறி இயல் திட்டங்களுக்கு உரிய முன் னுரிமை வழங்குதல்.

9. மிக உயர்ந்த பயிர்களுக்கு, கழிவுநீரைப் பயன்படுத்துதல் பொதுப்பணித்துறை, குடிநீர் வடி கால் வாரியம், வேளாண்மைத் துறை ஆகிய துறைகள் இணைந்து செயல் வடிவத் திட்டத்தை உரு வாக்குதல்.

10. பாசுமதி நெல்லைப்போல வாசமிகு புதிய நெல் ரகம் 'ஜெஜெ 92'-ஐ வியாபார நோக்கோடு பயிரிட விரைவில் வெளியிடுதல்.

11. மாநிலத்திலுள்ள பள்ளி களில் 6-வது படிக்கின்ற 60,000 மாணவர்களுக்குத் தென்னங்கன்று பயிரிடுவதற்காகப் 'புரட்சித் தலைவி தென்னங்கன்று விநியோகத் திட்டத் தின்' கீழ் கூடுதலாக ரூ.10 இலட்சம் செலவில் விநியோகித்தல்.

12. தேசிய பால்பெருக்குக் கழகம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் பழங்கள் காய்கறிகள் உற்பத்தி யாளர்களுக்கு அதிக விலை கிடைக் கின்ற வகையில் சென்னை மாநகரத் தில் பழங்கள் காய்கறித் திட்டம் செயல்படுத்துதல்.

- என்கிற வகையில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரைக் கேற்ப வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்குச் செயல் வடிவக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டது.

**உணவு உற்பத்தியில் தமிழகம்**

1991-92-ஆம் ஆண்டில் நெல் உற்பத்தி 71.07 இலட்சம் டன்னா கும். இது 1989-90-வது ஆண்டில் 60.63 இலட்சம் டன்னாக இருந் தது. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தமிழகம் முதலிடம் பெற்றுத் திகழ்கிறது. அரிசி உற்பத்தி யைப் பொறுத்த வரையில் 2-வது இடத்திலும் தேங்காய் உற்பத்தியில் 2-வது இடத்திலும் இருக்கிறது.

இந்த ஆண்டு குறித்த காலத்தில் மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் மற்றும் இடு பொருள் விநியோகத்தின் காரண மாக வழக்கமாகப் பயிரிடப்படும் 6 இலட்சம் எக்டேருக்குப் பதில், இவ் வாண்டு 8.72 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

ரூ.10.85 கோடி மதிப்பீட்டில் 20 மாவட்டங்களில் நெல் உற்

> • தாய்மை, கண்ணீரைச் சிந்திக் கொண்டே தம்முடைய இனிய புன்முறுவல்களை என்றும் மலர்ந்த நிலையில் வைத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.
>
> —ரவீந்திரநாத் தாகூர்

பத்திக்கு ஒருங்கிணைப்புத் திட்டம் விரிவு படுத்தப்பட்டது. ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் ஜோவர் மற்றும் கேழ்வரகு உற்பத்தித் திட்டம் 15 மாவட்டத்திலிருந்து 17 மாவட்ட மாக விரிவுபடுத்தப்பட்டது.

உரங்களுக்கு ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.1,000 மானியம் வழங்குவதற்கு மத்திய அரசு ரூ.34.32 கோடி ஒதுக்கீடு செய்து இதன்மூலம் 45 இலட்சம் விவ சாயிகள் பயனடையும் வகையில் 4 இலட்சம் டன் உரம் விநியோகிக் கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன் படும் வகையில் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு நிறுவனங் களின் மூலம் - சிறிய மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.54 கோடி முதலீட்டில் உர மானியம் இந்த ஆண்டு தொடக்கத்திலேயே வழங் கப்பட்டது.

**எண்ணெய்ப் பனை உற்பத்தி**

எண்ணெய்ப் பனை உற்பத்தி தமிழ்நாட்டில் 15,000 எக்டேர் பரப்பில் பயிரிட வாய்ப்புள்ளது. தொடக்கமாக 2 நாற்றங்கால்களில் பயிரிட நடவடிக்கை எடுக்கப்படு கிறது. பட்டுக்கோட்டையில் 25,000 எண்ணெய்ப் பனை மரக் கொட் டைகள் பயிரிடப்பட்டுள்ளன.

கோஸ்டாரிகா-விலிருந்து நவம்பர் திங்களில் 3.4 இலட்சம் உயர் ரக எண்ணெய் தரும் பனை வித்துக் களை இறக்குமதி செய்து ரூ.1.07 கோடி செலவில் 2000 எக்டேர் பரப்பில் நாற்று உருவாக்கும் திட்டம் செயல்படவிருக்கிறது.

எண்ணெய் வித்துகள் உற்பத்தித் திட்டத்தின் கீழ், சூரியகாந்தி பயிரி டும் திட்டம் இப்போதுள்ள 25,000 எக்டேரிலிருந்து 50,000 எக்டே ருக்கு மாற்றப்படவிருக்கிறது. அதிகப் பலன் தரும் சூரியகாந்தி விதைகள் 18 டன் கொள்முதல் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கிறது. 50,000 எக்டேர் பரப்பில் சோயா பீன்ஸ் பயிரிடும் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

**எண்ணெய் வித்து பெருக்குத் திட்டம்**

எண்ணெய் வித்து பெருக்குத் திட்டத்தின்கீழ் 1000 எண்ணெய் வித்து வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் 4 இலட்சம் எண்ணெய் வித்து உற்பத்தியாளர் களுக்கு, தேசிய பால் பெருக்குத் திட்டத்தின் ரூ.40 கோடி நிதியுதவி யுடன் இத்திட்டம் செயல்படுத்தப் பட உள்ளது.

ரூ.10 கோடி மதிப்பீட்டில் சோயாபீன்ஸ் வளர்ப்புத் திட்டத் தையும் இந்த நிறுவனம் (TANCOF) செயல்படுத்தவிருக்கிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், திருச்சி மாவட்டத்திலுள்ள கும லூரில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் நிலக்கடலை வித்து உற்பத்தித் திட் டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது.

மேற்கண்ட திட்டங்களின் மூலம் தமிழகத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி சுமார் 5 இலட்சம் டன் உயர்வதுடன் ஏறத்தாழ 10 இலட்சம் விவசாயக் குடும்பங்கள் இதன்மூலம் பயன்பெறும்.

**வேளாண் காடு வளர்ப்புத் திட்டம்**

14 மாவட்டங்களில் 84 பகுதி களில் ரூ.31.65 கோடி மதிப்பீட் டில் ஐந்தாண்டுக் காலத் திட்டமாகத் தேசிய நீர் சேமிப்பு மேம்பாட்டுத் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட விருக்கிறது. 89,000 எக்டேர் குறி யீட்டில் கடந்த ஒன்றரையாண்டுக் காலத்தில் 17,400 எக்டேர் நிலப் பரப்பில் மண் மற்றும் ஈரப்பசைப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

தமிழ்நாடு வேளாண் வளர்ப்புத் திட்டத்தின்கீழ், உலக வங்கியின் உதவியுடன் பாலாறு, வெள்ளாறு ஆகிய நீர்ப் பாதுகாப்புக் கேந்திரங் களின் மூலம் 12 மாவட்டங்களில் ரூ.47.32 கோடி மதிப்பீட்டில் 36,000 எக்டேர் பரப்பில் இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன் தொடக்கமாக நீர்வளம், வேளாண்மைக்குரிய நிலவளம், கால்நடைத் தீவன உற்பத்தி வளம் ஆகியவற்றை நிர்மாணிக்கின்ற பணி முடிவுற்றுள்ளது.

கடந்த 1½ ஆண்டுகளில் வறட் சிக்கு இலக்காகும், பகுதிகளின் மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் 30,000 எக்டேர் நிலப்பரப்பில் ரூ.930 இலட்சம் செலவில் மண் வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, மேய்ச்சல் நில விரிவாக்கம் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

17 மாவட்டங்களில் உள்ள பத்தாயிரம் எக்டேர் தரிசு நிலத்தில் நிரந்தர மரம், வருடாந்திர ஊடு பயிர் பயிரிட ரூ.150 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

அடுப்பெரிக்கும் விறகை நம்பி வாழும் கிராமப் பெண்கள் பயன



டையும் வகையில், ரூ.6 கோடி முதலீட்டில் 100 கிராமங்களில் உள்ள 10 ஆயிரம் எக்டேர் நிலப் பரப்பில் மரம் வளர்போர் கூட்டுற வுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. தேசிய பால்பெருக்குக் கழகம், தேசிய தரிசு நில மேம் பாட்டுக் கழகம் மற்றும் தேசிய மரம் வளர்ப்போர் கூட்டுறவு இணையம் ஆகியவற்றின் மூலம் இத்திட்டத் திற்கு உதவி செய்யப்படும்.



**புதிய 'ஜெ.ஜெ. 92 அரிசி' வெளியீடு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகத்தின் ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையம் கண்டுபிடித் துள்ள, புதிய வாசமிகு அரிசியான 'ஜெ.ஜெ-92' 1993 பொங்கல் நாளன்று வெளியிடப்படும். இது பாசுமதி அரிசிக்கு இணையானதாக வும் எக்டேருக்கு 3.3 மெட்ரிக் டன் விளைச்சல் தரக்கூடியதுமாகும்.

காவிரி டெல்டா பகுதியில், தென்னை வளர்ச்சிக்காக 2 வகை உயர் ரகத் தென்னை வகைகளை தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழகம் அறிமுகப்படுத்தி யுள்ளது.

**பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசத் தென்னங்கன்றுகள்**

இளைய சமுதாயத்தினரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு ரூ.5 இலட்சம் செலவில் 10 மாவட்டங்களில் 30 ஆயிரம் தென்னங்கன்றுகள் பள்ளிக் குழந் தைகளுக்கு இலவசமாக வழங்க ஒரு புதிய திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

**சென்னை மாநகருக்குப் பழங்கள், காய்கறிகள்**

சென்னை நகரில் 10 பெரிய கடைகள் மற்றும் 150 விற்பனை நிலையங்கள் மூலம் - பழங்கள், காய்கறிகள், பூக்கள் போன்றவற்றை விற்பனை செய்ய ரூ.45 கோடி செலவில் பழங்கள் மற்றும் காய் கறித் திட்டங்களை 1993-94 முதல் அமல்படுத்த மத்திய பால்பண்ணை வளர்ச்சி வாரியம் இசைந்துள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் சென்னை யில் ஒரு மைய பதப்படுத்தும் பிரி வும் திருச்சியில் வாழைக்காக ஒரு குளிர் சாதனப் பிரிவும் அமைக்கப் படும். இந்தத் திட்டத்தின்மூலம் ஒரு இலட்சம் தோட்டக்கலை விவசாயி களுக்குச் சென்னையிலுள்ள சுமார் 30 இலட்சம் நுகர்வோருடன் தொடர்பு ஏற்படும்.

**தேசிய வாழை ஆராய்ச்சி மையம்**

திருச்சி மாவட்டம் பொதவூரில் ரூ.2 கோடி முதலீட்டில் தேசிய வாழை ஆராய்ச்சி மையம் ஒன்றை நிறுவ மத்திய அரசு அனுமதி வழங் கியுள்ளது.

**உதகை தாவரவியல் பூங்காவை அழகுபடுத்தும் திட்டம்**

இந்திய-ஜெர்மானிய மேம் பாட்டு நிதியுதவியின் கீழ் உதகை யிலுள்ள தாவரவியல் பூங்கா ரூ.71.5 இலட்சம் செலவில் அழகு படுத்தப்படுகிறது. இங்கு ஒரு கண்ணாடி மாளிகை, கலையம் சத்துடன் கூடிய நுழைவாயில் போன்ற சுற்றுலா அடிப்படை வசதிகள் உடையதாக அமைக்கப் படும்.

உதகை ஏரியில் மண் அரிப்பு, வண்டல் படிவு போன்றவற்றைத் தடுப்பதற்காக இந்த ஏரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நீர்ப்பிரி முகடுகளைச் சீர்ப்படுத்தும் திட்டம் ரூ.90 இலட்சம் செலவில் வேளாண் பொறியியல் துறையின் மூலம் செயல்படுத்தப்படும்.

பூங்காக்கள் வளர்ச்சித் திட்டத் தின்கீழ் 21 கோயில்கள் கண்டறியப் பட்டு இந்தக் கோயில்களுக்குத் தேவையான பூக்கள் மற்றும் பழங்கள் இந்தத் தோட்டங்களிலேயே கிடைக்கும் வகையில் ஏற்பாடு செய் யப்படும். தற்போதுள்ள தோட்டக் கலைப் பூங்காக்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் சிறிய பாசனத் திட்டத்துடன் மேம்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் மாநிலத் திலுள்ள சுமார் 20 ஆயிரம் விவ சாயிகள் பயன்பெறுவர்.

**தோட்டக்கலை ஏற்றுமதி வளர்ச்சி மண்டலம்**

மாம்பழத்துக்குத் தருமபுரி மாவட்டம், வாழைப்பழத்திற்குத் திருச்சி மாவட்டம், திராட்சைப் பழங்களுக்கு மதுரை மாவட்டம் என அடையாளம் கண்டுகொள்ளப் பட்டுள்ளது. இந்தப் பழங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய, இந்த இடங்களில் தோட்டக்கலை ஏற்றுமதி வளர்ச்சி மண்டலங்கள் அமைக்க மத்திய அரசை அணுகத் தகுந்த செயற்குறிப்புகள் தயாரிக்கப் பட்டு வருகின்றன.

**சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு**

மாண்புமிகு முதல்வரின் ஆலோ சனையின் பேரில், தருமபுரி மாவட் டத்தில் 'சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பை' நிறுவ மத்திய அரசு அனுமதி வழங்கி யுள்ளது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக் கட்டளை இதற்கான மாதிரித் திட்

உத்தைத் தயாரித்து வருகிறது. விவசாய மேம்பாடு, வேளாண் - காடு வளர்ப்பு, பெண் விவசாயிகளுக்கு விவசாயத் தொழில் நுட்பப் பயிற்சி போன்ற பணிகள் ரூ.330 கோடி முதலீட்டில் 5 வெளி உதவித் திட்டங்களின் மூலம் செயல்படுத்தப்படவிருக்கிறது.

தமிழ்நாடு விவசாய மேம்பாட்டுத் திட்டம் ரூ.309.29 கோடி உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டுகளில் ரூ.14.54 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் ரூ.40 கோடி கூடுதலாகச் செலவழிக்கப்படும். இந்தப் பல நோக்குத் திட்டம் விவசாயத் திட்டமிடல், விதை உற்பத்தி, கால்நடை மேம்பாடு, வனவளம் போன்ற பணிகளுக்கு உதவும். மாநிலத்தில் விவசாய முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டங்களில் கிராமப்புறச் சாலை அமைத்தல், கிராமக் குடிநீர் விநியோகம் போன்ற திட்டங்களும் இதன் மூலம் செயல்படுத்தப்படும்.

டானிடா உதவியுடன் நடைபெறும் 'வேளாண் திட்டத்தில் தமிழகப் பெண்கள்' என்ற திட்டத்தின் கீழ் பல்வேறு விவசாயத் தொழில்நுட்பம் குறித்து 6 மாவட்டங்களில் சுமார் 11,400 விவசாயப் பெண்மணிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் முதலீடு ரூ.4.12 கோடி.

வேளாண் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ், மாநிலத்தில் வறண்ட தரிசு நிலங்களில் ரூ.175 இலட்சம் செலவில் 90 இலட்சம் மரக்கன்றுகள் நடப்படும்.

நெல்லை-கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் டானிடா திட்டத்தின் கீழ் ரூ.6.47 கோடி செலவில் காற்று அரிமானத்தால் பாதிக்கப்பட்ட 5,725 எக்டேர் பிரச்சினைக்குரிய நிலம் விரிவான நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

உணவு-வேளாண் நிறுவனத்தின் (F.A.O) உதவியுடன் அவினாசிலிங்கம் கிராமியப் பல்கலைக் கழகத்தின் மூலம் ரூ.25 இலட்சம் செலவில் 8 மாவட்டங்களிலுள்ள 25 ஆயிரம் பெண் விவசாயிகளுக்கு 'அறுவடைக்குப் பிந்திய தானியப் பாதுகாப்புத் தொழில் நுட்பம்' குறித்துப் பயிற்சி அளிக்கப்படும்.

### 1993-94 முதல் செயல்படும் 5 திட்டங்கள்

கீழ்க்கண்ட ஐந்து திட்டங்களை வெளியார் நிதியுதவியுடன் செயல்படுத்த அனுமதி வழங்குவது இறுதிக் கட்டத்தில் உள்ளது.

அவையாவன:

1. உலக வங்கி உதவியுடன் வேளாண் மனிதவள மேம்பாட்டுத் திட்டம்

2. ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் நிதியுதவியுடன் ரூ.20.35 கோடி முதலீட்டில் வேளாண் விளைபொருள் விற்பனை மேம்பாட்டுத் திட்டம்.

3. ஐரோப்பியப் பொருளாதார சமூகத்தின் உதவியுடன் ரூ.81.80 கோடி செலவில் தென்னை மேம்பாட்டுத் திட்டம்.

4. காமராசர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.12.50 கோடி செலவில் 18 ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பில் விரிவான நீர்வள மேம்பாட்டுத் திட்டம்; இந்தத் திட்டத்துக்கு டானிடா நிதியுதவி அளிக்கும்.

5. டானிடா நிதியுதவியுடன் நடைபெறும் 'வேளாண் திட்டத்தில் தமிழகப் பெண்கள்' திட்டத்தின் இரண்டாம் பகுதி ரூ.15 கோடி செலவில் மாநிலம் முழுவதும் 7 ஆண்டுக் காலத்தில் செயல்படுத்தப்படுகிறது.

வெளியார் நிதியுதவி தேவைப்படும் கீழ்க்கண்ட மூன்று வேளாண் திட்டப் பணிகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த மூன்று திட்டங்களுக்கு ரூ.250 கோடி தேவைப்படுகிறது. இதற்கான கருத்துரு தயாரிக்கப்பட்டு வருகிறது.

* 4 மாவட்டங்களில் ரூ.150 கோடி செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் 50 ஆயிரம் எக்டேர் நிலச் சீரமைப்புத் திட்டம்.

* உணவு-வேளாண் நிறுவன (F.A.O) உதவியுடன் ரூ.75 கோடி செலவில் மலைப்பகுதிகளில் வேளாண் மேம்பாட்டுத் திட்டம்.

* ஐரோப்பியப் பொருளாதார சமூக நிதியுதவியுடன் தென்னை விவசாயிகளுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்கும் வகையில் வாசனைப் பொருட்கள் மேம்பாட்டுத் திட்டம்.

### விவசாயப் பணிகளை இயந்திர மயமாக்குதல்

விவசாயப் பணிகளை இயந்திர மயமாக்கும் திட்டத்தைத் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் மேற்கொண்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 200 டிராக்டர்களும் 2,425 பவர் டில்லர்களும் (Power Tillers) வாங்கப்பட்டுள்ளன. பவர் டில்லர்களுக்கு ரூ.240 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 200 பவர் டில்லர்களும், 30 டிராக்டர்களும் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன. இதுதவிர தமிழ்நாடு வேளாண் பொறியியல் கூட்டுறவு இணையத்தின் (ENCOFED) மூலம் பொருளாதார நிலையில் நலிந்த விவசாயிகளுக்கு டிராக்டர்கள் மற்றும் பவர் டில்லர்கள் வாடகைக்கு வழங்கப்படுகின்றன. மேலும் இந்த இணையத்தின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தெளிப்பான், உரம், பூச்சிக் கொல்லி மருந்து, பம்பு செட் போன்ற இடுபொருட்கள் வழங்கப்படுகின்றன. 1992-93-இல் ரூ.70 கோடி செலவில் இந்த இணையத்தின் மூலம் உரங்கள் விற்பனை செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**• கண்ணுக்கு மை இடுவதைப் போலப் பிறமொழிகளைப் பயன்படுத்த வேண்டும்; மை அதிகமானால் எப்படி கண்ணை அரித்து விடுகிறதோ, அதைப்போல பிறமொழிகளை அதிகம் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும்.**

**—அறிஞர் அண்ணா**

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.



தமிழரசு
பொங்கல் இதழ்—
16.1.1993
தருமபுரி மாவட்டச்
சிறப்பிதழாக
மலர்கிறது!
• மாவட்ட வரலாற்றுச் சிறப்புகள்!...
• அரசு ஆற்றிவரும் அரும்பணிகள்!...
• நல்வாழ்வு பெற்ற நலிவுற்றோர்
சந்திப்புக் கட்டுரைகள்!
• அழகிய புகைப்படங்கள்!...
• அத்தனையும் தாங்கி பத்திரப்படுத்தத்
தக்கதாக அற்புதமாய் வெளிவருகிறது!
படிக்க - பயன்பெற - பாதுகாக்க